YARL OSAI

யாழ் ஓசை

வார இதழ்

டிச.31 - ஜன 06

ஓசை : 01 | நாதம் : 09 | வெள்ளிக்கிழமை 31.12.2010 | வார இதழ் | விலை : ரூபா 15.00

# கடத்தல், படுகொலைகளால் அதிர்ச்சியில் குடாநாட்டு மக்கள்




## ஒருமாத காலத்தில் இருவர் படுகொலை; ஒருவர் வெட்டிக்கொலை

(நமது நிருபர்)

கொலைகள், கொள்ளைகள் மலிந்த இடமாக யாழ். குடாநாடு மாறிவருகின்றது. இதனை யார் செய்கின்றார்கள்? என்பதும் மர்மமாகவே உள்ளது. இதனை எவரும் கட்டுப்படுத்த மாட்டார்களா என்ற ஏக்கத்தில் மக்கள் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இந்த மாதத்தில் மாத்திரம் இருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டும் (6ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் சைக்கிளில் வந்த இளைஞர் கடத்தல்

வண்ணார்பண்ணை,

யாழ். உரும்பிராய் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் வாகனத்தில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உரும்பிராய் மூன்று கோயில் வீதிப் பகுதியில் நேற்றுக் காலை 8.15 மணியளவில் சைக்கிளில் பயணம் செய்த குறித்த இளைஞரைப் பின் தொடர்ந்து வந்த வாகனத்தில் இருந்தவர்கள் கடத்திச் செல்ல முற்படுகையில் சைக்கிளை விட்டு (6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக வன்னி மாணவரின் விபரங்களைத் திரட்டும் இராணுவத்தினர்

(யாழ்ப்பாண மேலதிக நிருபர்)

வன்னியை சொந்த இடமாகக் கொண்ட பல்கலைக்கழக மாணவர்களின் விபரங்களை இராணுவத்தினர் சேகரித்து வருகின்றனர். வன்னிப் பகுதி பாடசாலைகளில் கல்வி பயின்று நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் கல்வி பயிலும் மாணவர்களின் விபரங்களையே இராணுவத்தினர் திரட்டி வருகின்றனர். க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் கற்ற ஆண்டு, சித்தியடைந்த பாடங்களையும், கல்வி பயிலும் பல்கலைக்கழகம், கற்கும் துறை போன்ற விபரங்களையும், (6 ஆம் பக்கம் பார்க்க)

## இனக்கலவரத்தைப் போல் நாட்டில் மதக்கலவரத்தை தோற்றுவிப்பதற்கு ஹெலஉறுமய வித்திடுகின்றது

### ஐ.தே.க. கடும் கண்டனம்

(ஜே.ஜி.ஸ்டீபன்)

தேசிய இனப்பிரச்சினையிலும் அதனால் ஏற்பட்ட அழிவுகள் துயரங்களில் இருந்தும் மீண்டுவர முடியாத நிலைமை காணப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் ஜாதிக்க ஹெல உறுமயவின் கருத்துக்கள் இந்நாட்டில் மதக் கலவரத்தை தோற்றுவிப்பதற்கும் மீண்டும் இந்த நாடு பற்றியெரிவதற்குமே வழிவகுத்துள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. சிங்களவர்கள் வடக்கில் மீள்குடியேற்றப்படுவது தொடர்பில் அரசாங்கத்திடமும் ஜனாதிபதியிடமுமே கேள்வியெழுப்ப வேண்டுமே தவிர கர்தினால் மெல்கம் ரஞ்சித்திடம் அல்ல. ஹெல உறுமயவின் இனவாதத் தீயினுள் கத்தோலிக்க திருச்சபையையும் இணைத்து களங்கத்தை ஏற்படுத்தும் இந்த பாரதூரமான சிந்தனையை, எதிர்க்கட்சி என்ற வகையிலும் சகலருக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையிலும் மிக வன்மையாகக் கண்டிப்பதாகவும் (6 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏ-9' வீதியின் மோசமான நிலையால் பயணிகள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள்

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையிலான தரைவழி போக்குவரத்துக்கான ஏ-9 வீதி மிகவும் மோசமாக காணப்படுவதாகவும் வவுனியாவிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்ய பல மணி நேரம் செலவு செய்ய வேண்டியிருப்பதாகவும் பயணிகள் மிகுந்த விசனம் தெரிவிக்கின்றனர்.

பல வருட காலமாக ஸ்தம்பிதம் அடைந்திருந்த ஏ-9 வீதி யுத்தம் முடிவுக்கு வந்ததை தொடர்ந்து மீண்டும் செயற்பட ஆரம்பித்தது. இந்நிலையில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக ஏ9 வீதியூடாக போக்குவரத்து இடம்பெற்று வருகின்ற போதிலும் அதன் திருத்த பணிகள் மிகவும் மந்த கதியிலேயே இருப்பதாகவும் இந்நிலையில் அண்மையில் வன்னியில் பெய்த அடைமழை காரணமாக வீதி முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கபடுகின்றது.

இன்றைய சூழ்நிலையில் அதிக வடபகுதி பயணிகளும் தென்பகுதி உல்லாச பயணிகளும் கனரக வாகனங்களும் அமைச்சர்கள் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்களும் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் பயணம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் 24 மணி நேரமும் ஏ-9 வீதியூடாக பயணங்கள் தொடர்ந்து வருகின்றன.எனினும் வீதி புனரமைப்பு மந்த கதியில் இருப்பதால் சகல தரப்பினரும் மிகுந்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் முக்கிய பிரதான வீதியாக விளங்கும் ஏ-9 வீதியை சரியான முறையில் திட்டமிட்டு சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகும். வவுனியாவிலிருந்தும் யாழ்ப்பாணம் வரையிலானக வீதியே மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதாகவும் அவை குண்டும் குழியுமாக காட்சியளிப்பதாக பலரும் தெரிவிக்கின்றனர். இதனால் சுமார் 4 மணி நேரத்தில் செல்ல வேண்டிய பயணத்தை 6 மணித்தியாலயத்திற்கும் அதிகமாக செலவிட வேண்டியிருப்பதாக பயணிகள் சுட்டிகாட்டுகின்றனர்.

இவ்வாறு வீதிகள் மோசமாக பழுதடைந்து இருப்பதால் வாகனங்களும் ஆங்காங்கே பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.சாதாரண சிறிய ரக வாகனங்களில் பயணிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. வீதிகளில் மோசமான கிடங்குகள் காணப்படுவதுடன் அவற்றில் நீர் நிறைந்தும் போயுள்ளதால் விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுகின்றன.

நாட்டில் இதர பகுதி பிரதான வீதிகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் ஏ-9 வீதியே மிகவும் மோசமாக காணப்படுகின்றது. அதேவேளை அதிகளவு போக்குவரத்து இடம்பெறுவதும் இக்குறித்த வீதிகளில் ஆகும். எனவே அப்பாதையில் பயணிக்கும் அமைச்சர்கள் மற்றும் அரச பிரதிநிதிகளாவது ஏ-9 வீதியின் கேவலத்தை சம்பந்தப்பட்வர்களின் கவனித்திற்கு கொண்டவந்து அவற்றை சரியான முறையில் திருத்தியமைக்க முன்வர வேண்டும்.

இன்று வடக்கில் அதிக அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் வங்கி வர்த்தக செயற்பாடுகள் களை கட்டியுள்ளதாகவும் தெரிவிக்கும் நியைில் போக்குவரத்துக்கான வீதி இவ்வாறு மோசமாக இருக்குமேயானால் முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டவே செய்வார்கள்.

இதனால் சகல தரப்பினரும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும்.

# தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் கிளை நிறுவனம் ஜனவரியில் யாழ்ப்பாணத்தில்

## இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் தகவல்

(நமது நிருபர்)

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் கிளை நிறுவனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியதாவது,

தற்போதைய நிலைமையில் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் கிளைகள் கொழும்பு கண்டி குருணால் காலி ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளன. அவற்றை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டு செல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் முதற்த[illegible]வயாக வட மாகாணத்துக்கு செல்லவுள்ளது.

அதன்படி கிளை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கட்டடங்களை அமைக்கும் வேலைத்திட்டங்கள் முடிந்துவிட்டன. ஜனவரி மாதத்தில் இந்த கல்வி நிறுவனத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜனவரி மாதத்துக்குள் தொழில்நுட்பவியல் வித்தியாலயம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தொழில்நுட்பவியல் வித்தியாலயங்களை மேற்கத்தேய நாடுகளில் சிறிய பல்கலைக்கழகங்கள் என்று கூறுவார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்திட்டமான ஒரு மாகாணத்துக்கு ஒரு தொழில்நுட்பவியல் வித்தியாலயம் என்ற திட்டத்தின் கீழ் வட மாகாணத்துக்கான வித்தியாலயம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும்.

# நல்லிணக்க ஆணைக்குழு அமர்வில் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி இல்லை

காலிபூசா தடுப்பு முகாமில் நேற்று நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் செய்தி சேகரிக்கச் சென்ற அனைத்து ஊடகவியலாளர்களும் பாதுகாப்புத் தரப்பினரால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பூசா அமர்வின் போது ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் விடுத்திருந்த அறிவித்தலுக்கேற்ப அதன் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்லையிடம் ஊடகவியலாளர்கள் பலர் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றிருந்தனர். அதன் பிரகாரம் நேற்று காலை சுமார் பத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் பூசா முகாமைச் சென்றடைந்திருந்ததுடன் ஆரம்பத்தில் அவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பமாவதற்கு சற்று முன் ஊடகவியலாளர்களிடம் வந்த பாதுகாப்பு அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்றி அவர்களுக்கு செய்தி சேகரிக்க இடமளிக்க முடியாதென அறிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முகாம் என்பதால் அதன் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை இறுக்கமாகப் பேண வேண்டியுள்ளதாகத் தெரிவித்த பாதுகாப்பு அதிகாரிகள் ஊடகவியலாளர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

# உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட விரும்புபவர்கள் விண்ணப்பியுங்கள்

## கயந்த கருணாதிலக்க எம்.பி. வேண்டுகோள்

(நமது நிருபர்)

அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் வடக்கு கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் போட்டியிட எதிர்பார்ப்பவர்கள் விரைவாக விண்ணப்பிக்கவேண்டும் என்று கட்சியின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் வேலைத்திட்டங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்று விபரிக்கையிலேயே கயந்த கருணாதிலக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது, எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலானது ஐக்கிய தேசிய கட்சிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அண்மையில் நடந்து முடிந்த கட்சியின் விசேட சம்மேளனத்தின் பின்னர் எமது கட்சியில் பாரிய எழுச்சி ஒன்று தெரிகின்றது.

அதன்படி அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு அதிகமானவர்கள் முன்வந்துக் கொண்டிருப்பதுடன் விருப்பம் வெளியிட்டு வருகின்றனர். இந்நிலையில் உள்ளூராட்சிமன்ற தேர்தலை பொறுத்த வரை ஐக்கிய தேசிய கட்சி சிறந்த முறையில் தயாராகி வருகின்றது. கிராம மட்டத்திலும் சிறப்பாக தயாராகின்றோம்.

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்கள் கட்சியின் தலைமையகத்துக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். போட்டியிட விரும்புபவர்கள் விண்ணப்பங்களை அனுப்பியதும் பொருத்தமானவர்கள் வேட்பாளர்களாக களமிறக்கப்படுவார்கள். தற்போதைய நிலைமையில் ஆரம்பகட்ட தயார் நிலையில் எமது கட்சி இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் 40வீதமானோர் பெண் தொழிலதிபர்கள்

## ஆய்வில் தெரிவிப்பு




அமெரிக்காவில் 40 சதவீத தொழிற்சாலைகளுக்கு பெண்கள் அதிபர்களாக உள்ளனர். அமெரிக்காவின் வெர்ஜினியாவில் உள்ள பெண்கள் வர்த்தக ஆராய்ச்சி மையம் இது தொடர்பான ஆய்வை நடத்தியது. ஆய்வில் தெரிய வந்திருப்பதாவது: அமெரிக்காவில் சுமார் 1.10 கோடி தொழிற்சாலைகளுக்கு பெண்கள் அதிபர்களாக அல்லது கூட்டு அதிபராக உள்ளனர். அதாவது 40 சதவீத தொழிற்சாலைகள் இவர்கள் கையில். பெரும்பாலும் சில்லறை மற்றும் சேவை தொழிற்சாலைகளை நிர்வகித்து வருகின்றனர்.

2002ல் இருந்து 2007க்கு இடைப்பட்ட காலத்தில் ஆண்கள் உருவாக்கியதை விட இருமடங்கு தொழிற்சலைகளை பெண்கள் உருவாக்கியுள்ளனர். பயங்கர பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் தொழில் தொடங்க பெண்களுக்கு தைரியம் தேவை. ஆனால் மீண்டு வரும் பொருளாதாரத்தில் அவர்களுக்கு வளமும் பொறுமையும் தேவை. இவ்வாறு ஆய்வில் கூறப்பட்டுள்ளது.


இது குறித்து நாஸ்வில்லே பெல்மான்ட் பல்கலைக்கழக தொழில்முனைவோர் மையஇயக்குநர் ஜெப்ரி கார்ன்வால் கூறுகையில் 'எப்படி சிக்கன முறையில் தொழிற்சாலையை நடத்த முடியும் என்ற புதிய இலக்கணத்தை பெண்கள் கண்டுபிடித்துள்ளனர். அப்போது தான் பொருளாதார அதிர்ச்சிகளுக்கு ஈடு கொடுக்க முடியும்' என்றார்.

# ஆண் ஓரினசேர்க்கையாளர்களுக்கு ஆடம்பர ஹோட்டல்



மெக்சிகோவில் ஆண் ஓரினசேர்க்கையாளர்கள் மட்டுமே தங்கும் நவீன சொகுசு ஹோட்டல் அடுத்த மாதம் திறக்கப்படவுள்ளது. மெக்சிகோவின் ரிவேரா மயூயோ நகரில் உள்ள தொல்லியல்துறை பகுதியில் ஆண் ஓரின சேர்க்கையாளர்கள் மட்டுமே தங்கும் வகையிலும், சுற்றுலா வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்கும் அதிநவீன சொகுசு ஹோட்டல் திறக்கப்படவுள்ளது. உலகம் முழுவதும் ஆண் ஓரினசேர்க்கையாளர்கள் மற்றும் பெண் ஓரினசேர்க்கையாளர்கள் உள்ளனர். இவர்களில் சிலர் அவர்களது குடும்பத்தினரால் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். இந்நிலையில் மெக்சிகோவின் ரிவைரோ நகரில் ஆடோனிஸ் துல்லூம் எனும் பெயரில் சொகுசு ஹோட்டல் அடுத்த மாதம் புத்தாண்டினையொட்டி திறக்கப்படவுள்ளதாக இதன் இயக்குனர் பாட்ரிக் லூரான்ஸ் தெரிவித்தார். இங்கு ஆண் ஓரின சேர்க்கையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். பெண் லஸ்பியன்கள், குழந்தைகளுக்கு அனுமதியில்லை. இந்த ஹோட்டலில் 100 ஆண் ஓரின சேர்க்கையாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நேபாளத்தில் யானைகள் அழகி போட்டி



மிகப் பெரிய விலங்கான யானைகள், அழகிலும் நாங்கள் சளைத்தவர்களல்ல என்று நிரூபிக்கும் வகையில் நேபாளத்தில் யானைகளுக்கான அழகிப் போட்டி நடந்தது. மிஸ் எலிபன்ட் இன்டர்நஷனல் பட்டத்துக்காக சிட்வான் தேசிய பூங்காவில் நடந்த போட்டியில் இருட்டில் கீழே அனைவரும் கால் மீது கால் போட்டு அமர்ந்து குறிப்பெடுக்க, மொடலழகிகளை போல காலை மாற்றி மாற்றி பெண் யானைகள் பூனை நடை போட்டு வந்தன.

அவற்றின் நடை மட்டுமின்றி தூய்மை, சுகாதாரம், ஒழுக்கம், சொல் பேச்சு கேட்டல் ஆகிய அடிப்படையில் மிஸ் இன்டர்நஷனல் தேர்வு நடந்தது. 6 யானைகள் பங்கேற்ற போட்டியில் 28 வயதான சான்சால்கலி என்ற யானை பட்டத்தை வென்றது. அடுத்த 2 இடங்களை திரேந்திரகாலி (35), பசந்தகலி (40) ஆகியவை பிடித்தன.

# அவுஸ்திரேலியாவில் வரலாறு காணாத வெள்ளம்



அவுஸ்திரேலியாவின் சில பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கன மழையால் பொரும்பாலான அணைகள் நிரம்பி வழிகின்றன.

தெற்கு மற்றும் மத்திய குயின்ஸ்லாந்தின் எமரால்ட் ராக்கம் ப்டன் மற்றும் கடற்கரை நகரான பண்டபர்க் நகரங்களில் உள்ள ஆறுகளில் தொடர்ந்து நீரின் அளவு வேகமாக உயர்ந்து வருகின்றன. பிண்டபர்க் நகரில் உள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள 200 வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர். ரூ. 225 கோடிக்கு மேல் சேதம் ஏற்பட்டதாகவும் இது 50 ஆண்டுகளில் காணாத வெள்ளம் என்றும் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தொடர் மின் வெட்டால் தள்ளாடும் நேபாளம்

நேபாள் நாட்டில் நீர் நிலைகள் மற்றும் ஆறுகளில் நீர் குறையத்தொடங்கியுள்ளதால் கடும் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வாரத்தில் 10 மணி நேரத்திற்கும் அதிகமாக மின்வெட்டு ஏற்பட்டு வருவதாகவும் அந்நாட்டு மின்ஆணையத்துறை தெரிவித்துள்ளது. மலைப்பிரதேசமான நேபாள நாட்டில் நீர் நிலைகள், ஆறுகளில் நீர் குறைந்து வருவதே இந்த மின்தட்டுப்பாட்டிற்கு காரணம் என கூறப்படுகிறது. இதுவரை 54 மணிநேர மின்வெட்டு அமுல் செய்யப்பட்டதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இது குறித்து நேபாள நாட்டின் எரிசக்தித் துறை அமைச்சர் பிரகாஷ் ஷகாரன் மகாத் தெரிவிக்கையில், நாட்டில் மின் தேவை பெருமளவு நீர்மின் உற்பத்தியினை நம்பியே இருப்பதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் கடந்த பெப்ரவரி மாதம் நாள் ஒன்றுக்கு 14 மணி நேர மின்வெட்டு அமுலில் இருந்ததாக கூறினார்.

# மனைவியை கருணைக்கொலை செய்த கணவன்



தாய்வானில் 83 வயது முதியவர் ஒருவர் பார்கின் சன் நோயால் அவலப்பட்டுக் கொண்டிருந்த 80 வயது மனை வியை கடந்த ஞாயிற்றுக் கிழமை கருணைக் கொலை செய்து உள்ளார். மனைவியை கருணைக்கொலை செய்யப் போகின்றார் என்று இவர் ஏற்கனவே சொந்த இணையத் தளத்தில் விளக்கமாக எழுதி இருந்தார்.

மனைவிக்கு நித்திரை மருந்துகள் கொடுத்தார். பின்னர் ஸ்கூட் ரைவர் கருவியை மண்டை ஓட்டின் மேல் வைத்து சுத்தியலால் அறைந்து இருக்கின்றார். பொலிஸில் இவர் சுயமாகவே சரண் அடைந்து உள்ளார்.

இத்தம்பதிக்கு இரு புதல்வர்கள். பிள்ளைகள் அமெரிக்காவில் குடியேறி உள்ளனர். இவர்தான் மனைவியை பராமரித்து வந்திருக்கின்றார்.

இவரின் மனைவிக்கு காலில் முறிவும் உண்டு.முதிய வயதில் நோய்களால் வருந்துகின்றமையை இத் தம்பதி விரும்பி இருக்கவில்லை. ஒன்றாக தற்கொலை செய்கின்றமை குறித்துக்கூட இருவரும் ஆலோசித்து வந்திருக்கின்றனர்.

இவர் இணையத்தில் பல சந்தர்ப்பங்களில் இவை குறித்து எழுதி வந்திருக்கின்றார். 'நாங்கள் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தோம்.

இவ்வாழ்க்கை போதுமானது.

உயிரை மாய்க்கின்றமை குறித்து சுமார் பத்து வருடங்களுக்கு முன்பே இருவரும் கலந்தாலோசித்து இருக்கின்றோம்.

எனக்கு முன் அவர் இறப்பாரானால் அது அவரின் அதிஷ்டம் என்றுதான் கூற முடியும்.தேவை ஏற்பட்டால் கருவி ஒன்றின் மூலம் மண்டை ஓட்டை துளைப்பேன்.

இவ்வாறு கடந்த 05 ஆம் திகதி இணையத்தில் எழுதி இருந்தார். தாய்வானில் கருணைக் கொலை ஒரு குற்றச் செயலாகும். எனவே இவர் மீது படுகொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2010 டிசம்பர் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## மீள்குடியேறிய மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள்

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது. அடிப்படை வசதிகள் சரியான வகையில் பூர்த்தி செய்யப்படாது போனால் மக்கள் மீள்குடியேறியும் பயனற்ற நிலைமையே தொடர்வதாக இருக்கும்.

வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் உட்கட்டமைப்பு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் மழை வெள்ளம் போன்ற நிலைமைகள் ஏற்படும் போது மக்களின் பாதிப்புக்களும் பன்மடங்கு அதிகரித்துச் செல்வதாகவே உள்ளது. மீள்குடியேறிய மக்களின் முக்கிய பிரச்சினையாக வீட்டுப் பிரச்சினையே இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். எனினும், அதற்கு இதுவரை சரியான தீர்வு கிட்டாதிருப்பது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் விரக்திக்கும் வேதனைக்கும் இட்டுச் சென்றுள்ளது.

இதேவேளை, மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் மிக முக்கியமான தேவையாக வீட்டுப்பிரச்சினையே காணப்படுவதாகவும் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களுக்கு கடந்த மாதம் சென்று மக்களுடன் உரையாடியபோது இதனை அவதானிக்க முடிந்ததாகவும் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடனும் இதர வேலைத்திட்டங்களின் ஊடாகவும் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட இதர தமிழ்க்கட்சிகளும் அரசாங்கத்துக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கி திட்டங்களை முன்னெடுக்க தம்மாலான பங்களிப்பைச் செய்து வருகின்றன.

இருந்தபோதிலும், அபிவிருத்தித் திட்டங்கள் மிகவும் மந்த கதியிலேயே இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. குறிப்பாக, இந்திய அரசினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டத்தின் அடிப்படையிலான வேலைகள் இன்னும் சீராக ஆரம்பிக்கப்படாமலேயே இருந்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய மழைக்காலம் முடிவடைந்த பின்னர் இப்பணிகள் ஆரம்பிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், புதிய வருடம் ஏப்ரல் மாதமளவில் ஒரு தொகுதி வீடுகள் மக்கள் குடியிருப்புக்கு தயாராகுமென இந்திய தூதரக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அதேவேளை, இத்திட்டத்தின் கணிசமான பகுதி வட மாகாணத்தின் தேவையை கருத்திற் கொண்டதாக அமையுமெனவும் கிழக்கு மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் சில பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுமென்றும் வட மாகாணத்தைப் பொறுத்தமட்டில் ஐந்து மாவட்டங்களில் இத்திட்டம் பரவலாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்திய அரசின் உதவியுடனான வீடமைப்புப் பணிகள் தொடர்பில் ஊடகங்களில் வெளிவந்த பல்வேறு கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அதற்கான விளக்கத்தை அளித்திருந்ததுடன் எவ்வித தங்கு தடையுமின்றி வீடமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுமென்றும் உறுதியளித்துள்ளது.

எவ்வாறிருந்தபோதிலும் மக்களின் அடிப்படை அத்தியாவசியத் தேவைகள் பின்போடக்கூடியவையோ காலம் கடத்தக் கூடியவையோ அல்ல.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் வட பகுதி மக்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அந்தவகையில், குறைந்தபட்சம் அவர்களின் அடிப்படை வசதிகளையேனும், சாத்தியமான அளவு விரைவாக உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது மிகவும் இன்றியமையாதது. இதனிடையே வன்னியில் பெய்த அடைமழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மேலும், மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது குறித்தும் கவனம் செலுத்துவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கதாகும்.

## சீன - இலங்கை உறவு பொற்காலத்தில் இந்திய - இலங்கை உறவு சமரசத்தில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

உலகின் தொண்ணூறு சதவீதமான வர்த்தகமும் உலகின் மூன்றில் இரண்டு பகுதி பெற்றோலிய எரிபொருட்களும் கடல் வழியாகவே நகர்த்தப்படுகிறன.

இந்து சமுத்திரத்தின் கடற்கலங்களின் போக்குவரத்தில் 'ஆபிரிக்க கொம்பு முனைக்கும்', 'பெரிய மணற்பெட்டி' என்றழைக்க கூடிய அராபிய நிலப்பரப்பிற்கும் இடையில் இருக்கும் பாப் எல் மண்டேப் நீரணைக்கும் மலாக்கா நீரிணைக்கும் இடையில் மையத்தில் அமைந்துள்ள இலங்கை கப்பல்போக்குவரத்தின் இடைத்தரிப்பிடமாகவும், எரிபொருள் நிரப்புதல் பொருட்களை களஞ்சியப்படுத்தல் போன்றவற்றிற்கு முக்கியமானதாகவும் இலங்கை காணப்படுகிறது.

இதிலும் இலங்கையின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள அம்பாந்தோட்டையின் முக்கியத்துவும் அனைத்துலகின் கவனத்தை அண்மைக்காலமாக மிகவும் ஈர்த்துள்ளது.

அம்பாந்தேட்டை பகுதியை சீனாவிற்கு பதினைந்து ஆண்டு கட்டுமான திட்டத்திற்கு கொடுத்ததிலிருந்து, இலங்கையின் போக்கு குறித்து இந்திய மேலைத்தேய நாடுகளின் பார்வையும் மாற்றம் பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் தற்போது எரிபொருள் களஞ்சியமாகவும் தரிப்பிடமாகவும் இருக்ககூடிய அம்பாந்தோட்டை தேவை ஏற்படும் பொழுது சீன கடற்படைகளின் பிரதான தளங்களில் ஒன்றாக மாறிவிடக் கூடியநிலை மிகவும் சாத்தியப்பாடான தொன்று என இந்திய இராஜதந்திரிகள் கவலை கொண்டுள்ளனர்.

1962 ஜீன் மாதத்தில் சீனா திடீரென திபெத்தை சுவீகாரம் செய்ததை தொடர்ந்து இந்தியர்களுக்கு சீனா மீதான ஐயப்பாடான பார்வை கடந்த நாற்பது ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இப்பொழுது அம்பாந்தேட்டையில் சீனாவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சீனா தனது பாதுகாப்பு தசைகளை முறுக்கேற்றிகொள்ள முனைகிறது என்றே இந்திய இராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

சீனாவின் நடவடிக்கைகளை இலங்கையின் அபிவிருத்தி அதன் வர்த்தகம் என்ற நிலையில் இந்தியா நேரடியாக தனது எதிர்ப்பை தெரிவித்து கொள்ள முடியாதுள்ளது என்றே கணிப்பிடப்படுகிறது.

இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க முனையுமிடத்து இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்து விடும் இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு மேலும் அழுத்தங்கள் உருவாகலாம் என்ற நிலையும் இங்கு கவனிக்கத்தக்கது.

தனது தேசியபாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்காத வகையிலும் தென் மாநிலங்களில் குறிப்பாக தமிழ் நாட்டில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பலைகள் ஏற்படாத வகையிலும் இலங்கை அரசு, தமிழ் மக்கள் மீது எத்தகைய அடக்குமுறைகளை பிரயோகித்தாலும் இதையிட்டு கவலைப்படும் நிலையில் இந்திய மத்திய அரசு இல்லை.

இந்திய மத்திய அரசின் இலங்கை மீதான நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு மிக முக்கிய பங்களித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆனாலும் இலங்கை அரசும், எதிர் கட்சிகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து தமிழர் எதிர்ப்பு கொள்கையிலே திடமாக செயற்படுவது போன்று தமிழ்நாட்டில் தமிழ் உணர்வாளர்களும் அரசும் அத்துடன், ஆளும்கட்சியும், எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்பட்டது கிடையாது என்பதே உண்மையாகும்.

இலங்கை அரசு இந்திய அரசுடன் அரசரீதியான உறவை சுமுகமான நிலையில் வைத்திருப்பதில் மிகக் கவனமாக செயற்பட்டு வருகிறது. தமிழர் போராட்ட வலுவை சிதைப்பதன் மூலம் தனது இருப்பை தக்கவைத்து கொள்வது என்ற சூழ்ச்சியை காலாகால சிங்கள அரசுகளின் பெருமுயற்சியாக இருந்து வருகிறது.

அதேவேளை, இந்தியாவுடனான பகை இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்தானது என்பதை கொழும்பு ஆய்வாளர்கள் எப்பொழுதும் அரசாங்கங்களுக்கு உணர்த்தி வந்திருக்கின்றனர்.

ஆக இலங்கை பகையில்லாத எதிரியாக இந்தியாவுக்கு எப்பொழுதும் இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளது. எண்பதுகளின் பூகோள நிலையில் அமெரிக்காவுடனும் தற்போதைய நிலையில் சீனாவுடனும் அதீத நட்பை பேணும் அதேவேளை இந்தியாவுடன் சுமூக உறவையும் பேணிவருகிறது இலங்கை.

**லோகன் பரமசாமி**

அத்துடன் தற்பொழுது இலங்கைக்கு 'மனிதஉரிமை மீறல்கள்' என்ற சொல்லே பெரும் பிரச்சனையை கொடுத்து வரும் ஒரு விடயமாகி விட்டது.

ஆனால், அரசின் செயற்பாடுகளுக்கு பின்னால் இருந்து செயற்பட்டிருக்க கூடிய பௌத்த மகாசங்கங்களும் அடிப்படை பேரினவாத கோட்பாட்டின் ஆணிவேர்களுக்கும் இருக்க கூடிய கவலை நடந்து முடிந்த பாரிய படுகொலைகள் யாவும் 'வெறும் மனித உரிமை மீறல்களாக' சித்தரித்து நடைமுறை அரசு விட்ட தவறுகளாக கணிப்பிடபட்டுவிட வேண்டும் என்பதே யாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலுங்கானா மாநிலம் அமைப்பதா? வேண்டாமா? மத்திய அரசிடம் ஸ்ரீகிருஷ்ணா குழு அறிக்கை தாக்கல்

## ஆந்திராவில் கலவரம் வெடிக்கும் ஆபத்தால் இராணுவம் குவிப்பு

**புதுடில்லி,**

தனி தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து, நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா குழு மத்திய அரசிடம் அறிக்கை தாக்கல் செய்வதையொட்டி கலவரம் வெடிக்கும் ஆபத்து உருவாகி இருப்பதால், ஆந்திர மாநிலத்தில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பெரிய மாநிலங்களில் ஒன்றான ஆந்திராவில், தெலுங்கானா ராயல சீமா கடலோர ஆந்திரா ஆகிய மூன்று பிராந்தியங்கள் உள்ளன.

அவற்றில், தெலுங்கானா பகுதியை ஆந்திராவில் இருந்து பிரித்து தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையாகும். கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதியில், இந்த கோரிக்கை வலுப்பெற்று தொடர் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில் குறித்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதியன்று, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் 5 பேர் கொண்ட குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது.

அதன்படி ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டதிலிருந்து அதன் பல்வேறு பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி திட்டங்கள், அதனால் ஏற்பட்ட பயன்கள் குறித்தும் ஆய்வு செய்து தீர்வுகாண வேண்டிய முக்கிய பிரச்சினைகளை இனம் காணுவது பற்றியும் இந்த குழு ஆய்வு செய்ததைத் தொடர்ந்து தனது அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திடம் தாக்கல் செய்த போதிலும் அன்றைய தினமே அறிக்கையின் முழு விபரமும் வெளிவராது என்று தெரிவிக்கப்பட்டடுகிறது. இந்நிலையில், அறிக்கையின் தகவல்கள் கசியக்கூடும் என்பதால், ஆந்திர மாநிலத்தில் கலவரம் வெடிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற போராட்டங்களின்போது, ரயில்-பஸ் போக்குவரத்து முடக்கப்பட்டு ஆந்திர மாநில அரசின் நிர்வாகமே செயலிழந்தது. எனவே மீண்டும் அதுபோன்ற ஒரு சூழ்நிலை உருவாகலாம் என்ற அச்சுறுத்தல் எழுந்துள்ளதையடுத்து எந்த ஒரு சூழ்நிலையையும் சமாளிக்கும் விதத்தில், ஆந்திர மாநிலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 5 ஆயிரம் பேரைக் கொண்ட 50 கம்பனி மத்திய துணை இராணுவ படையினர் ஆந்திராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் ஐதராபாத் மற்றும் புறநகர் சைபர் பாத் பகுதிக்கு மட்டும் 23 கம்பனி துணை இராணுவ படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் வரை ஐதராபாத்துக்கு 11 கம்பெனி துணை இராணுவ படையினர் வந்துவிட்டதாக, பொலிஸ் அதிகாரி ஏ.கே.கான் நிருபர்களிடம் தெரிவித்தார்.

# காங்கிரஸ் புத்தகத்தில் சஞ்சய் காந்தி பற்றி சர்ச்சைக்குரிய கருத்துக்கள்: பா.ஜ.க. கண்டனம்

**புதுடில்லி,**

டில்லியில் அண்மையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் வெளியிடப்பட்ட புத்தகத்தில் இந்திரா காந்தியின் இரண்டாவது மகனான சஞ்சய் காந்தி பற்றி சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

நெருக்கடி நிலை காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம், குடிசை மாற்றுத் திட்டம், வரதட்சிணை ஒழிப்புத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயற்படுத்துவதில் சஞ்சய் காந்தி அதிகார தோரணையிலும் தன்னிச்சையாகவும் நடந்து கொண்டார் என்றும் இது மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது என்றும் அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

இதுபோல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதை தடுக்க அப்போதைய பிரதமர் நரசிம்ம ராவ் தவறிவிட்டார் என்றும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பா.ஜ.க. தலைவர்களும் சங்க பரிவார பிரதிநிதிகளும் அப்போது உத்தரப் பிரதேசத்தில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க. அரசும் இரகசியமாக கூட்டணி சேர்ந்து பாபர் மசூதியை இடிக்க உதவினர். இதைத் தடுக்க அப்போது பிரதமராக இருந்த நரசிம்ம ராவ் தவறிவிட்டார் என்று அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

பாபர் மசூதி இடிப்பைத் தடுக்க தவறியதற்காக காங்கிரஸ் தலைவராக இருந்த சீதாராம் கேசரிக்கு அதன் பின்னர் நடந்த தேர்தலில் டிக்கெட் மறுக்கப்பட்டதாகவும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2004 தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றபோது பிரதமர் பதவியை ஏற்க சோனியா காந்தி மறுத்தது குறித்து இந்தப் புத்தகத்தில் பாராட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் காங்கிரஸ் புத்தகத்தில்



சஞ்சய் காந்தி குறித்து வெளியிடப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கு பா.ஜ.க. கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ஷா நவாஸ் ஹுசைன் கூறுகையில்,

நெருக்கடி நிலை காலத்தில் நடந்த தவறுகளுக்கு சஞ்சய்காந்தி மட்டுமே பொறுப்பல்ல. காங்கிரஸ் கட்சி தனது தவறுகளுக்கு உயிருடன் இல்லாதவர்களையோ அல்லது பொது வாழ்விலிருந்து விலகியவர்களையோ பொறுப்பாக்குவது வாடிக்கையாகவே உள்ளது.

நெருக்கடி நிலை கால தவறுகளுக்கு காங்கிரஸ் தலைவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பு. உயிருடன் இல்லாதவர்கள் மீது புகார் கூறுவது நமது பண்பாடு அல்ல. ஆனால் இப்போது உயிருடன் இல்லாத சஞ்சய் காந்தி, நரசிம்ம ராவ் மீது காங்கிரஸ் கட்சி ... என்றார்.

# எனது மகனை மீட்கும் வரை ஓய மாட்டேன்; அரசியல் களத்தில் குதித்து போராடுவேன் என்கிறார் வனிதா

**சென்னை,**

எனது மகனை நல்லபடியாக மீட்கும் வரை ஓயமாட்டேன் என்றும், அரசியல் ரீதியாக களத்தில் குதித்து போராடப் போவதாகவும் நடிகை வனிதா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நான்



போராடி வருகிறேன். இந்த அரசின் கீழ் தான் ஒரு தமிழ் குடிமகள் என்ற முறையில் நானும் உள்ளேன். ஆனால் எனக்கு நியாயம் வழங்கவில்லை. நான் இப்போது சினிமாவில் நடிக்கவில்லை. சினிமாவில் நடித்திருந்தால் எனக்கு நியாயம் கிடைத்திருக்கும். முதலமைச்சரின் தனிப்பிரிவு அலுவலகத்துக்குக்கூட நான் மனு அனுப்பியுள்ளேன்.

அரசியல் தூண்டுதல் இருப்பதால்தான் எனக்கு பொலிஸார் நியாயம் வழங்கவில்லை. ஒரு பெண் என்ற முறையிலாவது என் பிரச்சினையை கேட்டு நியாயம் வழங்கியிருக்கலாம். அது நடக்கவில்லை.

அரசியல் களத்தில் இறங்கினால்தான் நியாயம் கிடைக்கும் என்றால், நானும் அரசியலில் ஈடுபட தயாராக உள்ளேன். விரைவில் ஒரு கட்சியில் சேரப்போகிறேன். பெண்கள் பிரச்சினைக்காக போராடும் தொண்டு நிறுவனம் ஒன்றையும் நான் தொடங்கப்போகிறேன்.

எனது குழந்தையை மீட்கும் வரை நான் ஓயமாட்டேன். எனது வயிற்றில் சுமந்து பெற்று 9 வருடங்கள் அந்த குழந்தையை வளர்த்துள்ளேன். இப்போது அந்த குழந்தை என்னோடு வர மறுக்கிறான். அப்படியென்றால் அந்த குழந்தையை எந்த அளவுக்கு குழப்பியிருப்பார்கள் என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்றார்.

## நான் நிரபராதி என்பதை நீதிமன்றில் நிருபிப்பேன்

### நித்தியானந்தா பேட்டி

**திருவண்ணாமலை,**

நான் நிரபராதி என்பதை நீதிமன்றில் நிருபிப்பேன் என்று நித்தியானந்தா சாமியார் கூறினார்.

இது குறித்த அவர் மேலும் தெரிவித்ததாவது-

33 ஆண்டுகளை முடித்து 34ஆவது ஆண்டில் காலெடுத்து வைத்துள்ளேன். கடந்த 10 மாதங்களுக்கு பிறகு முதல் முறையாக பொதுமேடையில் ஏறி தமிழில் வாய் திறந்திருக்கிறேன்.

தங்கள் துறையில் இருப்பவர்களை தாக்குவது அரசியல். ஆனால் எந்த தவறும், வம்பும் செய்யாத நம்மை அழிக்க நினைப்பது இராட்ச தன்மை.

கோடிக் கணக்கில் பணம் கேட்டு மிரட்டப்பட்டேன். மிரட்டிய நபர்கள் யார் என்பதை நீதிமன்றில் தெரிவிப்பேன். அவர்களின் மிரட்டலுக்கு பணியவில்லை. அதனால் பக்தர்கள் மிரட்டப்பட்டு அவர்களிடம் இருந்து மிகப் பெரிய அளவில் பணம் பறிக்கப்பட்டது. அதற்கு போதிய ஆதாரம் இல்லாததால் அமைதிகாத்தோம். இதற்கு மேலும் சொல்லப்படாமல் இருந்தால் அது சொல்லாமலேயே அழிந்துவிடும் என்பதால் உலகின் ... கொள்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை செயலாளர் பதவிகளுக்கு எட்டு பேர் தெரிவு

(யாழ்.மத்தி நிருபர்)

நீண்டகால இடைவெளிக்குப் பின் உள்ளூராட்சி சபையில் கடமையாற்றும் இளம் வயதினரைச் சேர்ந்த 8 அதிகாரிகள் உள்ளூராட்சி சபை செயலாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜய லட்சுமி உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் இணைந்து இந்த நியமன திட்டத்தை முன்வைத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் 60 வயதினை தாண்டியவர்களுக்கான மீள் நியமனம் இரத்து செய்யப்பட்டு இளம் வயதினருக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்ற வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.ரங்கராஜாவின் தீர்மானத்திற்கு இணங்க மேற்படி இளம் வயதினை சேர்ந்த எட்டுப்பேர் வெற்றிடமாக உள்ள வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு செயலாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு கடந்தவாரம் யாழ். ஆளுநர் உப அலுவலக இல்லத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தலைமையில் இடம்பெற்றது.வடக்கு மாகாண உள்ளூராட்சி சேவையில் வினைத்திறனாக சேவையாற்றக் கூடிய 15 அதிகாரிகள் அழைக்கப்பட்டு நேர்முகப்பரீட்சை மூலம் 8 பேர் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு செயலாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.வடமாகாண உள்ளூராட்சி சபை செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கொழும்பு ஆளுநர் அலுவலகத்தில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்து நியமனம் பெறும் புதிய உள்ளூராட்சி சபை செயலாளர்கள் எதிர்வரும் ஜனவரி 03 ஆம் திகதி முதல் புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்பர்.

## இனக்கலவரத்தை (தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளது. வடக்கில் சிங்களவர்கள் மீள்குடியேற்றப்படுவது தொடர்பில் கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைப்பாட்டினை கர்தினால் மெல்கம் ரஞ்சித் வெளிப்படுத்தவேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் கருத்து தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே ஐக்கிய தேசிய கட்சியின் மனித உரிமைகளுக்கான பிரதிச் செயலாளரும் எம்.பி.யுமான டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், இந்நாட்டில் இனக்கலவரம் ஒன்று உருவாவதற்கு காரணமாகவிருந்த இனவாதச் சிந்தனை இன்னும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது என்பதற்கு சிங்கள இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடுகளும் அதன் செயற்பாடுகளும் உறுதியளித்துள்ளன.

எமது நாடு அமைதியாக இருக்கவேண்டும் என்ற எண்ணமோ அல்லது சகலரும் சமமாக மதிக்கப்பட்டு சகோதரத்துவம் பேணப்பட வேண்டும் என்ற சிந்தனையோ மேற்கண்ட இனவாதக் கட்சியிடம் அற்றுப்போய் விட்டது.

இவர்களிடத்தில் பௌத்த தர்மதத்தை காண முடியவில்லை. பௌத்தமாக இருந்தாலும் சரி கத்தோலிக்கமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த மதங்களாகவோ இருந்தாலும் சரி, அனைத்து மதங்களும் அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றையே போதிக்கின்றன. இவ்வாறிருக்கும்போது ஜாதிக ஹெல உறுமய பௌத்தத்தையும் அதன் தர்மத்தையும் ஏமாற்றிக்கொண்டிருப்பது மட்டுமல்லாது இனங்களுக்கிடையே குழப்பங்களைம் குரோதங்களையும் விதைத்து வருகின்றது. இது உண்மையில் அருவருக்கத்தக்கதான செயலாகும்.

யுத்தம் உருவாவதற்கு முன்னர் இந்நாட்டில் தமிழ்-சிங்கள மற்றும் முஸ்லிம்கள் என சகலரும் சகோதரத்துவத்துடனேயே வாழ்ந்தனர். அந்த சகோதரத்துவ அந்நியோன்னியத்தை பாழாக்கியதே ஹெல உறுமய போன்ற இனவாத சிந்தனையாளர்கள். அதன் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் நாம் நிறையவே அனுபவித்து விட்டோம். இனியாவது நிம்மதியாக வாழ்வோம் என்றால் அதனை நடக்கவிடாது மீண்டும் இந்நாடு பற்றியெரிவதற்கு வழிகள் வகுக்கப்படுகின்றன.

வடக்கில் சிங்களவர்கள் மீள்குடியேற்றப்படுவதன் நியாயம் தொடர்பில் அரசின் பங்காளியாக இருக்கின்ற ஜாதிக்க ஹெல உறுமய கட்சி அரசாங்கத்திடமே கேள்வியெழுப்ப வேண்டும். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்னவென்பதை மஹிந்த ராஜபக்ஷவிடமே கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். அதனைவிடுத்து அரசியல் சம்பந்தப்பட்ட விடயத்தை மதத்துடன் இணைத்துப் பேசுவது வேடிக்கை மட்டுமல்லாது அறியாமையாகவும் அமைந்துள்ளது.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியமளித்ததானது நாட்டுக்கும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கும் ஆலோசனைகளை வழங்குவதாகவும் முன்னெச்சரிக்கையை விடுப்பதாகவுமே அமைந்திருந்தது. அவரது சாட்சியத்தில் இனவாதமோ மதவாதமோ பொதிந்திருக்கவில்லை.

இப்படியிருக்கையில் சிங்களவர்கள் வடக்கில் குடியேற்றப்படுவது தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாட்டை வெளியிடுமாறு கர்தினால் மெல்கம் ரஞ்சித்தை கோருவதானது இந்நாட்டில் மதக்கலவரம் ஒன்றை உருவாக்குவதற்கான உள்நோக்கமாகவே பார்க்கப்படுகின்றது.

நாட்டையும் மக்களையும் குழப்பி மதக் கலவரத்துக்கு வித்திருக்கின்ற ஜாதிக ஹெல உறுமயவின் இனவாத போக்கினை ஐக்கிய தேசியக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. மக்களுக்கும் நாட்டுக்கும் மீண்டும் மீண்டும் துரோகத்தை இழைக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## கடத்தல் (தொடர்ச்சி)

ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியும் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மற்றுமொருவர் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதனால் யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியில் பதற்றமும், அச்சமும் மேலோங்கியுள்ளது.

தென்மராட்சி மீசாலை வடக்கு வேம்பிராய்ப்பகுதியில் வெட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் மீட்கப்பட்டது.

கனகன்புளியடியைச் சேர்ந்த மகேந்திர செல்வம் திருவருட்செல்வன் (வயது28) என இவர் அடையாளம் காணப்பட்டார். கடந்த திங்கட்கிழமை இவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் இவர் ஒரு வாகனத் தரகர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் கனகன்புளியடிச் சந்தியில் வாகனம் ஒன்று விற்பனைக்கிருப்பதாக கூறியே தந்திரமாக குறித்த இளைஞரை அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. மோட்டார் சைக்கிளில் வந்தவர்களோடு சென்ற செல்வனைக் காணாது குடும்பத்தினர் தேடி அலைந்த போது, வீட்டுக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்ததாகவும், அதில் பேசிய மர்ம நபர்கள் பெருந்தொகைப் பணத்தைக் கேட்டு மிரட்டியதாகவும் செல்வத்தின் குடும்பத்தினர் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்

இந்த நிலையில் புதன்கிழமை மாலை மூன்று மணியளவில் சரசாலை வேம்பிராய் வீதியில் இயற்கைத்திடல் காளிகோயிலுக்கு அண்மையாக உள்ள கல்குவாரி ஒன்றின் அருகே வெட்டுக் காயங்களோடு உடைகள் களையப்பட்டு உள்ளாடையுடன் மாத்திரம் செல்வனின் சடலம் வீசப்பட்டுக் கிடந்தது.

இது பற்றி அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

செல்வன் கொண்டு சென்ற மோட்டார் சைக்கிளையும் ஆவணங்களையும் கொலையாளிகள் எடுத்துச் சென்றிருப்பதாகவும், சடலத்தின் நிலையைப் பார்க்கும் போது செல்வன் இருநாட்களுக்கு முன்னரே கொலை செய்யப்பட்டிருக்கக் கூடும் எனவும் சடலத்தை நேரில் பார்த்த அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சனிக்கிழமை இரவு ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மகளுடன் வீட்டிலிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உரும்பிராய் மேற்கு மூன்று கோவில் பகுதி அம்மன் வீதியை சேர்ந்த மார்க்கண்டு சிவலிங்கம் (வயது 52 ) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

உதவிக்கல்விப்பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் தனது மகளுடன் சம்பவ தினம் இரவு வீட்டில் இருந்துள்ளார். இரவு 10.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் வீட்டின் மதில் மீது ஏறி உள்நுழைந்து உதவிக் கல்விப்பணிப்பாளர் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகவும். இதன் பின்னர் தப்பிச் செல்கையில் மகளான தாரகி காதில் அணிந்திருந்த காதணிகளையும் பலவந்தமாக கழற்றிச் சென்றுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் தெரியவருகிறது.

இதேவேளை வீட்டில் கொள்ளையிடுவதற்கு வந்த ஆயுதக்குழுவினர் உதவிக்கல்விப்பணிப்பாளர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டார்களா? அல்லது இவரை கொல்லும் நோக்கத்துடன் வந்தவர்கள் இத்தகைய சம்பவத்தில் ஈடுபட்டார்களா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இதுவரையில் எவருமே கைது செய்யப்படவில்லை.

இதேவேளை யாழ்ப்பாணம் சங்கானை இலுப்பை தாழ்வு முருகமூர்த்தி ஆலய பிரதம குருக்களின் வீட்டுக்குள் கடந்த 11 ஆம் திகதிஇரவு உட்புகுந்த முகமூடி அணிந்த ஆயுததாரிகள் அவர் மீதும் அவரது இரு மகன்மார் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் வீட்டிலிருந்த நகை, பணம், என்பவற்றையு[illegible] கொள்ளையிட்டுச் சென்றிருந்தனர். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த பிரதம குருவான நித்தியானந்தா (வயது 55) கடந்த 15 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

இத்தகைய சம்பவங்கள் யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. கொள்ளை, கொலைச்சம்பவங்கள் தொடர்வதனால் குடாநாட்டு மக்கள் இரவில் பயந்தவண்ணம் வாழும் நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது

யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி வவுனியாவிலும் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஆயுதங்கள் சகிதம் வரும் மர்மநபர்களே இத்தகைய செயலில் ஈடுபடுவதால் மக்கள் மத்தியில் அச்சம் மேலோங்கியுள்ளது.

படையினர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சோதனை நடவடிக்[illegible]களை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அதனையும் மீறிச் சம்பவங்கள் தொடரவே செய்கின்றன.

இத்தகைய சம்பவங்களால் மீண்டும் வடபகுதியில் சோதனைச் சாவடிகளை அதிகரித்ததும் இரவுப் பொழுதில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் ரோந்து சேவையை அதிகரிப்பதும் குறித்தும் பாதுகாப்பு தரப்பினர் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

## உரும்பிராயில் (தொடர்ச்சி)

ஓட முற்பட்ட போதும் கடத்தல் காரர்கள் குறித்த நபரை கடத்திச் சென்றுள்ளனர். அப்பகுதியில் நின்ற வயோதிபர் அருகில் இருந்த இராணுவத்தினருக்குத் இச் சம்பவம் தொடர்பாகத் தெரிவித்ததுடன் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார்.சம்பவ இடத்திற்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் அப்பகுதியில் இருந்த சைக்கிளையும் செருப்பையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இப் பகுதியிலேயே வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன்பின்னர் 4 நாட்களின் பின்னர் இச் சம்பவம் இடம்பெற்றது அப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் தேடுதலையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


## யாழ். பல்கலை (தொடர்ச்சி)

குடும்ப உறுப்பினர் விபரம் முதலானவற்றையும் திரட்டி வருகின்றனர் என வன்னி பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பல்கலைக்கழக மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் ஒரு வித அச்ச நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய சருமம்





'டயட்' என்கிற பெயரில் உணவைக் குறைத்துக் கொண்டு உடலை ஸ்லிம்மாக வைத்துக் கொண்டால் போதுமா? இதனால் சருமத்தில் உள்ள சத்துக்கள் குறைந்து, பொலிவிழந்து, சருமம் வறண்டு காணப்பட்டால் வெளிப்புற தேகத்துக்கு என்னதான் 'மேக்-அப்' செய்தாலும் பயனில்லை.

இன்றைக்கு சந்தையில் அழகுக்காகப் பொருட்கள் ஏராளமாய்க் கொட்டிக் கிடக்கின்றன. இருக்கும் அரைகுறை அறிவை வைத்துக்கொண்டு அனைத்தையும் வாங்கி, முகத்தில் அப்பி, உடலில் பூசி பின்பு அவதிப்படுபவர்கள்தான் அநேகம் பேர்.

முதலில் நம் சருமம் எந்த வகையைச் சார்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வறண்ட சருமமா, எண்ணெய் வழியும் சருமமா என்பதை ஒரு கைதேர்ந்த அழகுக்கலை நிபுணரிடம் கேட்டறிந்து கொண்டு அழகு பராமரிப்பை மேற்கொண்டால், அழகு என்றென்றும் நம் பக்கம்தான். மேலும் நம் உணவில் சமச்சீரான சத்துக்களடங்கிய டயட் இடம் பெறவேண்டும். ஒருசிலர், வாளிப்பான தேகமும், மினு மினுப்பான சருமமும் கொண்டு செழிப்பாகக் காட்சியளிப்பார்கள். இதற்கு மிக முக்கியக் காரணம் சமச்சீரான உணவுப் பழக்கமே.

இப்படிப்பட்ட அழகை நிரந்தரமாகத் தக்கவைத்துக்கொள்ள, தொடர்ந்து பராமரிப்பும் தேவை. வாரம் ஒருமுறை சருமத்தில் சேரும் அழுக்கை உடல் முழுவதும் 'ஸ்க்ரப்' செய்து நீக்கி, முகம், கை, கால்களுக்கு மசாஜ் எடுத்துக் கொண்டால் சருமச் சுருக்கங்களை நீக்கலாம். வறண்ட தேகம் உடையவர்கள், பதினைந்து நாட்களுக்கொருமுறை ஏதாவது 'ப்ரூட் பேக்' எடுத்துக்கொண்டு 'பேஷியல்' செய்துகொள்வது அவசியம். இதனால் சருமத்தில் இழந்த தண்ணீர்ச் சத்துக்கள் மீண்டும் பெறப்படுகின்றன.

தற்பொழுது வேலை பார்ப்பவர்களின் சூழ்நிலையும் 24 மணிநேரமும் குளிரூட்டப்பட்ட அறைகளில்தான் அமைகிறது.

**சத்துக்கள் குறைந்து பொலி விழந்து, சருமம் வறண்டு காணப்பட்டால் வெளிப் புற தேகத்துக்கு என்னதான் 'மேக்-அப்' செய்தாலும் பயனில்லை.**

இதனால் உடல் மேலும் வறண்டு போய் விடும். இதற்கென்றே 'நேச்சுரல்ஸ் க்ளோ பேஷியல் ஸ்பெஷல் பேக்' அறிமுகப் படுத்தியுள்ளது. இதனால் வியர்வையே ஏற்படாமல், நீர்ச்சத்து இழந்து காணப்படும் சருமத்துக்குப் புத்துணர்ச்சியும், பொலிவும் உடனடியாகக் கிடைக்கிறது.

### கூலிங் ஐ மஸாஜ்

இரவு, பகல் பாராமல் கம்ப்யூட்டர் முன் அமர்ந்து வேலை செய்பவர்களுக்கு இச்சிகிச்சை ஒரு வரப் பிரசாதம். கண்களுக்கு உண்டாகும் அதிகக் களைப்பு, சூடு இவையெல்லாம் அடியோடு நீங்கிவிடும். இதற்கென்றே உருவாக்கப்பட்ட 'ஜெல் மாஸ்'கை ப்ரீசரில் வைத்து எடுத்து கண்களைச் சுற்றி அணிவித்து சிகிச்சை தரப்படுகிறது.

**மைக்ரோ டெர்மா சிகிச்சை:**

இது முக்கியமாக, சருமத்தில் காணப்படும் இறந்த செல்களை நீக்கி ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் ஆக்க உதவுகிறது. வெயிலில் அதிகம் சுற்றி, வேலை பார்த்து சருமம் கறுத்துக் காணப்படுபவர்கள் குறிப்பாக இளைஞர்கள் இச்சிகிச்சையை மேற்கொண்டால் இழந்த அழகை மீண்டும் பெறலாம்.

**ஐ லேஸர் ட்ரீட்மெண்ட்:**

சிலருக்குக் கண்ணுக்கு அடியில் கருவளையம் தோன்றி, சருமம் பொலிவிழந்து மங்கலாகக் காணப்படும். இச்சிகிச்சையைத் தொடர்ந்து எடுத்துக் கொள்ள கரு வளையம், சுருக்கங்கள் நாளடைவில் மறையும். 'சருமம் மினுமினுப்புடன் அழகாய் மிளிர்வதற்கு உடலில் கொஞ்சம் கொழுப்புச் சத்தும் அவசியம்' என்கிறார் வீணா.

# உருளைக்கிழங்கு மசாலா



### தேவையான பொருட்கள்

உருளைக்கிழங்கு -250 கிராம்,
வெங்காயம் -5, பச்சைமிளகாய்-3,
கறிவேப்பிலை, கறுவா - அளவாக,
கடுகு - 1/2 தேக்கரண்டி,
பெருஞ்சீரகத்தூள் - 1/2 தேக்கரண்டி,
மஞ்சட்தூள் -1/2 தேக்கரண்டி, உப்பு- அளவாக,
தேங்யெண்ணெய் -1 1/2 மேசைக்கரண்டி

### செய்முறை

உருளைக்கிழங்கை அவித்து உரித்து அரைப்பதமாக உதிர்த்தி மஞ்சள் தூள், உப்பு சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

வெங்காயம், மிளகாய், கறிவெப்பிலை இவற்றைச் சுத்தஞ் செய்து சிறியதாக வெட்டி நன்றாகக் கொதித்த எண்ணெயிலிட்டுக் கடுகையும் சேர்த்துக் கொள்ளவும். தாளித்த பொருட்கள் பொன்னிறமாகியதும், உதிர்த்த உருளைக்கிழங்குக் கலவையை இட்டுப்பெருஞ்சீரகத்டதூளையும் சேர்த்து நன்கு கிளறி இறக்கிக் கொள்ளவும்.

### குறிப்பு

இம் மசாலாவைத் தோசைக்குள் வைத்து மசாலாத் தோசையாகவும், பூரி, சப்பாத்தி இவற்றுடன் பயன்படுத்தலாம்.

# எலுமிச்சம்பழப் பானம்



### தேவையான பொருட்கள்

தண்ணீர் - 1 தம்ளர்
எலுமிச்சம் பழச்சாறு - 1 1/2 தேக்கரண்டி
உப்பு நீர் - 1/2 தேக்கரண்டி

### செய்முறை

கொதித்தாறிய நீருடன் சீனியைச் சேர்த்துக் கரைத்து வடித்துக் கொள்ளவும்.

அதனுடன், எலுமிச்சம் பழச்சாறு, உப்பு இவற்றைக் கலந்து கொள்ளவும்.

குளிரூட்டியில் வைத்து அல்லது ஐஸ் கட்டியைச் சேர்த்துப் பரிமாறிக் கொள்ளவும்.


**மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்**
**யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்**
**117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில் கிளிநொச்சி




## அன்றும் இன்றும்



வடக்கின் பிரதான நகரங்களில் ஒன்றாகவும் நெற் களஞ்சியமாகவும் விளங்கும் கிளிநொச்சி ஒரு காலத்தில் வனவிலங்குகளின் வாழ்விடமாக இருந்தது.

இங்கு மனிதர்கள் நிரந்தரமாக தங்கி வசிக்கின்ற காலங்கள் அக்காலத்தில் மிகவும் குறைவு வனவிலங்குகளின் ஆதிக்கமே அப்போது இருந்தது. வனவிலங்குகளின் முக்கிய பாதைகளாக இருந்த இடங்கள் ஆனையிறவு மற்றும் கரடிப்போக்கு. இதேபோல், முறிகண்டியும் மாங்குளமும் விளங்கியது. தற்போதைய 'ஏ-9' கண்டி வீதி என அழைக்கப்பட்டது.

பின்னர் பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. காடழிக்கப்பட்டு மக்கள் வியர்வையில் கொலனிகள் உருவாக்கப்பட்டன.

இன்று கணேசபுரம் என அழைக்கப்படும் கிராமம் பழைய கொலனி என்ற பெயரிலே வழங்கப்பட்டது. இது கிளிநொச்சி நகருக்கு அருகில் ஏ-9 வீதியை ஒட்டியுள்ள வயல் சூழ்ந்த பசுமை மிக்க விவசாய கிராமம். இக் கிராமம் முதன் முதலாக உருவாக்கப்பட்டதால் இப்பெயர் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல், படிப்படியாக பல குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. யாழ். குடாநாட்டில் விவசாய செய்கைக்கான நிலப்பற்றாக்குறை, தண்ணீர் பிரச்சினை, கடல்பகுதி கிராமங்களில் விவசாயம் செய்ய முடியாமை, போதிய வேலைவாய்ப்பில்லாத நிலமைகளால் முன்னாள் அரசாங்க உயர் அதிகாரியான அமரர் முருகேசம்பிள்ளை முதலானோரின் கவர்ச்சிகரமான அழைப்பின்பேரிலும் கிளிநொச்சியில் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதுபடித்த வாலிபர்களையும் கவர்ந்து இழுத்தது.

அதன் பிரகாரமும் கனகபுரம் படித்த வாலிபர் திட்டம், கனகாம்பிகைக்குளம் மற்றும் திருவையாறு இளைஞர் குடியேற்றத்திட்டங்கள் என்பவற்றை கிளிநொச்சி நகர் பகுதியில் உருவாக்கியது. மகளீருக்கான அம்பாள் நகர் குடியேற்றத்திட்டமும் உருவானது.

இன்று விவசாயத்துறையில் பிரசித்தி பெற்று விளங்கும் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கனகாம்பிகைக்குளம், முரசுமோட்டை, கல்மடுநகர், கண்டாவளை, உருத்திரபுரம் மற்றும் அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம், கோணாவில், வன்னேரிக்குளம் பகுதிகளும் இவ்வாறு உருவாக்கப்பட்ட விவசாய குடியேற்ற திட்டங்களே.

யுத்தத்தால் மக்கள் அழிவுகளை சந்தித்தது போல அன்று மலேரியா நோயினாலும் வனவிலங்குகளின் தாக்குதல்களாலும் குடியேற்ற வாசிகள் பலர் மரணத்தை தழுவியுள்ளனர். அக்காலத்தில் வைத்திய வசதியும் போதியதாக இல்லை.

இருப்பினும் சகிப்புத்தன்மை, மனம் தளராத உறுதியுடன் மக்கள் குறிப்பாக விவசாயிகள் நோயை எதிர்கொள்ளவும் வன விலங்குகளை எதிர்கொள்ளவும் கூடியவர்களாக விளங்கினார்கள்.

யாழ்.மாவட்டத்துடனேயே கிளிநொச்சி இருந்ததால் போதிய அபிவிருத்தி காணாமல் இருப்பதை கவனத்தில் எடுத்த முன்னாள் எம்.பி. வி.ஆனந்தசங்கரி தனி மாவட்ட பிரச்சினைக்காக குரல் கொடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி அமரர்.ஜே.ஆர்.ஜெயவர்த்தன கிளிநொச்சி றொற்றிக்கோ மைதானத்தில் மக்களை சந்தித்தார். கிளிநொச்சிக்கு தனி மாவட்டம் வேண்டுமானவர்கள் கையை உயர்த்துமாறு மேடையில் இருந்தவாறு கேட்டார். மைதானத்தில் கூடியிருந்த அனைவரும் ஏகோபித்து கையை உயர்த்தி தனிமாவட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். இதுவும் ஒரு வாக்கெடுப்பே. அதன் பிரதிபலிப்பு இலங்கையில் 25 ஆவது மாவட்டமாக உருவாகியது.

இம் மாவட்டத்தினதும் கிளிநொச்சி நகரினதும் வரலாற்றை நோக்கினால் துரிதமாக வளர்ச்சி காண்பதும் அழிவடைவதும் மாறிமாறி வரும் நிகழ்வுகளாகும்.

கடந்த யுத்தத்தின் போது பெரும் அழிவுகளையும் மனித அவலங்களையும் சொல்லெணாத் துயரங்களையும் சந்தித்த கிளிநொச்சி நகரம் மீண்டும் மிகத்துரித கதியில் வளர்ச்சிகண்டு வருகிறது.

நகரப்பகுதி மூவின மக்களால் நிரம்பி காணப்படுகிறது. வர்த்தக தொழிற்துறை மற்றும் விவசாய நடவடிக்கைகள் வங்கி அலுவலக செயற்பாடுகளும் மத செயற்பாடுகளும் அதிகரித்து காணப்படுகின்றன.

பல நூற்றுக்கணக்கில் கட்டடங்கள் உருவாகி வருகிறன. அதுமட்டுமல்ல, அரசியல்வாதிகளை பெரிதும் கவரும் இடமாகவும் விளங்குகிறது. கட்சிவேறுபாடு இன்றி எல்லோரும் வந்து செல்கின்றனர்.

பாடசாலைகளின் கட்டடங்கள் சேதமான போதும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் அபிவிருத்தி கண்டுவருகிறது. வைத்திய வசதிகளிலும் முன்னேற்றம் உண்டு.

இந்நிலை நிரந்தரமாக வேண்டும்.நிரந்தரமான நகரமாக கிளிநொச்சி விளங்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, பூரணமான அமைதிப் பிரதேசமாக கிளிநொச்சி விளங்கவேண்டும் என கிளிநொச்சி மக்கள் பலர் யாழ்.ஓசைக்கு தெரிவித்தனர்.

கே.வி.கே. திருலோகமூர்த்தி

# காலம் கடந்தும் கவனிப்பாரற்று கிடக்கும் பாதை

கடந்த பல ஆண்டுகளாக யாத்திரீகர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்ற தீவுப்பகுதிகளுக்கும் யாழ். குடாநாட்டுக்குமான நீண்ட தரைவழிப்பாதை அல்லைப்பிட்டி முதல் பண்ணை வரை பலத்த சேதங்களுக்கு உள்ளாகியிருக்கின்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிஷா சூறாவளி அனர்த்தத்தால் படுமோசமாக சிதைக்கப்பட்ட பாதை மக்களின் அவசர தேவை கருதியும் பாதுகாப்புப் படையினரின் தேவை கருதியும் அவசரகதியில் பொருத்தமான முறையற்று ஓரளவு சீர்செய்யப்பட்டது. ஆனாலும் தொடர்ந்த இயற்கை சீரழிவுகள் காரணமாக இன்றுவரை பாதை சீர் பெறவில்லை.

மேலும், தீவுப்பகுதி மக்களின் கல்வி உணவு, மருத்துவம், வியாபாரம், மின் சாரம், தொலைத்தொடர்பு என்ற எந்த தேவை நோக்கினாலும் இந்தப் போக்குவரத்து பாதையே உகந்ததாக உள்ளது. அரச போக்குவரத்து தனியார் போக்குவரத்து சேவைகளும் பாதை சீர்கேடு காரணமாக அடிக்கடி இடை நிறுத்தப்படுவதை காணமுடிகின்றது.

நாள்தோறும் இந்தப் பாதையின் சீர்கேடு பயணிக்கும் தீவுப்பகுதி மக்களை பாதிப்பது மட்டுமல்லாது தென் இலங்கை யாத்திரிகர்களையும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளையும் பெரிதும் பாதிப்பதாக உள்ளதோடு விசனத்திற்கும் உள்ளாக்குகின்றது.

ஆகவே, இந்தப் பாதையின் சீரமைப்புத் தொடர்பாக அதிகாரம் பெற்றவர்கள் இவற்றைக் கருத்திற்கொண்டு இச் செயற்பாட்டை துரிதகதியில் நிறைவேற்றினால் ஆபத்துக்கள் குறைவதோடு மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களிலிருந்தும் மீளமுடியும்.

நயினைநாட்டிலிருந்து
அம்பி.ஸ்ரீராகவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்



பி.தி.சியாம்ஸிதாசன் தரம் 5
யா/இளவாலை ஹோ.க. ஆண்கள் பாடசாலை

## ஆமை



**ஆமை** ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இவை நீரிலும் நிலத்திலும் வாழவல்ல இரு வாழ்விகள் ஆகும். நிலத்தில் வாழும் ஆமைக்கு கால்களில் நகங்கள் அமைந்திருக்கின்றன. ஆமை தரையில் நடக்கும் வேகம் மணிக்கு சுமார் 70 மீட்டர். கடலில் வாழும் ஆமை வகைகளின் கால்களே துடுப்பு போன்று அமைந்திருக்கும். கடல் ஆமை ஒரே சமயத்தில் 200 முட்டைகளிடும்.

உலகில் ஏறத்தாழ 300 வகையான ஆமையினங்கள் உள்ளன.

தோல்முதுகுக் கடலாமை என்ற ஆமையினம் 900 கிலோகிராம் நிறை வரை வளர்கிறது.

பொதுவாக உயிரினங்களில் ஆமைகளுக்கு நீண்ட ஆயுள் உள்ளது. அதன் இதயம் மிகவும் நிதானமாகத் துடிப்பதே அதன் நீண்ட ஆயுளுக்குக் காரணமாக அமைகிறது.

ஆமைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் இனத்தைச் சேர்ந்தது. ஒவ்வொரு கடல் ஆமையும் 200 முட்டைகளை ஒரே சமயத்தில் கூட இட்டுவிடும்.

மிகச்சிறிய ஆமையாக கருதப்படும் 110 மி.மீ., கொண்ட 'ஸ்டிங்காட்' ஆமை யானது வடகிழக்கு அமெரிக்காவில் உள்ளன.



## குடை புதிதாக இருப்பதேன்?

**கோ**டை வெயில் சுட்டெரித்தது. ராமுவுக்கு அவசர வேலையாக கடைக்குச் செல்ல வேண்டியிருந்ததால், கையில் குடையுடன் கிளம்பினான். அதே சமயம் பக்கத்து வீட்டுப் பாலுவும் தன் கையில் குடையுடன் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான். இருவரும் சந்தித்து ஒன்றாக உரையாடிக் கொண்டே சென்றனர். அப்போது ராமுவின் குடையை உன்னிப்பாகக் கவனித்த பாலு 'ராமு, இரண்டு ஆண்டுகளுக்கு முன் நாமிருவரும் சேர்ந்து ஒரே நாளில்தான் கடையிலிருந்து புதிதாகக் குடைகள் வாங்கினோம். என்னுடையது மிகப் பழசாக நைந்து போய் விட்டது. உன்னுடையது மட்டும் நேற்று வாங்கினாற் போல் புதியதாய் இருக்கிறதே, எப்படி? கேட்டான். அதுவா! நான் அடிக்கடி குடையை ரிப்பேர் செய்து வைத்துக் கொள்வதால் பார்க்க அப்படித் தெரிகிறது.

'அது எப்படி ராமு? நானும்தான் எனது குடையை அடிக்கடி ரிப்பேர் செய்கிறேன். என்னதான் நன்றாகப் ரிப்பேர் செய்தாலும், பழைய குடை பழை குடைதானே உன்னுடையது புத்தம் புதிதாக இருக்கிறதே!' என்றான் பாலு.

'அது எப்படி என்று எனக்கும் புரியவில்லை பாலு. இரண்டு வாரங்களுக்கு முன் விறகுக் கடைக்குச் சென்றிருந்தேன். அங்கே நமது லட்சுமணனும் வந்திருந்தான். இருவரும் எங்கள் குடைகளை மேஜை மீது வைத்துவிட்டு விறகு வாங்கினோம். விறகு வாங்கிக்கொண்டு குடைகளை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினோம். அன்று விறகுக் கடையிலிருந்து வந்ததிலிருந்து என் குடை ஏதோ புதியதாகத் தெரிகிறது' என்றான் ராமு.

சரிதான், இதுதான் ராமுவுடைய குடை புதிதாக இருப்பதன் காரணமா என்று தனக்குள்ளே பாலு சிரித்துக் கொண்டான்.



செ.இலக்கியா தரம் 5
யா/கண்டுகுளிமகளிர் கல்லூரி

## தேசிய மலர்கள்

அவுஸ்ரேலியா தேசிய மலர் கொன்றை மலர்கள்.
இத்தாலியின் தேசிய மலர் வெள்ளை லில்லி.
சீனாவின் தேசிய மலர் திராட்சை மலர்.
ஜப்பான் நாட்டின் தேசிய மலர் செவ்வந்திப் பூ.
இங்கிலாந்து நாட்டின் தேசிய மலர் ரோஜா.
எகிப்து நாட்டின் தேசிய மலர் தாமரை.
பிரான்சின் தேசிய மலர் லில்லி மலர்.
கனடா நாட்டிற்கு என்று தனியாக தேசிய மலர் இல்லை. மேப்பிள் இலையை, அரசுச் சின்னமாகக் கொண்டுள்ளது.



### படத்தை கவனியுங்கள்

1. பழங்கள் எங்கேயுள்ளன?
2. சிறுவன் சிலந்தி வலையிலிருந்து விழும் பூச்சியை வியப்புடன் பார்க்கிறான் ஏன்?
3. படத்திலுள்ள சம்பவங்கள் நடைபெற்ற நேரம் என்ன என்று கண்டுபிடியுங்கள்?
4. படத்தில் மொத்தம் எத்தனை வண்டுகள் உள்ளன?
5. சிறுமி கழுத்தில் என்ன தொங்க விட்டிருக்கிறாள்?

*விடைகளை எழுதி அனுப்புங்கள்*



ம.கொலின்ஸ் தரம் 9
யா/முருகமூர்த்தி வித்தியாலயம்

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் தொடரும் கொள்ளை, கொலை தொடர்பாக ஆராய்வதற்கு ஆளுநர் தலைமையில் நடந்த கூட்டம்

வண்ணார்பண்ணை

யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் கொள்ளை, கொலைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண ஆளுநரின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

யாழ். குடாநாட்டில் அளவெட்டி, சங்கானை, உரும்பிராய்ப் பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டும் ஏனைய சில பகுதியில் கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்று வருவதையடுத்து கடந்த வாரம் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, யாழ். கடற் படைத் தளபதி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழில் நடைபெற்றுவரும் கொலை-கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் அடுத்த கட்டமாக அடுத்த வாரம் மேலதிக கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

# மழையில் நனைந்து பழுதடைந்துள்ள யாழ். பொது நூலகத்தின் கதிரைகள்

வண்ணார்பண்ணை

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் பாவனைக்கு இருந்த தளபாடங்கள் மழையினால் நனைந்துள்ளதால் அவற்றைப் பாவனைக்குப் பயன்படுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகர சபையின் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதற்குப் பயன்படுத்துவதற்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இருந்த கதிரைகளே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

ஒன்றுகூடல் முடிவடைந்ததும் மாநகர சபை பணியாளர்களால் எடுத்துச் செல்லப்பட்ட கதிரைகள் நூலகத்திற்கு கொண்டு சென்று அவற்றை வெளியே இறக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

அன்றைய தினம் பெய்த மழையால் கதிரைகள் நனைந்துள்ளன. இதனால் அக்கதிரைகள் பயன்படுத்த முடியாதவாறு காணப்படுகின்றன.

இதேவேளை, யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் ஒருநிறுவனம் ஒன்றின் செயலமர்வு நடைபெறுவதற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும் கேட்போர் கூடத்திற்கான குறித்த கதிரைகள் பயன்படுத்தப்படாது வேறு பகுதி கதிரைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் செயலமர்விற்கு வந்தவர்கள் கடும் விசனத்தைத் தெரிவித்தனர்.

# சொண்ட் நிறுவனம் நடத்தும் ஆய்வரங்கு

(அலுவலக நிருபர்)

யாழ். குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் நற்சிந்தனைகளை தூண்டவும் அபிவிருத்தியில் அவர்களது பங்களிப்பை வழங்கும் பொருட்டும் சொண்ட் என்ற அரச சார்பற்ற நிறுவனம் குடாநாடு தழுவிய பொதுப் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொண்டு மாதாந்த ஆய்வரங்கு ஒன்றை நடத்தி வருகின்றது.

இவ் ஆய்வரங்கை 'குடாநாட்டில் புதிய தொழில் வாய்ப்புக்கள்' என்னும் கருப்பொருளை மையமாக வைத்து யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் தி. வேல்நம்பி ஆய்வுரையை நிகழ்த்தி வருகிறார்.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு அரசடி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சொண்ட் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளதாக அந் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.




சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் வலிமேற்கு பிரதேச செயலக மண்டபத்தில் சங்க தலைவர் எஸ்.சாம்பசிவம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர் முருகேசு சந்திரகுமார் எம்.பி., பிரதேச செயலர் திருமதி தே.பாபு வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி மற்றும் சங்கத்தன் செயலாளர் தலைவருடன் வர்த்தகர்கள் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம். (படம்:- சங்கானை நிருபர்)



நாவற்குழியில் அமைந்துள்ள உவர் நீர்த் தடுப்பணை மிக அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம். (படம் கைதடி நிருபர்)

# 2011 ஆம் ஆண்டு ஆதன வரியை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செலுத்துக

## பிரதேச சபை செயலாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் வசிக்கும் வரியிறுப்பாளர்கள் வருடாந்த மதிப்பீட்டின் படி 2011 ஆம் ஆண்டுக்குரிய ஆதன வரியைக் குறிப்பிட்ட கால எல்லைக்கு முன் செலுத்தி வரிக் கழிவைப் பெற்று நன்மை அடைவதுடன் பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் வரியைச் செலுத்தாதவர்கள் மீது தண்டப் பணமும் சேர்த்து அறவிடப்படும் என்றார். அடுத்த ஆண்டிற்கான ஆதன வரி அறவீட சம்பந்தமாக செயலாளர் தெரிவித்திருப்பதாவது-

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 ஆவது பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தற்போது அமுலில் உள்ள வருடாந்த மதிப்பீட்டிற்கமைய 2011 ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறவீடு செய்யப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதற்குமுரிய வரித் தொகையை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருடத்திற்கான மொத்த வரியில் 10 வீதக் கழிவும் ஒவ்வொரு கந்தாயங்களுக்குரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதி நாளுக்கு முன் செலுத்துவோருக்கு 5 வீதக் கழிவும் வழங்கப்படும்.

வரி செலுத்தத் தவறின் வசிப்பிடங்கள், வெற்றுக் காணிகளுக்கு 15 வீதமும் வியாபார நோக்கங்களுக்காகப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும்.

எனவே இவ்வாண்டு ஆதனங்களுக்குரிய வரியை 31 ஆம் திகதிக்கு முன் நிலுவை இன்றிச் செலுத்தி வரிக் கழிவைப் பெற்றுக்கொள்ளவும் - என்றார்.

# சிறந்த கிரிக்கெட் அணியாக யாழ். பல்கலைக்கழக அணி தெரிவு

(அலுவலக நிருபர்)

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்டத்தில் சிறந்த கிரிக்கெட் அணியாக யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியைத் தெரிவு செய்துள்ளது.

யாழ். குடாநாட்டில் சிறந்த அணிகளைத் தெரிவு செய்யும் தரப்படுத்தல்களில் யாழ். பல்கலைக்கழக அணி 44 புள்ளிகளைப்பெற்று தர வரிசைப் பட்டியலில் முதலிடம் பெற்றது.

இதேவேளை, ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 37 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தையும் சென்றல் விளையாட்டுக் கழகம் 28 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு விழாவும் வெற்றிக் கேடயங்களும் எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தையல் பயிற்சி நெறி

தெல்லிப்பளை

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தில் ஆறுமாத கால இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலை கல்வியை விட்டு விலகியவர்கள் இப்பயிற்சி நெறிக்காக விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இராமநாதன் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதான திறப்பு விழாஅண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் இராம்நாதன் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தினை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா திறந்து வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் கலந்து கொண்டஇராமநாதன் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தெல்லிப்பழை நிருபர்)

# யாழ். முஸ்லிம்களுக்கு வழங்கிய வெள்ள நிவாரணத்தில் குழறுபடி

(எம்.எஸ். லாபிர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் மீள்குடியேறிய பொம்மை வெளியில் வசித்துவந்த 82 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் 41 குடும்பங்கள் ஒஸ்மானியாக் கல்லூரியில் தஞ்சம் அடைந்திருந்தனர்.

கடந்த வாரம் வெள்ள நிவாரணம் 12 குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்படாத ஏனைய மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கிராம அலுவலகர் ஜே/88 பகுதியில் பாதிப்புக்குள்ளாகாதவர் வெள்ள நிவாரணத்தைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்து பொம்மை வெளி மஸ்ஜிதுல் அபூபக்கர் நிர்வாகிகள் யாழ். அரச அதிபருக்கு மகஜரை சமர்ப் பித்துள்ளார்கள்.

மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் மீது பிரதேச செயலர் பாரபட்சமாக நடப்பதாகவும் தொடர்ந்து தம்மைப் புறக்கணிப்பதாகவும் விசனம் தெரிவிக்கப்பட்டுகிறது. அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரி களை விசாரிக்க வேண்டுமெனவும் மீள் குடியேறியுள்ள எமது மக்களின் விடயத் தில் அரச அதிகாரிகள் பாரபட்சம் காட் டும் பட்சத்தில் அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனவும் அம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

## சுயசரிதை நூல் வெளியீடு

கலாநிதி எஸ்.ஜெபநேசன் எழுதிய 'தொடரும் ஆன்மிகக் கல்விசார் பயணம்' எனும் சுயசரிதை நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அருட் தந்தை மரிய சேவியர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை இலங்கை திருச்சபையின் குரு முதல்வர் எஸ்.நேசகுமாரும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துரைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் வெளியீட்டுரையை பேராசிரியர் அ.சண்முகதாசும் நயப்புரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் ஏற்புரையை நூலாசிரியரும் நிகழ்த்தவுள்ளனர்.

# மல்லாகம் பிரதேசத்தில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ள பல வீதிகள்

தெல்லிப்பளை

மல்லாகம் பிரதேசத்தின் கோயில் வீதியிலிருந்து கல்லாரை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் செல்லும் வீதியின் அரைவாசிப் பகுதி புனரமைக்கப்பட்டு மிகுதிப் பகுதி புனரமைக்கப்படாமல் பல ஆண்டுகளாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இவ்வீதியானது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இவ் வீதியால் பயணிக்கும் மக்கள் பலத்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இவ்வீதியானது சுமார் 10 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமலுள்ளது.

இது தொடர்பாக மக்களுடைய வேண்டுகோள்கள் கையொப்பத்துடன் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டும் இதுவரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வீதியால் மழை நேரங்களில் பலத்த சிரமங்களை தாம் எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறே கோயில் வீதியிலிருந்து மில் லேன் வரையுள்ள சிவகாமி அம்மன் கோவில் அமைந்துள்ள மானி மனை வீதியும்அரைப்பங்கு புனரமைக்கப்பட்டு அரைவாசியில் நிறுத்தப்பட்டுள்ளது.

இவ் வீதியும் சுமார் 10 வருடங்களுக்கு மேலா கப் புனரமைக்கப்படாமல் இருப்பதாகவும் இதனால் பலத்த சிரமத்தை எதிர்கொள்வ தாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவேஇவ்விரு வீதிகளையும் புனரமைப்புச் செய்து மக்களுடைய போக்குவரத்துக்கு இலகுவாக்கித் தரும்படி வலி. வடக்கு பிரதேச சபையினரை மல்லாகம் பகுதி வாழ் மக்கள் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

# 'ஒன்றுபடுவோம் ஒற்றுமைப்படுவோம்' கூட்டுறவு மண்டபத்தில் நடந்த கலந்துரையாடல்

எம்.எஸ். லாபிர்

இலங்கை ஜமாதே இஸ்லாமி தப்லீக் ஜமாத் தௌஹீத் ஜமாத்தின் உலமாக்கள் 'ஒன்றுபடுவோம் ஒற்றுமைப்படுவோம்' என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளனர்.

இந்நிகழ்வு யாழ். கூட்டுறவு மண்டபத்தில் கடந்த வாரம் 'யாழ். பிரதேசம் 2020' என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடலின் போது இடம்பெற்றது.

இதில் யாழ். முஸ்லிம்களின் அரச சார் பற்ற நிறுவனங்கள் பள்ளிவாசல் பரிபாலன சபையினர் மற்றும் பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர்.

யாழ். முஸ்லிம்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் எதிர்காலத்தில் மீள் குடியேறிய எமது பிரதேசத்தை வளப்படுத்தி உரிமைகளுடன் வாழ்வதற்கான திட்டங்களை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். இதற்காக சகலரும் ஒற்றுமையுடன் செயற்படுவதை உறுதி செய்வதற்காக அனைவரும் ஒன்று சேர்ந்து பொது அமைப்பின் கீழ் செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

யாழ். பிரதேசம் 2020 அமர்வை அஷ்ஷேஷ்க் ஐ.அஸ்மி நெறிப்படுத்தினார். இதன் பொருட்டு இம் அமர்வில் கலந்து கொண்ட அனைத்து பிரதிநிதிகளும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் முதலாவது செயலமர்வில் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# எதிர்ப்புத் தினமும் நினைவு தினமும்

ஏகாதிபத்திய உலக மயமாதலின் பாதிப்புக்களுக்கு எதிராக விழிப்படைவோம் என்னும் தொனிப் பொருளின் கீழ் ஏகாதிபத்திய எதிர்ப்பு தினமும் கியூப விடுதலைத் தின நினைவு கூரலும் யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

நாளை முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கே.ஏ.சீவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சி.கா. செந்திவேல், எஸ்.சிவபாலன், ரி.வி. கிருஷ்ணசாமி, மு. தியாகராஜா, க. தணிகாசலம் , த. பிரகாஷ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். நன்றியுரையை கா.கதிர்காமநாதன் வழங்கவுள்ளார்.

இந் நிகழ்வை சர்வதேச மக்கள் ஒத்துழைப்பு அமையத்தின் வட பிரதேச கிளை ஏற்பாடு செய்துள்ளது.

# யாழ்.பல்கலைக்கழக வெளிவாரித் தேர்வுப் பரீட்சை

தெல்லிப்பளை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை 2009 இன் கலை முதல் தேர்வுப் பரீட்சை ஜனவரி மாதம் 17ஆம் திகதி திங்கட் கிழமை தொடக்கம் பெப்ரவரி 5 ஆம் திகதி வெள் ளிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்தி லும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

பரீட்சை தொ[illegible] அனைத்தையும் பரீட்சை அனுமதி அட்டையும் 12ஆம் திகதி தொடக்கம் வெளிவாரிப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு முதல் வடக்கு மாகாண சபை அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கும்

## வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி

(வட்டுக்கோட்டை நிருபர்)

அடுத்த வருட முற்பகுதியில் இருந்து வடக்கு மாகாண சபை அலுவலகங்கள் யாவும் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் இயங்கவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை காரைநகரில் புதிய கோட்டக்கல்வி அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆளுநர் தொடர்ந்து பேசுகையில் ,

ஜனாதிபதியின் வழிகாட்டலில் அடுத்த ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். யாழ். மாவட்டத்தில் அரசாங்கத்தின் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ்,114 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. காரைநகரில் இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயமும் ஒன்றாகும்.

நாங்கள் உங்களுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுத் தருவோம். நீங்கள் பிள்ளைகளின் கல்வி, விளையாட்டுத் துறைகளின் பெறுபேறுகளை அதிகரிக்கச் செய்யவேண்டும். இந்தப் பாடசாலையின் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தைப் புனரமைப்பதற்கு 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தனது உரையில் ,

இது வரை காலமும் திருகோணமலையில் இயங்கி வந்த வடக்கு மாகாண சபை அலுவலகங்கள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் முயற்சியின் பயனாக யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் இயங்க இருப்பதால் வட மாகாணத்தின் பல்வேறு துறைகளின் அபிவிருத்திப் பணிகளை இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொள்ளமுடியும்.

ஒரு காலத்தில் கல்வியில் முன்னேற்றம் கண்ட நிலையில் இருந்த இப்பிரதேசங்களின் கல்வித் தரம் அண்மைய காலங்களில் குறைவடைந்து வருகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்து மீண்டும் உயர் நிலைக்குக் கொண்டுவரப்படல் வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செய்யப்படுவதோடு நேர்த்தியான கல்விசார் கட்டமைப்புக்களும் உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

வடமாகாண கல்வி விஞ்ஞான பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.இளங்கோவன் ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, ஈ.பி.டி.பி. வலிகாமம் பிரதேச இணைப்பாளர் ஜீவன் , காரைநகர் பிரதேச பொறுப்பாளர் ரஜனி, உட்பட ஏராளமான பொது மக்கள், அதிபர், ஆசிரியர், மாணவர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

(நெடுங்கேணி நிருபர்)

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை மாசி மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குகளின் வேண்டுகோளுக்கிணங்க இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துள்ளது. இப்பரீட்சையை எதிர்நோக்கவுள்ள பரீட்சார்த்திகள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை லீக்குகளுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவத்தை கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் யாழ்ப்பாணப் பரீட்சார்த்திகள் யாழ். உதைபந்தாட்ட லீக்கிலும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இது தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு யா/ தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதென பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் ரி.வரதராஜன் தெரிவித்துள்ளார்.

# கைதடி கிழக்கில் இரு மாடுகள் திருட்டு

கைதடி

கைதடி கிழக்கில் இரு வீடுகளில் பெறுமதியான நாம்பன் மாடுகள் இரண்டு கடந்த ஞாயிறு இரவு களவாடப்பட்டு உள்ளது. திருடர்கள் ஓசைப்படாமல் மாடுகளைத் திருடடிச் சென்றுள்ளனர். காலையில் மாடுகளைத் காணாத உரிமையாளர்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து சாவகச்சேரி பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் இது குறித்து புலன் விசாரணைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அன்றைய தினம் இதே பிரதேசத்தில் வீடு ஒன்றில் இடம் பெற்ற திருட்டு முயற்சியொன்றும் பொது மக்கள் உசாரடையவே தடுக்கப்பட்டது.

இதே வேளை விழிப்புக் குழுக்களை அமைத்து இரவு நேரக் காவல் கடமையில் ஈடுபடும் பணி முழுமையடையவில்லை. கைதடியின் சகல சனசமூக நிலையங்களும் இப்பணியில் முழுமையாக ஈடுபடவில்லை. ஐந்து சனசமூக நிலையங்கள் மட்டுமே தமது உறுப்பினர்களைக் கொண்டு காவல் கடமையில் நாளாந்தம் ஈடுபடுகின்றனர். ஏனைய 5 சனசமூக நிலையங்களும் இப்பணியில் முழுமையாக ஈடுபட்டால்தான் காவல் பணியும் நிறைவு பெறமுடியும். இப் பிரசேத்தில் கடந்த இரு மாதகாலமாகவே நடைபெறும் பகல், இரவுத் திருட்டுக்கள் குறித்த எச்சரிக்கை உணர்வு பொது மக்களிடம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் அவ்வப்போது நடைபெறும் களவுச்சம்பவங்கள் பொது மக்களைக் கவலையுறவே செய்கின்றது.

# இலங்கை - ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையம் ஆட்சேர்ப்பு

ஏழாலை

இரத்மலானை இலங்கை - ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இப்பயிற்சி நிலையத்தில் டீசல் என்ஜின் இயந்திரவினைஞர், ஒட்டுநர், மின்னியல் ஆய்வாளர், இயந்திரவினைஞர் ஆகிய நான்கு பாடநெறிகளுக்குப் பயிலுநர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இப் பயிற்சிநெறியில் பயில விரும்புவோர் 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராகவும் கல்வித் தகைமை சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன், முதல் தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிநெறிக்கு எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை மூலம் பயிலுநர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவுக்கான காசுக் கட்டளையுடன் விண்ணப்பப் படிவத்தினை ஜனவரி மாதம் 17 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் 'பணிப்பாளர், இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில் பயிற்சி நிலையம், கல்தெமுல்ல வீதி, இரத்மலானை' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிற்பயிற்சி சிங்கள மொழியில் மட்டுமே நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





ஆவரங்கால் மேற்கு சாந்தாதோட்டம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது குருக்குள்மார் கும்பங்களை வீதிவலமாக எடுத்துவந்து அபிஷேகம் செய்வதை படங்களில் காணலாம். (படங்கள்:- அச்சுவேலி நிருபர்)

# கௌரவிப்பு

வேலணை

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மிருதங்க விரிவுரையாளர் லயஞானவாருதி சி.மகேந்திரன் அண்மையில் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் புகழ் பூத்த மிருதங்க வித்துவதான் என். இராமநாதனின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவாகக் கருதப்பட்ட குப்பைக் கூழங்கள் இன்று வளமாகவும் மூலப் பொருளாகவும் பயன்படுகின்றன

## சுற்றாடல்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா

(வத்துகாமம், கண்டி நிருபர்கள்)

குப்பைக் கூழங்கள் ஒரு காலத்தில் கழிவாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று அவை ஒரு வளமாகவும் மூலப் பொருளாகவும் பயன்படுகிறது என்று சுற்றாடல் துறை அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்தார்.

பொல்கொல்லை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி மத்திய நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார். மத்திய மாகாண உள்ளூராட்சி அமைப்புக்களின் தலைவர்களுக்கு திண்மக் கழிவு முகாமை தொடர்பாக ஒழுங்கு செய்யப்பட்ட அமர்விலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

குப்பைக் கூழங்களில் இருந்து இன்று உயிரியல் வாயு தயாரிக்கப்படுகிறது. கொம்போஸ்ட் பசளை தயாரிக்கப்படுகிறது. சிலர் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து மீள் சுழற்சி முறையில் பல்வேறு பொருட்களை செய்கின்றனர்.

அத்துடன் கடதாசி, இரும்பு, தகரம் போன்றவைகளும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. சுருங்கக் கூறின் அவை சிலரது கைத் தொழில் மூலப் பொருளாக உள்ளன. எனவே குப்பைக் கூழங்கள் என்பவை ஒரு வளமாகும்.

குப்பைக் கூழங்களை கழிவுகள் என்று வீசி விடாமல் அவற்றை முறையாக முகாமை செய்து பயனுள்ள வகையில் ஆக்கிக் கொள்வது முக்கியமாகும்.

இன்று உள்ளூராட்சி அமைப்புக்களுக்குரிய பிரச்சினை இந்த கழிவுப் பொருட்களாகும். எனவே முறையாக திட்டமிட்டு அவற்றை முகாமை செய்து பயனுள்ள வகையில் முன் எடுத்துச் செல்ல உள்ளூராட்சி அமைப்புக்கள் முறையான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாம் எதிர்பார்த்துள்ளோம்.

சுற்றாடல் சாபமிட்டால் அதன் எதிர் விளைவுகளை யாராலும் தவிர்த்து கொள்ள முடியாது. சுற்றாடலுக்கு நாம் தீங்கு விளைவிக்கும் போது அது எமக்கு எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.

கண்டி பிரிம்ரோஸ் குன்றில் கட்டப்பட்ட நான்கு மாடிக் கட்டிடம் மண்ணோடு மண்ணாகப் புதைந்தது. இது போன்ற தீய விளைவுகள் எதிர்காலத்தில் இன்னும் பல மடங்கு நடக்கலாம். எனவே தடுப்பு முயற்சிகளில் நாம் இறங்க வேண்டியுள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 5000 அடிக்கு மேற்பட்ட நீரேந்து பகுதிகளையும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக மாற்றவுள்ளோம். கண்டி ஹந்தானைக்கு மேல் உள்ள ஒரு பகுதியை நாம் அவ்வாறு பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக மாற்றியுள்ளோம்.

இவ்வாறு இன்னும் பல பகுதிகளையும் பாதுகாக்கவுள்ளோம். அவற்றில் 90 சதவீதமானவை மத்திய மலை நாட்டிலேயே உள்ளன. எதிர்காலத்தில் வீடுகளை அமைக்கும் போது மண்ணின் தன்மை பற்றிப் புவியியற் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளும் ஒருமுறை முன் வைக்கப்படலாம் என்றார்.

# அதிகாரத்தை வலுப்படுத்தும் பொருட்டு சமூகத்தை துண்டாடும் நிலை இல்லாதொழிக்கப்படவேண்டும்

## ம.ம.மு. வின் கொத்மலை பிரதேச அமைப்பாளர்

கொத்மலை,

தனியொரு மனிதரின் அதிகாரத்தை வலுப்படுத்தும் பொருட்டு சமூகத்தை துண்டாடும் நிலைமை இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் கொத்மலை பிரதேச அமைப்பாளர் இரா. மணி சேகரன் தெரிவித்தார்.

கொத்மலை பெரட்டாசி தோட்டத்தில் இடம்பெற்ற மலையக மக்கள் முன்னணியின் அங்கத்தவர்களுடனான சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மணிசேகரன் இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்:- அரசியல் பலம் என்பது ஒவ்வொரு சமூகத்திற்கும் மிகவும் இன்றியமையாததாகும். அரசியல் பலத்தின் ஊடாக ஒவ்வொரு சமூகத்தவர்களும் பல்வேறு உரிமைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இதனை உணர்ந்து அரசியல்வாதிகள் தமது சமூகத்துக்கு உரிய சேவையினை பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். சுய இலாபங்களுக்காக தம்மைச் சார்ந்த மக்களை காட்டிக்கொடுக்கவோ அம்மக்களை அடகு வைத்து பிழைப்பு நடத்தவோ அரசியல்வாதிகள் முற்படுதல் கூடாது. இது தம்மை நம்பி வாக்களித்து அரசியலுக்கு அனுப்பி வைத்த மக்களுக்கு அரசியல்வாதிகள் செய்யும் துரோகமாகும்.

மலையக சமூகத்தவர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் பொருட்டு இன்னும் பல்வேறு உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே இம்மக்களுக்கு தேவையான உரிமைகளை அரசியல் வாதிகள் தமக்கிடையிலான பேதங்களை மறந்து ஒன்றுபட்டு பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். தோட்டப்புறங்களில் இளைஞர்களை உள்ளடக்கிய அபிவிருத்தி குழுக்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இவ் அபிவிருத்திக் குழுக்களின் ஊடாக தோட்டத்தின் தேவைகள் இனம் காணப்படுவதோடு, அத்தேவைகளை நிறைவு செய்து கொடுக்க அரசியல் தொழிற்சங்கவாதிகள் உறுதி பூணவேண்டும்.

மக்களை ஒன்றுபடுமாறு தலைவர்கள் வலியுறுத்துகின்ற அதேவேளை தலைவர்களும் ஒன்றுபட்டு மலையக சமூகத்தின் எழுச்சிக்காக தோள் கொடுக்க வேண்டும்.

இனவாத சக்திகள் சிறுபான்மையினரை சகல துறைகளில் இருந்தும் ஓரம் கட்டும் தந்திரோபாயத்தை மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில் சிறுபான்மை சக்திகள் ஒன்றுபட்டு சவால்களை வெற்றிகரமாக சமாளிக்க வேண்டும்.

இல்லையேல் மலையக சமூகத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்றார்.

# பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அமரக்கூடிய வகையில் ஜெயதிலக மைதானம்

## விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த

(நாவலப்பிட்டி மேலதிக நிருபர்)

நாவலப்பிட்டி ஜெயதிலக விளையாட்டு மைதானம் மத்திய மாகாணத்தின் சிறந்த விளையாட்டு மைதானமாக நவீனமயப்படுத்தப்பட்டு பிரகாசிக்கும் காலம் வந்து விட்டது. இவ்விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுகின்ற விளையாட்டு நிகழ்வுகளை 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் அமர்ந்திருந்து பார்த்து ரசிக்கக் கூடிய வகையில் சகல வசதிகளுடன் அடுத்த வருடத்துக்குள் பூரணப்படுத்தப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே குறிப்பிட்டார்.

நாவலப்பிட்டி அப்கன்றி லயன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாவலப்பிட்டி ஜெயதிலக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ்விளையாட்டு விழாவில் கிரிக்கெட், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கராத்தே, ஜுடோ உட்பட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் சங்கி விளையாட்டு கழகத்தின் முக்கியஸ்தர்கள் உட்பட நகரசபைத் தலைவர் நிசாந்த ரணசிங்க நகர சபை உறுப்பினர்கள் மற்றும் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த பார்வையாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ந்தும் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே கூறுகையில்,

இவ்விளையாட்டு மைதானம் ஏற்கனவே பல அபிவிருத்தி முன்னெடுப்புக்களை செய்துள்ளது. நான் விளையாட்டுத் துறை அமைச்சைப் பொறுப்பேற்றபின் 2 ஆம் கட்டத்தில் இந்த மைதானத்திற்கு மேலும் பல நவீன வசதிகளை மேற்கொள்வதற்கு வசதியும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. இதற்கான நிதி வசதி ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்திற்கமைய மேற்கொள்ளப்படும். நான் விளையாட்டுத்துறை அமைச்சைப் பொறுப்பேற்றவுடன் இம்மைதானத்திற்கு முதலாவதாக 300 இலட்சம் ரூபாவை ஒதுக்கினேன்.

அடுத்த வருட முதல் மாதத்தில் இம்மைதானத்தின் பார்வையாளர் மேடையைப் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

மேலும் இம் மைதானத்தில் நீர்த் தடாகம் ஒன்றையும் ஏற்படுத்தவுள்ளேன்.

எனவே, விளையாட்டு மைதானத்தை மாத்திரம் அமைத்தால் போதாது. விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தி பயனடையக்கூடிய விளையாட்டு வீரர்களும், பார்வையாளர்களும் அவசியம்.

அதற்காகவே இந்த அப்கன்றி விளையாட்டுக் கழகத்தை குறுகிய காலத்துக்குள் ஏற்படுத்தினோம். பல்வேறு விளையாட்டுக் குழுக்கள் இக்கழகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள மிகச் சிறந்த விளையாட்டுக் கழக வீரர்களை அழைத்து இந்த மைதானத்தில் போட்டிகளை நடத்தவுள்ளோம். மேலும் கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், றகர், கிரிக்கெட் போன்ற விளையாட்டுத் துறைகளின் உயர் அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு கண்காட்சி போட்டிகளை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

மேலும் மெலிபன் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை இந்த மைதானத்தில் நடத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் இந்த மைதானத்தில் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள் பல இடம் பெறும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசு வளர்ப்போம் பசுவினைப் பாதுகாப்போம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

பசுவானது வீட்டிற்கு மகிழ்வளிப்பதாகக் காணப்படுகின்றது. சாணம் மெழுகிய நிலம், சாணிநீர் தெளித்த முற்றம், சாணப்பரிமணமான வீபூதிப் புழக்கம், பால் கொதிக்கும் நறுமணம், தயிர் கடையும் மத்தோசை, தாக சாந்திக்கு மோர் இருத்தல் என்பன வீட்டிற்கு மகிழ்வு தரும் செயற்பாடுகளாகும்.



திருமூலர், சண்டேசுவரர், ஆனாய நாயனார், மனுநீதி கண்ட சோழன், ஞானப்பிரகாச முனிவர் முதலானோர் பசு ஓம்புதல் மூலம் சிவகதி அடைந்தவர்கள். இவர்களுடைய செயலை நோக்கின் சுந்தர நாதர் என்பவர் வரும் வழியில் மூலன் என்னும் பசு மேய்க்கும் இடையன் இறந்து கிடப்ப அவனைச் சூழ்ந்து பசுக்கள் கண்ணீர் சொரிந்து அழுவதைக்கண்டு தன் யோக சித்தியினாலேயே தனது உடலை மரத்தின் மேல் கிடத்தி விட்டு மூலன் உடலிற் புகுந்து பசுக்களை மகிழ்வித்தவர். மீண்டும் வந்த போது தன் உடலைக் காணாமையினால் மூலனுடைய உடலுடன் வாழ்ந்து பசு காத்ததாலே திருமூலர் ஆனார்.

பசு மேய்ப்பவன் பசுவைக் கோலால் அடிப்பதைக் கண்டு மனம் பொறுக்காது மேய்ப் பவனை விலக்கி தானே அப்பசுக்களை மேய்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பசுவினை மேய்க்கும் காலத்தில் அப்பசுக்கள் தாமாகச் சொரிந்த பாலைக்கொண்டு சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகம் புரிந்து வழிபடலானார்.

இச் செயலைப் பாதகச் செயல் எனக் கருதிய தந்தையர் உண்மையை அறியாது அப்பாற்குடத்தைக் காலால் இடறினார். அவ்வேளை விசாரசருமர் தன் சிவபூசைக்கு இடையூறு செய்தவர் காலை சிறு தடியால் அடிக்க அது மழுவாகித் தந்தையின் காலைத்துண்டித்தது.

தந்தையாக இருந்தும் சிவபூசைக்கு இடையூறு செய்தவரைத் தண்டித்த உறுதி கண்ட சிவன் இருவருக்கும் அருள்புரிந்து விசாரசருமருக்கு சிவ வழிபாட்டின் பயன் நல்கும் சண்டேஸ்வரர் பதவியைக் கொடுத்தார். இன்று சிவாலயங்களில் சிவவழிபாட்டின் பயனைத் தரும் தெய்வமாகச் சண்டேஸ்வரர் விளங்குகின்ற சிறப்பு பசு ஓம்பலினாலே என்பது நினைவுக்குரிய விடயமாகும்.

ஞானப்பிரகாசர் என்பவர் இலங்கையில் அந்நியராட்சி புரிந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் கொலையும் புலாலும் மறுத்த சைவமக்கள் வாழ்ந்த காலத்தில் போர்த்துக்கேய பறங்கியர்க்கு உணவாக நாளுக்கொரு வீட்டார் பசுக்கொடுக்க வேண்டிய கொடிய சட்டம் நடைமுறைக்கு இருந்தது. தன் முறை வந்த போது பசுக்கொலையாகிய கொடிய பாவம் செய்வதிலும் பார்க்கப் பரதேசம் போவதே மேலெனக்கருதி இரவோடு இரவாக கடல்கடந்து இந்தியா சென்றார். மேற்கூறிய அருளாளர்கள் பசுவோம்பச் சிவகதி பெற்றவர்கள். இச்சிறப்புக்குரிய பசுவானது பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

**பசுப்பாதுகாப்பு**

பசுவின் குருதியானது ஒருதுளி நிலத்தில் வீழ்வதாயின் அதனின்று பலகோடி அசுரர்கள் வந்துதித்து உலகை நாசம் செய்வார். நமது முன்னோர் பசுக்கள் கூடுகின்ற இடங்களில் அவை தாகம் தீர்ப்பதற்கு வசதியாக தண்ணீர் தொட்டி கட்டி எந்நேரமும் நீர் நிரப்பியிருக்கும். அவற்றின் பக்கத்தில் பசுக்கள் தமது உடலில் ஈக்கள் முதலியவற்றால் உண்டாகும் காயங்கள் தீர உடலை உரோஞ்சுவதற்கும் வசதியாக உருண்டையான உயரமான ஆவுரோஞ்சு கற்களை நட்டு வைத்தார்கள்.

பசுக்களுக்கான சாலையை விதிப்படி செய்து ஆற்றுமண், ஓடை மண், புற்று மண், வில்வத்தடி மண், அரசடி மண் என்பவைகளால் நிலப்படுத்தி முதிர் கன்று, இளங்கன்று, நோயுள்ள கன்றுகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைக்க வேண்டும். நாள் தோறும் கோசல கோமயங்களைப் புறத்தே நீக்கி சுத்தம் செய்ய வேண்டும் என ஆறுமுகநாவலர் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இத்தகு சிறப்பிற்குரிய பசுவை, வழிபாட்டில் முதன்மை பெறும்பசுவை திருமூலரால் சிவபூமி என அழைக்கப்படும் ஈழநாட்டில் இன்றைய சூழலில் இறைச்சிக்குப் பயன்படுத்துவது பெருவேதனை தரும் விடயமாகும். பசுவைக் கொல்லுதல் பெரும்பாவமாகும். திருஞான சம்பந்தர் பசுவாழ்க என்று பாடுகின்றார். பசு இல்லாத வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி கிடைக்காது இலட்சுமி தரிக்க மாட்டாள். அவ் வீடு சுடுகாட்டிற்கு சமமாகும் என்பது சைவ ஆன்றோர் வாக்காகும்.

முடிவாக நோக்குகின்ற போது 'அரிது அரிது மானிடராதல் அரிது' என ஔவையார் சுட்டுகின்றார். ஆறறிவுடைய மனிதன் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவன். அரிய சிறப்புள்ள மனிதனிடம் சமுதாயம் உயரிய பண்புகளை எதிர்பார்க்கின்றது. மனிதன் தன்னைப் பெற்ற தாய்மீது கொண்டுள்ள பற்று தாயின் பணி தொடரும் பசுவிடத்திலும் தொடர்தல் உயர் தர்மமாகும். பாலர் முதல் வயோதிபர் வரை உயிர்வாழ்வதற்கு உகந்த அமுதம் பசுவின் பாலாகும். தாய் பாலூட்டி உயிர் தந்தது போல இத்தரணியில் உயிர் காக்க உதவும் பசுவைத் தெய்வ நிலையில் ஆன்றோர் வைத்துப் போற்றினார்.

தற்காலத்தில் தடுமாறி பகுத்தறிவை இழந்து பசுக்களைப் பேணாதது மட்டுமன்றி உணவாக்கிப் பணம் பெருக்கும் இழி நிலையைச் செய்கிறார்கள். பசுவைக் கொன்று தின்னும் இழி பழக்கம் வெளிநாட்டு வாசிகளாலும் பறங்கியராலும் இங்கே வந்தது. அது சைவநெறிக்குப் புறம்பான செயலாகும். இப்பசுவை உண்பதன் ஊடாக இழி நிலைக்குச் செல்லுகின்றார்கள். புலால் உண்பவன் புலையன் என்பதை மறந்து யார் யாரையோ புலையன் எனப் போலித் தனம் காட்டுவது கொடுமையல்லவா?


'ஒரு மாடு குடும்பம் காக்கும் ஒன்பது மாடு குலம் காக்கும்' எனும் கோட்பாட்டுக்கு அமைய மாட்டைத்தின்று இழி நிலைக்கு செல்லும் நிலை மாறி பசுவைக்காத்து எமது சைவநெறி வந்த வழிவாழ்ந்து எமது பண்பாட்டு கலாசார அடியில் நாம் வாழ்வது எம் அனைவரினதும் கடமையல்லவா? இப்புண்ணிய கைங்கரியத்தில் அனைவரும் இணைந்து பசுவைப் பாதுகாத்துச் சிவ புண்ணியப் பேற்றை அடைய உறுதி கொள்வோம்.

(முற்றும்)

**எஸ்.ரி.குமரன்**

# எக்ஸெல் : கீழாகக் கூட்டுத்தொகை

எக்ஸெல் வேர்க் சீற்றில் இதனைப் பலர் கவனித்திருக்க மாட்டீர்கள். வேர்க் சீற் ஒன்றில் சில செல்களில் எண்களை என்டர் செய்திருக்கிறீர்கள். திடீரென இவற்றின் கூட்டுத் தொகை என்னவென்று அறிய ஆவல். என்ன செய்வீர்கள்? இன்னொரு செல்லைத் தேர்ந்தெடுத்து அதில் குறிப்பிட்ட செல்களில் உள்ள எண்களைக் கூட்டுவதற்கான பட்டனை அளிப்பீர்கள்.




அந்த முறையை பின்பற்றி நீங்கள் குறிப்பிட்ட செல்களில் உள்ள எண்களின் கூட்டுத் தொகை, பார்முலாவிற்கான செல்லில் எப்போதும் கிடைக்கும்.

இந்த ஏற்பாடு நிரந்தரமாக ஒரு குறிப்பிட்ட செல்லில் வேண்டும் என்றால் மேற்கொள்ளலாம். இடையே தற்காலிகமாக வேண்டும் எனில் எப்படி செயற்படலாம்?

எக்ஸெல் அதற்கு வழி தருகிறது. நீங்கள் கூட்டிப் பார்க்க விரும்பும் செல்களின் எண்கள் உள்ள செல்களைத் தேர்ந்தெடுத்தாலே போதும். வேர்க் சீற்றின் கீழாக ஸ்டேட்டஸ் பாரில் இந்த கூட்டுத் தொகை தானாகவே காட்டப்படும். நீங்கள் இதற்கு முன் இதனைக் கவனித்திருக்க மாட்டீர்கள். கீழாக ஸ்டேட்டஸ் பார் இல்லை என்றால் View மெனு சென்று Status Bar ஆப்ஷனை கிளிக் செய்திடவும். ஒன்றுக்கு மேற்பட்ட செல்களில் எண்களை வைத்துக் கொண்டு அவற்றைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினாலே இந்த கூட்டுத் தொகை காட்டப்படும். இதில் என்ன வேடிக்கை என்றால், தேர்ந்தெடுக்கத் தொடங்கிய உடனேயே ஒவ்வொன்றாகக் கூட்டிக் காட்டப்படும். அதாவது, எடுத்துக் காட்டாக, எழு செல்களில் எண்களைத் தந்துள்ளீர்கள். முதல் இரண்டு செல்களைத் தேர்ந்தெடுத்தவுடனேயே, அதன் கூட்டுத் தொகை காட்டப்படும். அடுத்து ஒவ்வொன்றாகச் செல்லச்செல்ல, இந்தக் கூட்டுத்தொகை அதற்கேற்ப மாறும். கூட்டுத்தொகைக்கு முன் Sum என்று காட்டப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் தொடரும் கொள்ளை-கொலைகள்

# அவிழாதா மர்ம முடிச்சுகள்



2010 ஆம் ஆண்டின் கடைசி நாள் இன்று. யாழ்ப்பாணத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சத்துடன் தொடங்கி, அச்சத்துடனேயே முடிவடையப் போகின்றது.வசந்தகாலம், மாரிகாலம்,



நித்தியானந்தக் குருக்கள்



சிவலிங்கம்

இலையுதிர் காலம் இப்படி நிறையப்பருவ காலங்கள் வருகின்றன. அந்தவரிசையில் இப்போது யாழ்ப்பாணத்தில் கொலைக் கலாசாரக்காலம். அடுக்கடுக்காக கொலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. கொள்ளைகளுக்கும் குறைவில்லை. இடையிடையே பாலியல் பலாத்காரங்களும் தலைதூக்குகின்றன. கடத்தல், கப்பம் கோருதல் என்பனவும் வழமையாகிவிட்டன. இத்தகைய சூழலில் தான் 2010 ஆம் ஆண்டின் இறுதிக்கணங்களை யாழ்ப்பாணத்து மக்கள் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வருடத்தின் முற்பகுதியிலும் இப்படியான இருண்ட சூழலுக்குள் தான் யாழ்ப்பாணம் சிக்கியிருந்தது. எங்கும் கொலைகளும், வெள்ளைவான் கடத்தல்களும் நிறைந்து போயிருந்தன. குறிப்பாக சிறுவர்களே அதிகளவில் கடத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. இதனால் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப பெற்றோர் பயந்தனர்.

இதில் இன்னொரு முக்கிய விடயம் என்னெவெனில் கடத்தப்பட்ட அனைவரும் - சிறுவர்கள் கூட- அந்தக் கடத்தல்காரர்களிடமிருந்து தப்பி வந்ததுதான்.

இவ்வளவு கஷ்டப்பட்டுக் கடத்திய வர்கள், தம்மால் கடத்தப்பட்டவர்கள் கண்முன்னாலேயே தப்பியோடும் அளவுக்கு அலட்சியமாகவா இருப்பார்கள்? எனவே இவையெல்லாம் வேண்டுமென்றே ஒரு குழுவால் பரபரப்பை உண்டாக்கவோ அன்றில் பயங்கரமான சூழல் நிலவுவது போல காட்டவோ நடத்தப்பட்ட நாடகங்கள் என்றே பலரும் நம்பினர்.

இந்நிலையில் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இருவர் கடத்தப்பட்டு, யாழ்ப்பாணம் சுண்டுக்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போது, பொலிஸாரின் சாதுரியமான நடவடிக்கை ஒன்றின் மூலம் மீட்கப்பட்டனர். அத்துடன் கடத்தல்காரர்களும் கைதாகினர். கொஞ்ச நாட்களா தப் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்த விடயம் சிறிது காலத்தில் மறக்கப்பட்ட விடயங்களில் ஒன்றாக மாறியது. ஆனாலும் கடத்தல்களும், தப்பித்தல்களும், கொலைகளும், கொள்ளைகளும் தொடரவே செய்தன.

அந்தவேளையில் இந்தச்சம்பவங்கள் தொடர்பாக தீவிர நடவடிக்கை எடுக்கப் படும் என்றும், சுற்றுக்காவல் பணிகளும் அதிகரிக்கப்படும் என்றும், படைத்தரப்பினர்



அறிவித்தனர். சொல்லிவைத்தாற் போல படையினரின் இந்த அறிவிப்பின் பின்னர் கடத்தல்காரர்கள் வாலைச்சுருட்டிக் கொண்டார்கள். கொள்ளைகளும் குறைந்தன.

இப்போது திரும்பவும் அதேகாட்சிகள் யாழ்ப்பாணத்தில் மேடையேறத் தொடங்கி யுள்ளன. ஆனால் இம்முறை முன்னரைப் போன்றில்லாது புதிதாகத் துப்பாக்கிகளும் [illegible] இந்த நாடகத்தில் பங்கேற்கத் தொடங்கியுள்ளன. சங்கானையில் டிசம்பர் 11 ஆம் திகதி அர்ச்சகர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த சிலர் துப்பாக்கிகளைத்துணைக்கு வைத்துக் கொண்டு பேயாட்டம் போட்டனர். விளைவு? சங்கானை முருகன் கோயில் பிரதம குருக்கள் உயிரிழக்க, அவரது இரு மகன்மாரும் படுகாயமடைய வேண்டியநிலை ஏற்பட்டது.

ஆனாலும் இது குறித்து பலதரப்பினரும் கடுமையான தொனியில் கண்டனங்களை வெளியிட்டனர். நிலைமை கட்டுமீறிச் செல்வதால் படையினர் தீவிர விசாரணையில் குதித்தனர். அதன் பயனாக, கொலையாளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களும், அவர்களுக்கு துப்பாக்கிகளை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு இராணுவத்தினரும் கைதுசெய்யப் பட்டதாக யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி ஹத்துருசிங்க அறிவித்தார்.

இந்தப்பரபரப்பு ஓய்வதற்கிடையில் அடுத்த கொலை உரும்பிராயில் விழுந்தது. வலிகாமம் வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் மா.சிவலிங்கம் அவரது வீட்டில் வைத்து மகளின் கண்முன்னாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். குருக்களின் வீட்டிலும் பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வீட்டிலும் கொள்ளையடிக்க முற்பட்டவர்களே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றபோதும், உண்மை வேறாக இருக்கலாமென்ற சந்தேகங்களும் பலரிடம் தோன்றாமலில்லை.

இப்போது மூன்றாவது கொலையும் [illegible] பகுதியில் நடந்திருக்கிறது. 27 ஆம் திகதி இனம் தெரியாத இருவ ரால் கடத்திச் செல் லப்பட்ட மகேந்திர செல்வம் திருவருட் செல்வன் (வயது- 28) என்ற வாகனத் தரகர் 29 ஆம் திகதி வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில், சடல மாக மீட்கப்பட்டார்.

இத்தகைய கொலைகள் யாழ்ப்பாணத்தில் கொலைக் கலாசாரக் காலம் மீண்டும் ஆரம்பமாகிவிட்டதோ என்று மக்களைப் பயம் கொள்ளவைத்துவிட்டது. இப்போது ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்பது போன்று மாலை 7 மணிக்கு முன்னதாகவே வீடுகளை இறுகத்தாழிட்டு, பயத்துடன் -உறக்கமின்றியே-இரவுகளைக் கழித்து வருகின்றனர்.

மேற்குறித்த சம்பவங்கள் நிகழ்ந்த பின்னரும் அவை போன்ற நிகழ்வுகள் தொடராதிருக்க படையினரும், பொலி ஸாரும் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறி விட்டனர் என்ற எண்ணம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருந்திருந்தால் கொலையாளிகள் தப்பிச் சென்றிருக்க முடியாதென்றும், சம்பவங்கள் நடந்தவுடன் அந்த இடத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்துபவர்கள் அடுத்த நாளே அந்தப்பாதுகாப்பு ஏற்பாடுகளை தளர்த்தி விடுகிறார்கள். இது குற்றவாளிகளுக்கு வசதியான விடயமாகி விடுகின்றது. தாக்குதலுக்குப் பயன்படுத்திய ஆயுதங்களை மறைத்து வைத்து விட்டு தப்பிச் சென்று, பின்பு அவற்றை தம் வசதிப்படி அவர்கள் எடுப்பதற்கு இத்தகைய பாதுகாப்பு ஓட் டைகள் வழிகோலுகின்றன.

எனவே இவ்வாறன சம்பவங்கள் தொட ராதிருக்க படையினரும், பொலிஸாரும் வழி செய்வதுடன், குற்றவாளிகளையும் கண்டுபிடிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்ப்பாணத்து மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அப்போதுதான் மீண்டும் நிம்மதியான வாழ்வுக்குள் அவர்கள் திரும்பிச் செல்ல முடியும். இந்த நிம்மதியான சூழலை உருவாக்குவதே அரசு யாழ்ப்பாணத்து மக்களுக்கு அளிக்கின்ற புத்தாண்டுப் பரிசாக இருக்கும்.

கரிகாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காவலன்

# ரொம்ப தைரியம்

**'தைரியம்'** படத்தில் அறிமுகமான குமரன் நடிக்கும் படம் 'வருஷநாடு'. இப்படத்தை 'மாயி', 'திவான்' போன்ற படங்களை இயக்கிய பாண்டியன் இயக்கி வருகிறார். இந்தப் படத்திற்காக சூர்யபிரகாஷ் என்று தனது பெயரை மாற்றி வைத்திருக்கிறார் இவர். கடந்த சில மாதங்களாக ராமேஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் படப்பிடிப்பு நடந்தது. முடிகிற நேரத்தில்தான் ஒரு பிரச்சினை. என்ன காரணத்தாலோ தனது அறைக்குள் இருந்துக் கொண்டு படப்பிடிப்பு தளத்துக்கு வரவேயில்லையாம் சூர்யபிரகாஷ். அதிர்ச்சியடைந்த கதாநாயகன் குமரன் ஆத்திரத்தில் சத்தம் போட்டாராம். அவர் தன்னை தாக்க வந்ததாக புகார் கூறிய இயக்குநர், இயக்குநர் சங்கத்திலும், தயாரிப்பாளர் சங்கத்திலும் முறையிட்டிருக்கிறார். அவர்களும் விசாரணைக்கு அழைத்தார்கள் குமரனை. ஆனால் இந்தப் படத்தை நான் தீ வைத்து எரித்தாலும் எரிப்பேனே தவிர, யார் முன்பும் விசாரணைக்கு ஆஜராக மாட்டேன் என்று கூறிவிட்டார் குமரன். நிலைமை இப்படியாகும் என்று நினைக்காத சூர்யபிரகாஷ், நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டிருக்கிறாராம். ரொம்ப தைரியந்தான்....!

# இம்சை கொடுத்த தனுஷ்


**'மாப்பிள்ளை'** படத்தில் நடிக்கும் தனுஷ், இப்படத்திற்கும், தயாரிப்பாளர் நேமிசந்த் ஜபக்குக்கும் கொடுத்துவரும் இம்சைகள் கொஞ்ச நஞ்சமல்ல. எப்படியோ படத்தை முடித்து டப்பிங் வரைக்கும் வந்துவிட்டார்கள். இந்த நேரத்திலும் தனது முறுக்கை தளர்த்தவில்லை தனுஷ். கடந்த சில தினங்களுக்கு முன் டப்பிங் பேசப் போனவர் கோபித்துக் கொண்டு வெளியேறிவிட்டாராம். கடித்த இடத்திலேயே கடி விழுந்தால் தழும்பு வரும். இல்லையென்றால் அந்த இடமே தடித்துப் போகும். அப்படிதான் ஆனது இயக்குநர் சுராஜுக்கும். போனால் போகட்டும் போங்கய்யா என்று கூறிவிட்டாராம். பின்னாலேயே ஓடி வந்து சமாதானம் செய்வார் என்று காத்திருந்த தனுஷுக்கு பேரதிர்ச்சி. அதைவிட பேரதிர்ச்சியும் நடந்தது அப்புறம். தனுஷுக்குப் பதிலாக சுராஜே டப்பிங் கொடுக்க ஆரம்பித்தார். ஐயய்யோ... இது டப்பிங் இல்ல. ரொம்ப தப்பிங்! உடனே தடுத்தாக வேண்டும் என்று ஓடிவந்த தனுஷ், தானே பேசினாராம் அப்புறம்! மயிலே.. மயிலேனா இறகு போடாது...

# கை தட்டி ரசித்தார் ரஜனி

**கமல்** - த்ரிஷா ஜோடியாக நடித்த 'மன்மதன் அம்பு' நடிகர் - நடிகைகளுக்கு கமல் பிரத்யேகமாக திரையிட்டுக் காண்பித்தார். ஆழ்வார்பேட்டையில் தனது ராஜ்கமல் ப்ரிவியூ திரையரங்கில் இந்தப் படம் திரையிடப்பட்டது. ரஜினி கலந்து கொண்டு படம் பார்த்தார். படம் முடிந்ததும் கமல் கையை பிடித்துக் கொண்டு அபாரமாக நடித்துள்ளீர்கள் என்று ரஜினி பாராட்டினார். வசனம் பிரமாதமாக இருப்பதாக சொன்னார். குறிப்பாக ஒரு காட்சியில் த்ரிஷாவிடம் மாதவன் 'இந்த உலகத்தையே உன் காலடியில் போடுறேன்' என்பார். அதற்கு த்ரிஷா, 'உலகத்தை யாரும் யார் காலடியிலும் வைக்க வேண்டாம். அது அங்கேதான் இருக்கிறது. பிச்சைக்காரர்கள் காலடியில் கூட உலகம் இருக்கிறது' என்று பதில் அளிப்பார். இந்த வசனம் தன்னை மிகவும் கவர்ந்ததாக ரஜினி சொன்னார். இன்னொரு இடத்தில் வீரத்தின் அடுத்த கட்டம் என்ன தெரியுமா? மன்னிக்கிறது. வீரத்தின் உச்சக்கட்டம் என்ன தெரியுமா? அஹிம்சை என்று கமல் பேசும் வசனமும் ரஜினியை ஈர்த்தது. கைதட்டி ரசித்தார். ரஜினியோடு இயக்குநர் கே.பாலச்சந்தர், நடிகர்கள் பிரபு, பார்த்திபன் உள்ளிட்ட பலரும் 'மன்மதன் அம்பை' பார்த்து ரசித்தனர். மனசை குறிபார்த்து அடிச்ச அம்பாச்சே.... ஆனந்த தையல் போட்டுக்கோங்க...!

# சிக்ஸ்பேக் விவேக்

**பிரபுதேவா** இயக்கும் படத்துக்காக, சிக்ஸ்பேக் முயற்சியில் இறங்கியிருக்கிறார் விவேக். இந்தி நடிகர்கள் எப்போதும் உடற்கட்டில் கவனம் செலுத்தி வருபவர்கள். சல்மான்கான், அமீர்கான் உட்பட பெரும்பாலான இந்தி நடிகர்கள் சிக்ஸ்பேக் உடற்கட்டில் இருக்கிறார்கள். தமிழில், 'வாரணம் ஆயிரம்' படத்துக்காக சூர்யா, 'சத்யம்' படத்துக்காக விஷால் சிக்ஸ்பேக் உடற்கட்டில் வந்தனர். ஹீரோக்களின் வழியில் காமெடி நடிகரான விவேக்கும் இப்போது 'சிக்ஸ்பேக்'கில் இறங்கியிருக்கிறார். இதுபற்றி அவர் கூறும்போது, பிரபுதேவா இயக்கத்தில் விஷால் நடிக்கும் படத்தில் ஜிம் மாஸ்டர் வேடம். இதனால், 'சிக்ஸ்பேக் உடற்கட்டில் நடித்தால் நன்றாக இருக்கும் என்றார் பிரபுதேவா. இதையடுத்து உடல் எடையை ஏற்றி, சிக்ஸ்பேக்குக்கு பயிற்சி செய்து வருகிறேன். கஷ்டமானதாகவே இருக்கிறது' என்றார்


நாங்க



## கோடம்... செய்தி கோ...

பெரிய பட...
ஜீவ நடிகர் ஒட்டு...
ஒதுக்கி கொடுத்த...
இதனால வந்த...
ஷீட் பாதிக்குமே...
இருந்தாராம்... இ...
படம் தொடங்கு...
தெரிஞ்சதும் வெ...
திரும்பிட்டாராம்.



# சினி பிட்ஸ்

- '3 ஹிந்தி படங்களில் பிஸியாக இருந்ததால் வேறு படங்களில் நடிக்க முடியவில்லை. அவை ரிலீஸ் ஆகிவிட்டன. தற்போது 2 தமிழ், 1 கன்னட படங்களில் நடிப்பதுடன் தெலுங்கு படங்களில் நடிக்க கதை கேட்டு வருகிறேன்' என்கிறார் சதா.
- ஒரே நேரத்தில் 2 படங்களை தயாரிக்கிறார் இயக்குனர் முருகதாஸ்.

ஆண்டுபோ...
ஆண்டில் வ...
உடல் எடை...
வேண்டும்...
ஸ்ரேயா

- நடிகை ப...
தால் எண் ச...
என்று மாற்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்ரிஷாவின் சபதம்

**த்ரிஷா** இந்தப் புத்தாண்டுக்கு புதிய சபதமொன்றை எடுத்திருக்கிறார். தெலுங்குத் திரையுலகில் நடிகை இலியானாவுடன் நடந்த கவர்ச்சிப் போட்டியில் தோற்றுப்போய் நம்பர்-1 இடத்தைப் பறிகொடுத்த த்ரிஷா வரும் 2011ம் ஆண்டில் மீண்டும் நம்பர்-1 ஆக வேண்டும் என்று சபதமேற்றிருக்கிறாராம். 'மன்மதன் அம்பு' படத்தில் கமலுடன் சேர்ந்து நடித்த குஷியில் இருக்கும் த்ரிஷா, வரும் புத்தாண்டு முதல் பல புதிய சபதங்களை ஏற்கவிருக்கிறார். அதில் ஒன்று தெலுங்கில் மீண்டும் நம்பர்-1 இடத்தைப் பிடிப்பது. தற்போது தெலுங்கில் இலியானாதான் முதலிடத்தில் உள்ளார். இதற்கு முன்பு த்ரிஷாதான் அந்த இடத்தில் இருந்தார். ஆனால் இலியானா தனது கவர்ச்சியால் த்ரிஷாவை ஓரம் கட்டி முதலிடத்திற்கு முன்னேறினார். இதனால் தமிழில் மட்டுமே கவனம் செலுத்தி வந்த த்ரிஷா, பின்னர் பாலிவுட்டுக்குப் போனார். ஆனால் பாலிவுட் அவரை ஏமாற்றி விட்டது. இருந்தாலும் தமிழில் தொடர்ந்து நடித்து வருகிறார். தமிழில் கமலுடன் இணைந்து நடித்த 'மன்மதன் அம்பு' த்ரிஷாவுக்கு நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்திருப்பதால் ஏக குஷியில் இருக்கிறார் த்ரிஷா. இதனிடையே நடிகை இலியானா தமிழுக்கு வர ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளார். இதனால் அந்த இடத்தை கப்பென்று பிடித்து மீண்டும் நம்பர்-1 இடத்தைத் தொட சபதமேற்றிருக்கிறாராம் த்ரிஷா. நொண்டியான குதிர கட்டக்கால் கட்டிக்கிட்டு ஓடுச்சாம் ஓட்டப்பந்தயத்துல....



புலிவேசம்

## ...ம்பாககம் ...கேட்டீங்களா?

...பட்ஜட்டுனு ரீமேக் படத்துக்கு ...டு மொத்தமா கால்ஷீட் ...த்தாராம்... கொடுத்தாராம்... ...த வென்ற படத்தோட கால் ...மேன்னு டைரக்டரு பீலிங்ல ...இருந்தாராம் ஆனா பட்ஜெட் ...ங்குறதா இல்லைன்னு ...வென்ற படத்துக்கு ...ராம்... திரும்பிட்டாராம்...

அபிஷேகமான நடிகர் திடீர்னு டைரக்டர் அவதாரம் எடுத்து ஸ்டோரிங்கிற பெயர்ல படத்தை இயக்கினாரு. படம் ஓடாம தயாரிப்புக்கு கைய கடிச்சிது. 'இந்த படம் போனா பரவாயில்லை. அடுத்த படத்தை தமிழ், ஹிந்தியில் ஒரே நேரத்துல இயக்கி பேர் எடுப்பேன்'னு சொல்றாராம்... சொல்றாராம்... இதுக்கு தேதான தயாரிப்புக்கு வலை வீசுறாராம். நடிகரை பார்த்தாலே தயாரிப்புங்க பயந்து ஓடுறாங்களாம்... ஓடுறாங்களாம்...




சிறுத்தை

- கடந்த ...போல் இல்லாமல் வரும் ...ல் வங்கி கணக்கை அதிகமாகவும் ...டை குறைவாகவும் இருக்க ...ம் என ஆசைப்படுகிறாராம்
- ...க பாயல் தனது பெயர் பிடிக்காத ...ன் கணித ஜாதகப்படி சுவாதிகா ...ாற்றிக் கொண்டார்.
- வீட்டில் இருக்கும்போது 'ட்டுவிட்டரில்' அதிக நேரம் செலவிடுகிறார் ஜெனிலியா.
- பொங்கலுக்கு வெளியாக இருந்த 'பயணம்' ஜனவரி இறுதியில் ரிலீசாகிறது.
- பாலிவுட் படங்களில் நடிக்க சென்றிருக்கும் கமல் மகள் ஸ்ருதி, கர் என்ற இடத்தில் தனியாக வீடு எடுத்து தங்கி இருக்கிறாராம். பக்கத்து தெருவில் குடியிருக்கும் வித்யா பாலன் ஸ்ருதியின் தோழி ஆகிவிட்டாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



## பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை இவரைப் பற்றி 25

**உலகத்தில் சிலர் இறந்த பின்னரும் சமுதாயத்தால் நினைவு கூறப்படுகிறார்கள். இதற்குக்காரணம் அவர்கள் தன்னலமில்லாது சமுதாயத்துக்கும் நாட்டிற்கும் ஆற்றிய சேவையே ஆகும்.**

**ஈழத்தில் தமிழ்ப் பண்டிதர் என்று சொன்னாலே அனைவருக்கும் நினைவுக்கு வருபவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாண வரலாற்றில் பதிவான இவரைப் பற்றி சில குறிப்புகள்...**

* மட்டுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதிகளுக்கு மகனாக பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் திகதி பிறந்தார்.
* சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழாசிரியர்களில் உலகப் புகழ் மிக்க ஆசனாக பண்டிதமணி திகழ்ந்துள்ளார்.
* இவர் தனது இளமைக் கல்வியை மட்டுவில் அமெரிக்கா மிஷன் பாடசாலையில் பயின்றார்.
* மரபு வழித் தமிழ்க் கல்வியின் இலக்கண இலக்கியங்களை புலவர்களிடமும் பண்டிதர்களிடமும் கற்றுத் தெரிந்து கொண்டார்.
* 1917-1926 வரை வண்ணார் பண்ணை காவியப் பாடசாலையில் உயர் கல்வியையும், சைவத்தையும், தமிழையும் பண்டிதமணி பயின்றார்.
* 1926 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து பண்டிதரானார்.
* கணபதிப்பிள்ளை பண்டிதரான பின்னர் இரண்டு வருடங்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றார்.
* ஆசிரியர் பயிற்சியை முடித்து வெளியேறிய பண்டிதர் 1929- 1959 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்.
* நாவலர் மாணவர் பரம்பரையினரிடம் கல்வி கற்றதால் நாவலர் தருமத்துக்கும், தமிழ் கல்வியின் வளர்ச்சிக்கும் பணியாற்றுவதை குறிக்கோளாகக் கொண்டு பிரமச்சாரிய விரதத்தைக் கடைப்பிடித்தார்.
* பண்டிதமணி நாட்டின் எல்லாப் பாகங்களுக்கும் சென்று தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவ சித்தாந்தம் முதலானவிடயங்கள் பற்றிச் சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.
* கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், போன்ற புராணங்களை புராணப் படனம் செய்து நூலாக்கியுள்ளார்.
* அக்காலத்தில் பண்டிதரின் சொற்பொழிவுகள் வாதப்பிரதி வாதங்களைத் தோற்றுவிக்கும். அவற்றை அவரிடமிருந்து மறுதலித்துப் பேசுவது மிகக் கடினமான காரியம்.
* நூல்கள் எழுதுவதில் நாட்டமில்லாத இவர் பல இலக்கியங்களை கட்டுரைகளாக எழுதி வெளியிட்டுள்ளார்.
* பண்டிதமணி டால்ஸ்டாயின் கதைகள் இரண்டைத் தழுவி. 'இருவர் யாத்திரிகள்', 'செருப்புக்கட்டியின் கதை' என்ற இரண்டு சிறுகதைகளையும் சொந்தமாக சில கதைகளையும் எழுதியுள்ளார்.
* 'நளன் தூது', வால்மீகிதானோ' என்ற இலக்கிய நாடகங்களையும் 'இரு சகோதரர்கள்' என்ற முற்றுப் பெறாத நாவல் ஒன்றையும் எழுதியுள்ளார்.
* 1929 ஆம் ஆண்டு சைவாசாரிய பயிற்சி நிறுவனத்தில் தமிழ் விரிவுரையாளராக பண்டிதமணி கணபதிப்பிள்ளை நியமனம் பெற்றார்.
* பண்டிதமணியின் பேரும் புகழும் ஈழத்தில் தமிழர் வாழும் எல்லாப் பகுதிகளுக்கும் பரவுவதற்கு இவ் சைவாசாரிய கலாசாலையே காரணமாக அமைந்தது.
* சமுதாயத்தின் கலாசாரத்தையும் ஒழுக்கக் கோட்பாடுகளையும் விளங்கிக் கொண்டால் தான் இலக்கியங்கள் படைக்க முடியும் என்பார் பண்டிமணி.
* இலங்கையின் தமிழர் வரலாற்றிலும் சைவ சமய வரலாற்றிலும் பண்டிதமணியின் பேரும் புகழும் என்றும் நிலைத்திருக்கும்.
* பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பாலியல் உறவின் இனிமையை இலக்கிய இரசனையுடன் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.
* புலமைத்துவம், ஆளுமை, தவம் போன்றவற்றில் முதன்மை பெற்று விளங்கிய பண்டிதமணி 1986 ஆம் ஆண்டு மாசி மாதம் 28 ஆம் திகதி இயற்கை எய்தினார்.

**தொகுப்பு - அஸ்வின்**



### உன்னைத் தேடுதே...

பத்து நிமிடங்கள் தான்
என்பக்கம் இருந்தாய்
-ஆனால்
என் உடலில் உள்ள
பல்லாயிரக்கணக்கான
உயிரணுக்கள்
எல்லாம் ஒன்று சேர்ந்து
உன்னைத் தேடுதே.

### எனக்கு மட்டும்

உள்ளிருந்தபடி
நட்சத்திரங்களை ரசிக்கும் பாக்கியம்
எனக்கு மட்டும் தான்
ஒடிந்து போன ஓலைகளினால்
வேயப்பட்டிருந்த கிடுகளின் வழியே
நட்சத்திரங்களை
பார்த்து ரசிக்கிறேன்.

### ஏனோ!

எம் மனக் குளத்தில்
கல்லெறிந்து ரசிப்பவர்கள் பற்றி
எனக்கு கவலை இல்லை
ஆனால் நீ மட்டும்
என் மனக் கனவுகளை கிளறிவிட்டு
வேடிக்கை பார்க்கின்றாய்
தாங்க முடியவில்லை உன் பிரிவை
என் வாழ்வில்.

### என் வாழ்வில் நீ

மீள முடியாத துயரங்களை
மீட்டிப் பார்ப்பதில்
எனக்கு மட்டும்
எவ்வளவு சந்தோசம்
என் துயர் வாழ்க்கையில்
நீ கலந்து
கொண்டிருப்பதால்.

### கால நேர கணங்கள்

நேற்றிரவு கண்ட கனவினை
மீட்டிப் பார்ப்பதில்
செல்லுகின்றது
பகல் நேரப் பொழுதுகள்
இரவு காணப்போகும்
உனது சேட்டைகளை
எண்ணிப் பார்ப்பதில்
மாலைப் பொழுதுகள்

### இரண்டு இதயங்கள்

எனக்கு மட்டும் தான்
இரண்டு இதயங்கள்
என் தெரியுமா?
உன் அன்புக் குவியல்கள்
என் ஒரு இதயத்திற்குள்
பூட்டி வைக்க முடியவில்லை.

- மீசாலையூர் மைனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை உரைக்கும் சத்தியக்கடதாசி

உண்மை இது அழித்து எத்தனையோ தசாப்தம் முடிந்து விட்டதாகவே பொது மக்கள் உணர்கிறார்கள். சிலர் அரிச்சந்திரன் தான் உண்மையை உரைத்த கடைசி சத்திய புருஷன் என்றும் கூறுகிறார்கள். இந்த நிலையில் சட்ட முறைமையில் உண்மைகளைக் கண்டு பிடிக்கும் ஒரு உரைகல்லாகவே சத்தியக் கடதாசி கருதப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் ஒரு கிராமவாசி ஒருவர் தனக்கு அரசு வழங்கும் வீட்டுத்திட்ட நிவாரணங்களுக்கு விண்ணப்பித்த போது தனது பல்வேறு ஆவணங்களில் பல்வேறு விதமாகத் தனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். குறிப்பிட்ட உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பிரதேச சபை உப அலுவலகத்தில் இதனை ஏற்க முடியாது எனத் தெரிவித்து விட்டதாகவும் குறிப்பிட்டார்.

அவரிடம் இருந்த ஆவணங்களையும் அடையாள அட்டைகளையும் பரிசீலித்து பார்த்தபோது பின்வருமாறு காணப்பட்டது.

**பல்வேறு பெயர்களும் பாரிய குழப்பமும்**

அவருடைய பிறப்புச் சான்றிதழில் (Birth Certificate)அவரது பெயர் கந்தன் சின்னவன் என்று இருந்தது. அவருடைய பாடசாலை விடுகைப் பத்திரத்தில் (School Leaving Certificate) கந்தையா சின்னவன் என்றிருந்தது. அவரது

# சட்டமும் சமூகமும் 09




தேசிய அடையாள அட்டையில் சின்னவன் கந்தையா (National Identity Card) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவருக்கு 1996இல் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டையில் (Special Identity Card) அவரது பெயர் கந்தையா சின்னையா என்று எழுதப்பட்டிருந்தது. அவரது திருமணப் பதிவுச் சான்றிதழில் (Marriage Certificate) கந்தன் சின்னையா எனப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது பிள்ளைகளது பிறப்புச் சான்றிதழில்(Birth Certificate) தந்தையின் பெயர் என்ற இடத்தில் அவரது திருமணப் பதிவு சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருந்த கந்தன் சின்னையா என்றே எழுதப்பட்டிருந்தது. மேலும் உள்ளூராட்சி சபை ஒன்றில் கடமை புரியும் அவரது தொழில் அடையாள அட்டையில் (Job I.C) அவரது பெயர் சின்னையா கந்தையா என எழுதப்பட்டிருந்தது. இவ்வாறான சூழ்நிலையில் அவருக்குக் கிடைக்க வேண்டிய வரப்பிரசாதங்கள் யாவும் மறுக்கப்பட்டு இருந்தமை துரதிஸ்டமானதே.

இவ்வாறான இடியப்ப சிக்கலிருந்து விடுபட என்ன வழி என்ற கேள்வி எழுகின்றது. இந்த சிக்கல்கள் பல பேருக்கு இருக்கின்றன. இதற்கு ஒரே வழி அவர் ஒரு சத்தியக்கடதாசியை முடிப்பதுவே யாகும். அவ்வாறு சத்தியக் கடதாசியை முடிக்கும் போது மேலே கூறப்பட்ட சகல ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர்களை முறைப்படி ஒவ்வொரு பந்தியிலும் குறிப்பிட்டு தனது உண்மையான பெயர் என்ன என்பதை வெளியரங்கப் படுத்தல் வேண்டும். அதாவது எந்தப் பெயரில் அழைத்தாலும் அவர் ஒருவரே (One and Same Person) என்பதேயாகும். **(தொடரும்)**

## உயிர் நண்பி நிஷாந்தினியே....!

உனைக்கண்டது தரம் ஒன்பதில்
எம் இருவருக்குமிடையில் உள் நட்பு
ஏழிருவருடங்களாகிவிட்டன.!
என் அருகாமையில் 5 மாதங்கள்
இருந்தாயடி!
என்னை விட்டு ஏனடி தூரச்
சென்றாய்?
(உன்னூருக்கு செம்பியன்பற்றுக்கு)

காலம் தான் நம் இருவரையும்
பிரித்தாலும்
கடவுளால் கூட நம்மைப் பிரிக்க
முடியாதடி ஏன்
தெரியுமா? உன்னுள் நான் என்னுள்
நீயடி! என்
நண்பி நிஷாந்தினியே.... 2006 இல்
அடித்த சுனாமியைப்
போல் அல்லாது நிஷாப் புயல் வீசியது
போல் என்னுள்
வந்து குடியேறிவிட்டாய்! எப்போதும்
நாம் இருவரும்
ஒரு கூண்டுக்கிளிபோல் வாழாமல்
பிரியத்தான்
போகிறமடி..... எப்போது தெரியுமா....?
நாம்
இருவரும் பிரியாமல் வாழ எங்களை
ஆட்கொண்டுள்ள
இறைவனை வேண்டுகிறேன்
நீ தூரத்தில் இருந்தாலும்
உன் எண்ணம் சிந்தனையோடு
கிழமையில் ஒரு
தடவையாவது உனக்கு எனது
மொபையில் வாயிலாக
தொடர்பு கொள்வேனடி..

செல்வி அருணாசலம் கலைமகள்
நி/மு வெற்றிநிலைக்கேணி,முள்ளியான்
த/மு அரசடி வீதி, பருத்தித்துறை

## கேள்வி பதில்

செல்வன் ச.ஈழவேந்தன்
புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை

**கேள்வி :** ஆயிரக்கணக்கான வழக்குகளுக்குத் தீர்ப்புச் சொல்ல முடியாது நிலுவையில் இருப்பதற்கான காரணம் என்ன?

**பதில் :** இலங்கையில் தற்போது 66,000 வழக்குகள் நிலுவையில் இருப்பதாக நீதியமைச்சு கூறியுள்ளது. இதற்கு யாரையும் குறை கூறமுடியாது என இலங்கையின் தற்போதைய பிரதம நீதியரசர் குறிப்பிடுகிறார். 'சங்கரா யார் கொலோ சதுரர்' என்பது தெரியவில்லை.

**கேள்வி :** தற்போது அதிகமாக இடம்பெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களிற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைக்குட்படுத்தப் படுகிறார்களா?

**பதில் :** ஒரு சிறுவன் அல்லது சிறுமி துஷ்பிரயோகத்திற்குட்பட்டால் அந்த விடயம் உடனடியாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது நன்னடத்தை அதிகாரி ஊடாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் பொலிஸாருக்கும் அறிவிக்கப்படவேண்டும்.

அவர்கள் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வரும் பட்சத்தில் சந்தேக நபர்கள் தண்டிக்கப்படுவார்கள். இந்த விடயங்களை மூடி மறைத்தால் அது சந்தேக நபர்களுக்கே சாதகமாக அமைந்து விடும்.

**கேள்வி :** வழக்குகளை பரிசீலித்து ஏன் உடனுக்குடன் தீர்ப்பு வழங்க முடிவதில்லை?

**பதில் :** தாமதிக்கப்படும் தீர்ப்புக்கள் மறுக்கப்பட்ட நீதிக்கு சமனானது (Judgement Delayed Is Denied) என்பது சரிவரப் புரிந்து கொள்ளப்படாமையிட்டு 'யாரை நோகேன் யாரிடம் சொல்லி அழுவேன்'.

**கேள்வி :** சட்ட நடவடிக்கைகளால் குற்றவாளிகள் திருந்துகிறார்களா?

**பதில் :** திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று திரைப்படப் பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே பாடி வைத்துள்ளாரே.

**கேள்வி :** சட்டம் ஏன் இக்காலப் பகுதியில் இருட்டறையாகவே காணப்படுகின்றது?

**பதில் :** சட்டம் ஓர் இருட்டறை அதில் வக்கீலின் வாதம் தான் ஒளி விளக்கு என காலஞ் சென்ற தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா சொன்னார்கள்.

அந்த ஒளி விளக்கு குடத்திற்குள் இடப்பட்ட அகல் விளக்காக இன்று போய்விட்டது. எப்போது அது குன்றின் மேலிட்ட தீபமாகப் பிரகாசிக்கிறதோ அன்று இருள் அகலும், ஒளி வீசும் என நம்புவோமாக!

**கேள்வி :** அதிகமாக இடம்பெறும் இலஞ்ச ஊழல்கள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், மிரட்டல்கள் என்பன சட்டத்தின் கண்களைக் கட்டுகின்றன. இதற்கான நிவாரணங்கள் ஏதாவது உண்டா?

**பதில் :** இதற்கான சர்வரோக நிவாரணி சமூக விழிப்புணர்வு தான். ஆனால், வாரணம் பொருத மார்போடு வாழ்ந்த தமிழன் நிவாரணம் தேடும் கையோடு வாழும் வரை சமூக விரோதச் செயல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். IT IS VERY UNFORTUNATURE. WE REGRET VERY MUCH.

**கேள்வி :** இன்றைய சமூகத்தினர் சட்ட விதிகளைப் பின்பற்றுகிறார்களா?

**பதில் :** சட்டத்திற்குப் பயப்படுவதை விட ஒருவன் தனது மனச்சாட்சிக்குப் பயப்படுவானாயின் இந்த நானிலத்தில் சட்ட விதிகள் எதுவுமே தேவைப்படாது.பொலிஸ் நிலையம், நீதி மன்றம், சிறைச்சாலை என்பனவற்றை மூடிவிடலாம்.

**கேள்வி :** குற்றவாளிகள், வழக்கறிஞர்களையும் நீதிபதிகளையும் மிரட்டுகிறார்கள் சிலர் கொலையும் செய்கிறார்கள். பதவிகளையும் மாற்றுகிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்த சட்டத்துறை என்ன செய்கின்றது?

**பதில் :** இது வரை சட்டத்தரணி லியானா ராய்ச்சியும் சட்டத்தரணி காஞ்சனா அபயபாலாவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அம்பேபிட்டியவும் படுகொலை செய்யப்பட்டனர். கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அம்பேபிட்டியாவின் கொலைக்குக் காரணமான குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி :** சட்டம்-நீதித்துறை என்பன சுயமாக அரசியல் தலையீடு இல்லாமல் இயங்குகின்றனவதா?

**பதில் :** ஜனநாயகத்தின் நாலாவது தூண் சுயாதீனமான நீதித்துறை (JUDICIAL INDEPENDANCE) என முன்னாளின் இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் சன்சோனி (Honourable Judge SANSONY) ஒரு முறை குறிப்பிட்டார்கள். அந்த நாலாவது தூணை இடித்து வீழ்த்தி விட்டால் ஏனைய மூன்று தூண்களும் மக்கள் விரும்பும் நல்லாட்சியைத் தாங்கிக் கொள்ளும் சக்தியுடையவையல்ல, என்பது வெள்ளிடைமலை.

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி 08

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | ■ | 09 | 10 | 11 | 12 | ■ | 13 |
| 14 | 15 | ■ | 16 | 17 | 18 | 19 | ■ |
| 20 | 21 | ■ | 22 | 23 | 24 | ■ | 25 |
| ■ | 26 | 27 | ■ | 28 | 29 | 30 | 31 |
| 32 | 33 | 34 | 35 | ■ | ■ | 36 | ■ |
| 37 | ■ | 38 | 39 | 40 | ■ | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | ■ | 47 | 48 | 49 |

### இடமிருந்து வலம்

01. ஒரு தேசிய பத்திரிகை
06. போனால் வராதது
09. தினமும் காலையில் செய்வது
14. பாடலையும் குறிக்கும்
16. உறுப்பையும் சொல்வர் (குழம்பியுள்ளது)
20. நாம் (திரும்பியுள்ளது)
22. இருப்பதற்கு பயன்படும் கதிரை அல்ல (திரும்பியுள்ளது)
26. பிழையல்ல
28. மனிதனுக்கு மிகவும் தேவையான ஒன்று
32. பிள்ளையாரின் பெயர்
38. மனிதன் விரும்பும் ஆசை
41. நோயாளர்களை பராமரிப்பவர்
43. மிகச்சிறியது
47. முதுகில் மூன்று கோடு பிராணி

### மேலிருந்து கீழ்

01. அடிபட்ட இடத்தில் இது வரும்
03. நவக்கிரகங்களில் ஒன்று
04. பரதநாட்டிய அணிகலன்
05. கனிய வளங்களில் ஒன்று (திரும்பியுள்ளது)
07. பெறுமதி
12. இது ஒரு ராசி
15. பிள்ளையார் எழுதிய கதையின் ஆசிரியர்
25. வாதிட்டால் கிடைப்பது
27. இராசிகளின் ஒன்று
30. மணமகளுக்கு மேலும் அழகை கூட்டுவது.
32. மனிதனின் அளவு கோல்
35. ஞாயிற்றுத் தொகுதியில் இருப்பது
42. விக்ரமின் படம்

### குறுக்கெழுத்து போட்டி 06க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ | ந் | தி | ர | ன் | ■ | ■ | து |
| ரு | ■ | ரு | தி | வா | ■ | ப | ரு |
| து | ற | வி | ■ | ■ | சி | ர | சு |
| ■ | ம் | ■ | பா | யா | ச | ம் | ■ |
| ஆ | பா | ச | ம் | ■ | ■ | ப | சி |
| யு | ■ | த | பு | ■ | ■ | ரை | க |
| த | ச | ம் | ■ | கூ | லி | ■ | ர |
| ம் | க | ■ | கீ | ழ் | வா | ன | ம் |

### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. **வி.தனபாலசிங்கம்**
   நுணாவில் மேற்கு
   சாவகச்சேரி
2. **திருமதி.றோ.ம.தயானந்தன்**
   15ஆம் மைல்கல்
   உடுப்பிட்டி
3. **கே.அரசேஸ்வரன்**
   நல்லூர் வடக்கு,
   யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 08 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

# யாழ்ப்பாண நாட்டின் வரலாற்று கதாநாயகன்

# பூதத்தம்பி

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

08

அவருடைய மௌனமே அவர் மரணத்தைக் கொண்டு வந்தது. சதிகாரர்களின் சடலங்கள் பருந்துகளின் இரைக்காக மரங்களில் தொங்கவிடப்பட்டன. சதிகாரத் தலைவர்களின் தலைகள் கழிகளில் குத்தப்பட்டு சந்தை கூடும் இடங்களில் பார்வைக்கு நாட்டப்பட்டன. 'ஒல்லாந்தரின் கொடூரமான தண்டனைகளுக்குப் பூதத்தம்பி பலியானான்.

**பூதத்தம்பி பற்றிய வாய் மொழிக்கதை**

பூதத்தம்பி மனைவி அழகவல்லி, அவன் அரசிறைக்குப் பொறுப்பான முதலியார் பதவி. நிருபத்துறைக்கு முதலியாராக மனுவல் அந்திராசி, பூதத்தம்பியின் உற்ற நண்பன் சின்ன ஒல்லாந்தேசு. விருந்திற்கு அழைக்கப்பட்ட அந்திராசி அழவல்லியைக் காணல், தூதனுப்பல், அவமானப்படல் பழி வாங்கும் நோக்குடன் வெற்றுக்காகிதத்தில் பூதத்தம்பியின் ஒப்பம் பெறல், அதனைப் பயன்படுத்தி அவனுக்கும் போர்த்துக்கேயருக்கும் தொடர்பிருப்பதாகக் கூறிப் பெரிய ஒல்லாந்தேசு மூலம் பூதத்தம்பியைக் கொல்வித்தல் ஆகியவை வழக்கிலுள்ள கதையாகும். இத்தகவல்களை அல்லது கதையை முதன் முதல் எழுத்திலிட்டு மக்கள் அறிய வைத்தவர் யாழ்ப்பாண வைபவமாலையின் ஆசிரியர் மயில்வாகனப்புலவராவார்.

பூதத்தம்பியின் கதை நிகழ்ந்ததன் பின்னர் (1658) முக்கால நூற்றாண்டின் பின்னர் (1736) இவர் எழுதிய வரலாற்றில் கற்பனை நிறைந்துவிட்டதென ஜோன் ஏச். மார்ட்டின் வாதிடுகிறார். சமகாலத்தில் பூதத்தம்பியுடன் வாழ நேர்ந்த பால்தேயஸ் பாதிரியார் எழுதிய குறிப்புக்கள் நம்பகமானவை என அவர் குறிப்பிடுகின்றார். மயில்வாகனப்புலவருக்கும் பால்தேயஸ் முதன்மைப்படுத்தும் மார்ட்டினக்கும் முரண்பாடு வருகின்ற இடம் மனுவல் அந்திராடோவும் மனுவல் அந்திராசியும் ஆவர்.

மார்ட்டினைப்போல் பொறுத்தளவில் மனுவல் அந்திராடோ ஒரு சிங்களப் பிரதானி. ஒரு படை அணிக்குக் கப்ரின். முதலியார் அந்தஸ்து உள்ளவன். அவனுக்கும் பூதத்தம்பிக்கும் இடையில் நெருங்கிய உறவுகள் இருக்க வாய்ப்பில்லை. பூதத்தம்பியின் விருந்திற்குச் செல்லவும் வாய்ப்பில்லை. தமிழ் மக்களின் பின்கட்டில் வாழ்கின்ற பெண்களில் ஒருத்தியான அழகவல்லியைச் சந்திக்கவும் வாய்ப்பில்லை. யாழ்ப்பாணக் கோட்டையில் தன் பயணப்பாதையில் சில நாட்கள் தங்க நேர்ந்த அந்திராடோ பற்றிப் பூதத்தம்பி கதையோடு இணைத்து மயில்வாகனப் புலவர் தரும் தகவல்கள் பொய்யானவை என்கிறார்.



ஒல்லாந்தர் வழங்கிய தண்டனைகள்

பால்தேயஸ் குறிப்பிடும் அந்திராடோவும் மயில்வாகனப்புலவர் குறிப்பிடுகின்ற அந்திராசியும் வெவ்வேறானவர்கள். ஒல்லாந்தரால் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட கோயில் பற்றுக்களை அந்தந்தப் பகுதிகளில் செல்வாக்காலும் நாட்டாண்மையாலும் முதன்மை பெற்ற பிரதானிகள் நிர்வாகித்தனர். இந்த முதலியார்களைத் தவிர, இராசவாசல் (கோட்டையில்) குடிசார் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருவர் இருந்துள்ளனர். 'நல்லூரைச் சேர்ந்த பூதத்தம்பி வெள்ளாளன் அரசிறைப்பகுதியின் முதலியாராகப் பதவிவகித்தான். கரையூரைச் சேர்ந்த அந்திராசி என்ற குருகுலத்தவன் கடிதங்கள் எழுதும் (நிருபம்) பகுதிக்கு முதலியராக நியமிக்கப்படான். இவ்வாறான முடிவிற்கு வந்தால் பூதத்தம்பி கதையில் சிக்கலில்லை.

எவ்வாறாயினும் பூதத்தம்பியின் வரலாறு சோகமானதாகும்.

**அழகவல்லியின் பேரெழில்**

பூதத்தம்பி விலாசத்தில் (நாடகத்தில்) பூதத்தம்பியின் மனைவியும் இரணவீரசிங்கனின் மகளுமான அழகவல்லியின் எழில் சித்திரிக்கப்பட்டுள்ளது. மனுவேல் அந்திராசி தகாத மோகம் கொண்டமையை நியாயப்படுத்துவது போல அவள் அழகு இருந்துள்ளது. பிராமணப்பெண்ணின் நிறமும் சூத்திரப்பெண்ணின் கவர்ச்சியும் அழகவல்லியிடம் குடிகொண்டிருந்தன. சிவந்த அவள் நிறமும் ஒடுங்கிய அவள் இடையும் அவள் எழிலை அதிகப்படுத்தின. **(தொடரும்)**

கலாநிதி க.குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

எமது சமூகத்தில் பெண்களின் நிலை குறித்து அதிகம் பேசப்பட்டு வருகிறது. பருவ உணர்ச்சிகளால் சிற்றின்பத்திற்கு அடிமைப்பட்டுத் தமது எதிர்காலத்தையே அழித்துக்கொண்ட, கொண்டுவரும் பல பெண்கள் நம்மத்தியில் இருக்கிறார்கள். இதனால், எமது சமூகத்தில் அவர்கள் குறித்த தப்பான கண்ணோட்டம் அவர்கள் மேல் விழுவதற்கு ஏதுவாகியுள்ளது.

வெட்கம், மானம், கற்பு, பயம், ஒழுக்கம் எல்லாவற்றையும் புறமொதுக்கிவிட்டு, கண்டகண்ட இடங்களிலெல்லாம் காமநுகர்ச்சியில் ஈடுபடும் சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் சர்வசாதாரண நிகழ்வுகளாகிவிட்டன. அப்படியான பல நிகழ்வுகளின் வரிசையில் பலரது கவனத்தையும் ஈர்த்த சம்பவம் ஒன்று அதிக கவனிப்பைப் பெற்றுள்ளது. அப்படி பொது இடம் ஒன்றில் சில ஆண்களும் பெண்களும் ஒன்றாக சேர்ந்திருந்து பாலியல் இன்பத்தை (Group Sex) அனுபவித்து மகிழ்ந்துள்ளனர். அதுவும் பண்பாட்டின் உறைவிடமாக விளங்குகின்ற யாழ். மண்ணில்தான் என்றால் நம்புவீர்களா?



> பற்றை மறைவில் உள்ள இடமொன்றில் ஒன்றாகச் சேர்ந்து தமது காதல் திருவிளையாடல்களை நிகழ்த்தியபடியிருந்தனர். அந்த மூன்று பெண்களின் உடல்களிலும் அரைகுறை துணியுடன் அரை நிர்வாணக் கோலத்தில் தம்முடன் கூடவந்த இரு இளைஞர்களுடன் காம வேட்கையில் லயித்திருந்தனர்.

பாலியல் உறவு என்பது நான்கு சுவர்களுக்குள் நடக்கும் அந்தரங்கமான உறவை பொதுஇடங்களில் அரங்கேற்றுவது நாய்களும் மனிதர்களுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்பதையே காட்டுகின்றது.

அண்மையில் யாழ். கோட்டைப்பகுதியில் நடந்த சம்பவம் இதனை மெய்ப்பிக்கிறது. இச்சம்பவம் தொடர்பாக எனது நண்பர் கூறியவற்றை அப்படியே உங்களுக்கு ஒப்புவிக்கிறேன். பொழுதுசாயும் அந்தி மாலைவேளை. ஆதவன் தன் கடமை முடித்துவிட்டு மேற்திசை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அவனது பொன்னிற நீண்ட கதிர்கள் கோட்டையின் மேற்புறத்தைப் பிரகாசமாக்கிக் கொண்டிருந்தன.

அவ்வேளை, சன நடமாட்டம் சற்றே குறைந்திருந்தது. ஆட்டோ ஒன்றில் வந்திறங்கிய மூன்று பெண்களும் இரண்டு ஆண்களுமாக கோட்டைப் பகுதியிலுள்ள மறைவிடம் ஒன்றிற்குச் சென்றுள்ளனர். இக்காட்சியை அவதானித்த அப்பகுதியில் எங்கோ ஓரிடத்தில் நின்ற இளைஞர்கள் சிலர் தமது ஆராய்ச்சியில் இறங்கினார்கள். சிறிதுநேரம் கழித்து அங்கே என்ன நடக்கிறது என அறிவதற்கு தமது வேட்டையை ஆரம்பித்தனர். அங்கு அவர்கள் கண்டகாட்சி அவர்களை அதிர்ச்சியில் உறையவைத்தது. பற்றை மறைவில் உள்ள இடமொன்றில் ஒன்றாகச் சேர்ந்து தமது காதல் திருவிளையாடல்களை நிகழ்த்தியபடியிருந்தனர். அந்த மூன்று பெண்களின் உடல்களிலும் அரைகுறை ஆடைகளுடன் அரை நிர்வாண கோலத்தில் தம்முடன் கூடவந்த இரு இளைஞர்களுடன் காம வேட்கையில் லயித்திருந்தனர். தம்மை பிறர் கண்காணிப்பார்கள் என்பது பற்றியெல்லாம் அவ் இள நங்கையர்கள் கிஞ்சித்தும் சிந்தித்தாகத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்க மாட்டார்கள். காமம் தந்த போதையின் கிறக்கம் அவர்களது கண்களை மறைத்தது. அடுத்து அங்கு நடைபெற்ற காட்சி இரத்தத்தையே உறைய வைப்பது போல் இருந்தது.

அந்த இளைஞர்கள் அவ்விடத்தை நெருங்கியதும் மரம் ஒன்றிலிருந்து கீழே ஒருவர் குதித்தார். அவர் கையில் கமரா போன் இருந்தது. அங்கு நடைபெற்ற அலங்கோலக் காட்சிகளை அப்படியே தமது கமராவுக்கள் சிக்கவைத்துக் கொண்டிருந்தார். அவ்விடத்தை நெருங்கிய இளைஞர்களின் ஆரவாரங்கள் காதல் வெள்ளத்தில் திளைத்திருந்தவர்களை மிரள வைத்தது. அவர்களால் என்ன செய்யமுடியும்? அங்கு அரங்கேறிய காட்சிகளை அப்படியே அந்த மர்ம நபர் கமரா போனுக்குள் பதிவுசெய்து வைத்திருந்தார். இதையறிந்து அதிர்ச்சியடைந்த அந்தப் பெண்கள் அவரின் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி அந்த அலங்கோலக் காட்சிகளை அழித்துவிடுமாறு கோரி அழுது புரண்டனர்.

என்ன செய்வது 'ஆப்பிழுத்த குரங்கின்' கதைபோல அப்பெண்களின் நிலை. இனி இவர்களின் எதிர்கால நிலை பரிதாபத்திற்குரியதொன்றாகவே இருக்கப்போகின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இப்படியான சொல்வதற்கே நாக்குக் கூசும் அளவிற்குப் பல சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் அரங்கேறியபடி தான் இருக்கின்றன. தற்போதைய புறச்சூழலைப் பயன்படுத்தி பல இடங்களிலும் முளைத்துள்ள தனியார் விடுதிகள் மற்றும் ஆட்களற்ற வீடுகள் முதலியன இவ்வாறான சம்பவங்களுக்குத் தீனிபோடுகின்றன. அத்துடன், இணையத்தள வசதிகள் மற்றும் எல்லை மீறிய கைத்தொலைபேசிப் பாவனைகளும் இதற்கு தூபமிடுகின்றன. வீடியோ கமரா வசதிகள் கொண்ட பலவேறு விதங்களில் நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு புழக்கத்திற்கு வந்துள்ளன. இவற்றைத் தவறாகப் பயன்படுத்தும் முறைகள் இளவயதினரிடையே மேலோங்கிக் காணப்படுகின்றன.

இக் கைத்தொலைபேசிகளில் ஆபாசப் படங்களை பதிவிறக்கம் செய்து ரசிக்கும் கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இக் கலாசாரத்திற்குப் பெண்களும் விதிவிலக்கல்ல. குறிப்பாக, பாடசாலை மாணவிகளும் இத்தகைய கலாசாரத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர்.

இதனால், பல பெண்பிள்ளைகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அண்மையில் எனது நண்பர் கூறிய விடயம் என் மனதை துணுக்குறச் செய்தது.

யாழ். நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள பிரபல மகளிர் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவிகள் பலர் தம் வயிற்றில் கருவைத்தாங்கி வேதனைச் சூழலில் சிக்கி வருந்துவதாக கூறிக் கவலைப்பட்டார்.

கருவை அழிக்கமுடியாது எனவும் மீறி அழித்தால் மாணவிகளின் உயிருக்கே உலைவைப்பதாக முடியும் எனவும் குறித்த வைத்தியர் தரப்பால் சம்பந்தப்பட்ட மாணவிகளின் பெற்றோர்களுக்கு எச்சரிக்கப்பட்டதாகவும் அறியமுடிந்தது.

பெண்பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் அசட்டையீனமாக இருக்கின்றமையாலேயே இத்தகைய கீழ்த்தரமான சம்பவங்கள் எம் மத்தியில் இடம்பெற வாய்ப்பாக அமைகின்றது. பெற்றோர் தமது பிள்ளைகளின் ஒவ்வொரு செயற்பாடுகள் குறித்தும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என அறிவுத்தப்படுகின்றது.

எமது இனம் ஏனைய இடங்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. காரணம் நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்ட இனமாக சிறப்புற்றிருக்கிறது. அத்தோடு, ஏனைய இனக் கலாசாரங்களுடன் ஒப்பிடுகையில் தனித்துவமான பண்பாட்டுப் பேணுகைளைக் கொண்டது.

இத்துணை சிறப்புப்பெற்ற எம்மினத்தின் ஆணிவேரையும் பண்பாட்டின் அடையாளங்களையும் அழியவிடுவது எம்மினத்திற்கு ஆரோக்கியமான தல்ல. எனவே இத்தகைய கலாசாரச் சீர்கேடான சம்பவங்களைத் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும். இதனால் ஓரளவிற்காவது எமது பண்பாட்டுக் கூறுகள் அழிய விடாது தடுக்கலாம்.

**நிற்க,** *தடம் மாறும் யாழ்ப்பாண கலாசாரம் என்ற பகுதி எமது சமூக கலாசாரப் பிறழ்வான விடயங்களை அப்படியே வெளிச்சமாக்கிக் காட்டும் பகுதியாகும். மேற்கொண்டு இவ்வாறான சம்பவங்களை இனிமேலும் இடம்பெறாமற் தடுப்பதற்கே தவிர, யாருடைய மனங்களையும் புண்படுத்துவதற்காகவோ வேதனைப்படுத்துவதற்காகவோ அல்ல என்பதை வாசகர்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*இப்பத்தி பற்றி பல வாசகர்கள், யாழ்ப்பாண மண்ணின் உயர்ந்த கலாசாரத்தை கீழ்த்தரமான முறையில் விமர்சிப்பதாக அபிப்பிராயப்படுகிறார்கள். இப்பத்தியில் வரும் சம்பவங்கள் அனைத்தும் நிஜங்களே தவிர நிழல்கள் அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். எது எப்படியோ, இப்பத்தியை இனிவரும் காலங்களிலும் யாழ்.ஓசை மீது பதியவிடுவதா அல்லது இப்பகுதிக்கு நிரந்தரமாக விடை கொடுப்பதா என்பது பற்றி உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து இப்பத்தியை நிறுத்துவதா? இல்லையா? என்பது பற்றி எதிர்காலத்தில் முடிவு செய்யப்படும்.*

**உதிஷ்டிரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரசபையின் தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர் பதவியேற்பு

(சம்மாந்துறை மேலதிக நிருபர்)

கல்முனை மாநகரசபையின், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பிலான புதிய உறுப்பினராக கந்தையா தம்பிராசா பதவியேற்றுள்ளார். ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினராக இருந்து வந்த காத்தமுத்து கணேசின் இடத்திற்கே இவர் கட்சியால் சிபாரிசு செய்யப்பட்டு புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நற்பிட்டிமுனையைச் சேர்ந்தவரும் தமிழரசுக்கட்சியின் நீண்டகாலத்தொண்டருமான இவர், கடந்த 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்முனை மாநகரசபைக்கான தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ஆவார்.

கடந்த வாரம் நடைபெற்ற கல்முனை மாநகரசபையின் மாதாந்த செயலமர்வுக்கு முதன் முதலாகப் புதிய உறுப்பினர் கந்தையா தம்பிராசா வருகை தந்து கலந்து கொண்டபோது மாநகரசபை மேயர் எஸ். இஸட் எம். மசூர் மௌலானா உட்பட உறுப்பினர்கள் பலரும் அவரை வரவேற்று உரையாற்றினர்.

எதிர்கட்சித்தலைவர் ஹென்றி மகேந்திரன் புதிய உறுப்பினரை வரவேற்று உரையாற்றுகையில் :-

புதிய உறுப்பினர் கந்தையா தம்பிராசாவின் வருகையை பெரிதும் வரவேற்கின்றோம். தமிழரசுக்கட்சியுடனும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடனும் கடந்த காலங்களில் பெரும் அர்ப்பணிப்பு இணைந்து செயற்பட்ட இவர் மாநகரசபை ஆட்சி முடிவுறும் கட்டத்தில் வந்துள்ள போதிலும் அவர் பணி சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன் என்றார். உறுப்பினர் ஏ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பில் மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆறு உறுப்பினர்கள் மட்டுமல்ல, நம் கட்சி சார்பில் வேட்பாளர்களாகப்போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் இச்சபைக்கு வந்து செல்லவேண்டுமென்பதுதான் எனது ஆதங்கமாகும்.

இந்த வகையில் புதிய உறுப்பினரின் வருகையைப் பெரிதும் வரவேற்கின்றேன் என்றார். பிரதிமேயர் ஏ.ஏ. பசீர் உரையாற்றுகையில்:-

அனுபவம் வாய்ந்த புதிய உறுப்பினர் கந்தையா தம்பிராசா நமது சபைக்குக் கிடைத்துள்ளமை பெரும்பேறாகும். மக்கள் சேவையில் முன்னின்று நீண்டகாலமாக உழைத்துவரும் அவரை வரவேற்கின்றோம் என்றார். உறுப்பினர் சீ.எம்.முபீத் உரையாற்றுகையில் மக்களிடம் மதிப்பும், மரியாதையும் பெற்றுத்திகழும் புதிய உறுப்பினர் நமது இந்த சபைக்கு உறுப்பினராக வந்ததன் மூலம் அத்தகைய மக்களின் மதிப்பு மரியாதையை இழந்து விடுவாரோ எனக் கவலைகொள்கின்றேன்.

ஏனெனில் இந்த சபை மூலம் எந்த சேவையையும் மக்களுக்கு செய்ய முடியாத நிலையே இருந்து வருகின்றது என்றார். உறுப்பினர் ஏ.ஆர். அமீர் உரையாற்றுகையில் புதிய உறுப்பினரை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சார்பில் வரவேற்கின்றேன், தேசிய அரசியலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸ்சும் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள நிலையில் எடுகோளாக கல்முனை மாநகரசபை திகழ்கின்றது என்றார்.

## காரைதீவு முச்சந்தி அதிரடிப்படை சோதனைச் சாவடி நீக்கம்; முகாம் முன்பாகவுள்ள காணிகளும் கையளிப்பு

காரைதீவு,

பல்லாண்டு காலமாக காரைதீவு பிரதான முச்சந்தியில் இருந்து வந்த விசேட அதிரடிப்படை சோதனைச் சாவடி அகற்றப்பட்டுள்ளது.

அம்பாறை, அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதான முச்சந்தியில் இவ்வீதிச் சோதனைச் சாவடி அமைந்திருந்தது.

முன்னரெல்லாம் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டு வந்தது. மூன்று வீதிகளாலும் வருவோர் இவ்விதம் சோதனை செய்யப்பட்டனர்.

போர் ஓய்வடைந்த பின்னர் எழுமாறாக சில வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இங்கு எந்தக் கெடுபிடியும் இருக்கவில்லை.

கடந்த வாரம் அச் சோதனை சாவடியும் நீக்கப்பட்டுள்ளது. தற்போது காரைதீவில் பிரதான வீதியில் எந்த இடத்திலும் சோதனைச் சாவடி இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த பல தசாப்த காலமாக அதிரடிப்படை முகாம் எல்லைக்குள் இருந்து வந்த பல காணிகள் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முகாமிற்கு முன்பாகவுள்ள தனியாரின் கட்டடங்கள், காணிகள் இவ்விதம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வமத சமாதான ஒன்றியம் பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

காங்கேயனோடை,

மட்டக்களப்பில் வறிய பாடசாலை மாணவர்களுக்கு மட்டக்களப்பு சர்வமத சமாதான ஒன்றியம் பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றது.

இந்த திட்டத்தின் கீழ் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின் பாராளுமன்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மட்டக்களப்பு சர்வமத சமாதான ஒன்றியத்திற்கு வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் வைபவம் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு சர்வமத சமாதான ஒன்றிய செயலாளர் கணேசு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா, மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜி மற்றும் பங்குத் தந்தை இன்னோசி ஜோசப் வி.கே. கீர்த்திநாதன், திருமதி. கீர்த்தி நாதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழ், முஸ்லிம் 200 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் திருமதி. கீர்த்தி நாதனினால் பாடசாலை மாணவியொருவருக்கு துவிச்சக்கர வண்டியொன்றும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

## மகளிர் சங்க அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு

(நற்பிட்டிமுனை மேலதிக நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மகளிர் சங்க அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந்திரங்கள் சாய்ந்தமருது -5 நூறாணியா மகளிர் அமைப்பு, சாய்ந்தமருது-2, துபா மகளிர் அமைப்பு ஆகியவற்றிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். மஜீத், கணக்காளர் எம்.எம். உசைனா, நிதி உதவியாளர் எம்.எம். றவீட் சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் நிவாரண சகோதரிகளான எஸ்.சிபாயா, எம். கிஷோர்ஜஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கல்வியியற் கல்லூரி வளாகத்தில் சிரமதானம்

இறக்காமம்,

தேசிய கல்வி நிறுவனத்தின் கல்முனை பிராந்திய கல்விமாணிப் பட்டக் கற்கை நெறிகள் ஆசிரிய மாணவர்களின் சிரமதானம் அண்மையில் அட்டாளைச்சேனை கல்வியியற்கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்வி மாணிப்பட்டக் கற்கை நெறி ஆசிரிய மாணவர்களின் மூன்று ஆண்டு கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து வெளியாகும் ஆசிரிய மாணவர்களால் இச் சிரமதானம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அப்துல் றஸீல், கற்கை நெறியின் இணைப்பாளர் எஸ். என். ஏ. அறூஸ் விரிவுரையாளர் நபீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு வைத்திய சேவைகளை வழங்க நடவடிக்கை

காத்தான்குடி,

தற்போது பெய்துவரும் தொடர்ச்சியான பருவ மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலகுவான வைத்திய சேவைகள் கிடைக்க பிரதி மீள்குடியேற்ற அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேற்று ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைருக்கும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரனுக்கு மிடையிலான சந்திப்பில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் தொற்று நோய்கள் பரவாதிருக்க முன் நடவடிக்கைகளை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் எடுப்பதென்றும் நடமாடும் வைத்திய சேவைகளை முகாம்களுக்கு அனுப்பிவைக்கவும் முடிவெடுக்கப்பட்டதாக பிரதிஅமைச்சர் முரளிதரன் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது தற்போதைய வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஓட்டமாவடி வாழைச்சேனைப்பகுதி முஸ்லிம் மக்களையும் பிரதிஅமைச்சர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதுடன் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குட்பட்டவர்களில் காணப்படும் தாக்கங்கள் பற்றிய விளக்கங்களும் அவற்றைக் குறைப்பதற்கான இடையறுப்பு அணுகுமுறைகளும் பற்றிய பார்வை.

VI

ஆக்கம்
ஸ்ரீ.நதிபரன் B.A. (Hons)



(சென்ற வாரத் தொடர்ச்சி)

பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மூலம் சித்திரவதைக்குபட்டவர்கள் இழந்த வாழ்க்கையை மீளப்பெறமுடியும். சித்திரவதைக்குபட்டவர்கள் தமது பிரச்சினைகள் பற்றித் தகுந்த உளவளத்துணையாளர்களிடமோ அல்லது வைத்தியரிடமோ மனம்விட்டுக் கதைத்தால் தான் பிரச்சினைகளை இனங்கண்டு நோய் நிலைகளை நிதானித்தறிந்து அவர்களை மீள்வாழ்க்கையைத் தொடர்வதற்குரிய உதவிகளை தடங்கல் இன்றி வழங்குவதற்கு உதவும்.

சித்திரவதையால் கடுமையாகப் பாதிப்படைந்த ஒருவரை சிகிச்சை முறைகளுக்கு உட்படுத்தும்போது பல்வேறு விடயங்களைக் கையாளவேண்டும். இங்கு மூன்று விதமான அணுகுமுறைகள் மூலம் கையாளப்படுகின்றன.

1. நிலைத்தன்மையைப் பேணல் (Stabilization). அதாவது பாதிப்படைந்தவர் முன்னர் இருந்த பாதுகாப்பான சூழ்நிலைக்கு மீள ஒருங்கிணைக்க வேண்டும். (Re - establish an environment of safety and predictabilith for survivors). இதற்குப் பின்வரும் விடயங்கள் முக்கியமானவை.

a. நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் (Building trust).

b. வழமையான காரியங்களைச் செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் உறுதித் தன்மைகளையும் மீள ஒருங்கிணைத்தல் (Re- establish stability ahd predictabilith to routines).

c. உளவியல் ஆலோசனைகள் வழங்குதல். (Psycho education).

i . பாதிக்கப்பட்டவரிடம் காணப்படும் ஆற்றல்கள் எதிர்காலங்களைத் தெரியப்படுத்தல் (provide an opportunity for disclosure).

ii. உளரீதியான காயங்கள் இருந்தால் அது சாதாரணமாக பிரச்சினை என உளவியல் சார் முறையில் அணுகுதல். (Normalizing trauma psychological phenomena).

iii. வாழ்க்கையைப் பாதிக்கும் உணர்வுகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது பற்றி அறிவுறுத்துதல்- உ+ம்- கோபம், பதகளிப்பு, நடுக்கம். சந்தேகம் (The torture victim is taught how to control over whilming emotions).

இதற்கு அடிப்படை உளவளத்துணை திறன்களைப் பயன்படுத்தல் (Basic counseling skills)

2. சித்திரவதை அனுபவங்களைக் கூறுமாறு கேட்டல் (Coming to terms with the torture experience).

a. உதவியற்ற அல்லது நலிவுற்ற உணர்வில் இருந்தால் மீண்டு வருவதற்கு உதவியளித்தல். (Search for meaning and overcome feelins of helplessness and vulnerability).

b. உள்ளுக்குள் இருக்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த (மொழியூடாக). உதவுதல். (Labeling emotions and making implicit memories explicit through language).

c. உணர்ச்சி மிகுந்த விடயங்களுள்ள சம்பவங்களை மீளவும் சொல்ல வைக்கலாம். (Retelling the story connecting emotions).

3. நடைமுறை வாழ்க்கைக்கு இணைத்தல் (Reengaging in current life).

a. பாதுகாப்பான சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (Establishing secure social connections).

(தொடரும்)

# வீட்டு வைத்தியம்

- சளியிலிருந்து உடனடி நிவாரணம் பெற 1/2 டீஸ்பூன் மஞ்சள் பொடியை ஒரு கப் சூடான பாலில் கலந்து குடிக்கவும்.
- முட்டைக்கோசை நறுக்கிக் கொதிக்கும் வெந்நீரில் போடவும். சூடாக மேலே வரும் ஆவியை ஒரு நாளைக்கு இருமுறை உள்ளுக்கு மூச்சு இழுத்தால் கடுமையான ஜல தோஷம் விரைவில் குறையும்.
- வெந்தயக் கீரையை இரவில் படுக்கப்போவதற்கு முன்பு தலையில் தேய்த்து ஒரு துண்டால் தலையைக் கட்டி விடவும். காலையில் நீராடினால் பொடுகு நீங்கும்.



- வளர்ப்புப் பிராணியை உண்ணிகள் தொந்தரவு செய்கிறனவா? வேப்பம் இலைகளை அரைத்துப் பிராணியின் உடல் முழுவதும் தேய்க்கவும். சில மணி நேரத்திற்குப் பிறகு குளிப்பாட்டவும். உண்ணிகள் போயே போச்சு.
- வெந்நீரில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து குடிப்பதால் ஆஸ்துமா நோயால் அவதிப்படுவதிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.
- விக்கலால் அவதியா? மிளகை வறுக்கும் போது அதன் வாசனையை மிகுதியாக உள்ளுக்கு இழுக்கவும். உடனே தீர்வு கிடைக்கும்.
- சீதபேதி நிற்பதற்கு 1 டீஸ்பூன் வெந்தயத்தை வெதுவெதுப்பான வெந்நீரோடு குடிக்கவும்.
- மாதுளம் தோலை உரித்து தோலைக் காயவைத்துப் பொடியாக்கவும் ஒரு டீஸ்பூன் பொடியைத் தண்ணீரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடிப்பதால் ரத்த சுத்தி ஏற்படும். வயிற்றில் புழுக்கள் இருந்தால் அவை வெளிவரும்.




- கொய்யா இலைகளைத் தினமும் 3 முறை மென்று வந்தால் பல் ஈறுகளில் ஏற்படும் வலி போகும்.
- பொடுகைப் போக்க தேங்காய் எண்ணெயில் சில துளிகள் எலுமிச்சைச் சாறு கலந்து தலையில் அழுந்தத் தேய்க்கவும்.
- அதிகமான அரிப்பு ஏற்பட்டால் அந்த இடங்களில் ஐஸ் வைத்துத் தேய்க்கவும்.
- கடும் சூரிய வெப்பத்தால் ஏற்படும் தலைவலியைப் போக்க உடனடி நிவாரணி இதோ! சிறிது இஞ்சி விழுதையும் எலுமிச்சைச் சாறையும் வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிக்கவும்.
- கரும் புள்ளிகளால் கவலையா? பச்சைப் பயறு மாவு, தயிர், மஞ்சள் இலைகள் பொடிகலந்து தடவும். 10 நிமிடங்கள் ஊறிய பிறகு தேய்த்துக் குளிர்ந்த நீரினால் கழுவவும்.
- பருக்கள் நீங்க அரைத்த பச்சை வேப்பிலைகள், பயத்த மாவு மஞ்சள் பொடி, சந்தனப்பவுடர் ஆகியவை கலந்து பருக்களின் மீது தடவி 20 நிமிடங்களுக்குப் பிறகு குளிர்ந்த நீரால் கழுவவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வாதமும் ரூஸோவின் கல்விக் கருத்துக்களும்

**ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவிலும் நிறுவுனர் தின விழாவிலும் நினைவுப் பேருரையாற்றிய கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன் தெரிவித்த கருத்துக்கள் கீழே தொகுத்துத் தரப் பட்டுள்ளன.**



### இயற்கை வாதம்

இயற்கையே முழுமையான உண்மை. இயற்கையே அனைத்து இயக்கங்களுக்கும் அடிப்படையானது என்பதை வலியுறுத்தும் கோட்பாடு இயற்கைவாதமாகும். எல்லாவகையான நியமங்களையும் இயற்கைக்கு உட்பட்டனவாக வலியுறுத்தும் இயற்கை வாதம் மனித வாழ்க்கையை இயற்கை விதியின் ஒரு அம்சமாகப் பார்க்கின்றது.

இயற்கைக்கோட்பாடு விஞ்ஞானக் கண்ணோட்டமுடையது. இது பௌதீக விஞ்ஞானத்துக்கு முதன்மையளிப்பதுடன் விஞ்ஞான ரீதியிலான வாழ்க்கைத் தத்துவத்தினை முன் வைக்கிறது. மனிதர்களிடத்தில் இயற்கையான ஆன்மிகத் தன்மை காணப்படுகின்றது என்ற பழமை வாதச் சிந்தனையை இது நிராகரிக்கிறது. அதேவேளை புலன்களின் வழியாக மனிதர்கள் இயற்கையிலிருந்து அறிவு பெறுகிறார்கள் என்பதை இவ்வாதம் வலியுறுத்துகிறது.

இவ்வியற்கைவாதம் ஐரோப்பாவில் காணப்பட்ட செயற்கையான நிலைமைக்கு (Artifical Formalism) மாற்றாக எழுந்ததாகும். அவ்வேளை ஐரோப்பாவில் மதகுருமாரின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்ததுடன் எதேச்சாதிகாரப் போக்கும் காணப்பட்டது. இதற்கு எதிராகப் பலர் கிளர்ந்தெழுந்ததுடன் தத்தமது சார்பு நிலைக்கு அமைவாகப் பல கோட்பாடுகளையும் நிறுவினர். அவ்வகையில் ஜூன் ஜாக் ரூஸோவினால் முன்வைக்கப்பட்ட கோட்பாடே இயற்கை வாதமாகும்.

இக்கோட்பாட்டினை உருவாக்கிய ரூஸோவின் கருத்துக்களே பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை வாதத்தில் இயற்கையே முதன்மை வகிக்கின்றது. இதை புறச்சூழலாகக் காண்போரும் மனிதர்களின் இயற்கையான செயல்களாகக் கருதுவோரும் என இரு சாரார் உள்.

இயற்கையானது எல்லோரையும் சமமாகவே கருதுவதாகக் கூறுவதோடு மனிதன் இயற்கையின் குழந்தை, இயற்கையின் எளிமையுடன் இணைந்து வாழ்வதே மிகச்சிறந்த வாழ்க்கை என்று வலியுறுத்துகிறார். இயற்கைக்குத் திரும்பிச் செல். இயற்கையின் போக்கிற்கேற்ப நட என்பதே அவரது உரத்த குரலாகும்.

மனிதர்கள் தம்மிடமுள்ள இயற்கை மூலமும் சுற்றுப்புறச் சூழலிலிருந்து சக மனிதர்களிடமிருந்தும் கற்றுக் கொள்கிறார்கள் என்று கூறும் ரூஸோ தனது எமிலி எனும் நூலில் இயற்கைக்கு முரணான மனிதர்களின் செயற்பாடுகளைச் சாடுகிறார். எல்லாப் பொருட்களும் இயற்கையில் நல்லவைகளாகவே படைக்கப்படுகின்றன. ஆனால், மனிதன் அவற்றில் தலையிட்டு அவற்றைத் தீயனவாக்கி விடுகிறான். ஒரு மண்ணில் உற்பத்தியாக்கக் கூடிய பொருளை பிறிதொரு மண்ணில் உற்பத்திசெய்ய எண்ணுகிறான். ஒரு மரத்தில் காய்க்கக்கூடிய பழத்தை இன்னொரு மரத்தில் எதிர்பார்க்கிறான். இடம், காலம், இயற்கை எல்லாவற்றையும் குழப்புகிறான்.

தனது நாய், குதிரை, அடிமைகள் எல்லாவற்றையும் சிதைத்தும் அழித்தும் விடுகிறான். உருவம் குலைந்தவற்றையும் விகாரமடைந்தவற்றையும் அவன் நேசிக்கிறான். எதனையும் இயற்கைத் தோற்றத்தில் பார்ப்பதற்கு அவன் விரும்புவதில்லை. என எமிலி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதனின் இந்த நிலை நீடித்தால் அவன் கொடியவனாகி விடுவான். அது அவனிடத்தில் இருக்கும் இயற்கைத் தன்மையை அழித்து விடும் எனவும் அவர் எமிலியில் குறிப்பிடுகிறார்.

இயற்கை வாதம் இன்று உயிரியல்கள் இயற்கை வாதம், பொறிமுறை இயற்கை வாதம், சமூக இயற்கைவாதம் எனப் பல அடிப்படைகளில் விரிந்து காணப்படுகிறது.

இயற்கையின் புறக்கணிக்கவியலாத விதிகளின் நிலைமையை இயற்கை வாதம் எடுத்துரைக்கின்றது. இது இறைவனிலிருந்து இயற்கையைப் பிரித்து ஆன்மாவைப் பௌதீக அம்சங்களுடன் இணைக்கும் உச்சவிதியாகக் காணப்படுகிறது என ஜேம்ஸ் வாற் கூறுகிறார். 'மனித அனுபவங்களுக்குப் புறம்பானவற்றையும் இயற்கைவாதம் ஒதுக்கிறது' என ஜோய்ஸ் என்பவர் கூறுகிறார். எவ்வாறெனினும் பிரெஞ்சுப் புரட்சிக்கும் ஐரோப்பிய சிந்தனையுருவாக்கத்திற்கும் பங்காற்றிய இக்கோட்பாடு விஞ்ஞானபூர்வமான தர்க்க சிந்தனையாக உருவெடுத்ததுடன் கல்வியியல் சமூகவியல் ஆகிய துறைகளில் அதிக பங்களிப்பை வழங்கியும் வருகின்றது.

இயற்கை வாதத்தை முன்வைப்பதற்கு ரூஸோவின் வாழ்க்கையும் இவரிடத்தில் காணப்பட்ட சுதந்திரத்தன்மையும் காரணமெனலாம். இவர் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் 1712 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி கடிகாரம் திருத்தும் தொழிலாளியின் மகனாகப் பிறந்தார்.

பிறந்து பத்தாவது நாளில் தாயைப் பறி கொடுத்த இவர் தந்தையாரின் சகோதரின் அரவணைப்புடன் வாழ்ந்தார். சிறுவயதில் கல்வியில் ஆர்வம்மிக்க இவர் தனது பத்தாவது வயதில் ஒரு புரட்டஸ்தாந்து மத குருவிடத்தில் தங்கியிருந்து கல்வி கற்றார். இரு வருடங்களே இது நீடித்தது. அதன் பின் பல வேலைகளையும் செய்தார். ஊர் சுற்றித் திரிந்தார். மதமும் மாறினார். பிரான்ஸிற்குப் புலம்பெயர்ந்தார். அங்கு பல அறிஞர்களோடு தொடர்பு கொள்ளவும் சங்கீதம், நாடகம் முதலியற்றில் தனது வித்துவத்தை எடுத்துக் காட்டவும் முடிந்தது. எமிலி, சமுதாய ஒப்பந்தம் உட்பட 13 நூல்களை எழுதியுள்ளார். எனினும் இவரது வாழ்க்கை முழுவதும் அலைச்சலும், பிரச்சினைகளும் நிரம்பியதாக இருந்ததுடன் அதிகாரக் கட்டுப்பாடுகளும் நண்பர்களின் துரோகத்தனங்களும் இவரை கஷ்டப்படுத்தின.

**உருவம் குலைந்தவற்றையும் விகாரமடைந்தவற்றையும் அவன் நேசிக்கிறான்.**

**எதனையும் இயற்கைத் தோற்றத்தில் பார்ப்பதற்கு அவன் விரும்புவதில்லை.**

இத்தகைய வாழ்க்கைப் பின்புலம் சமூகம் தொடர்பாகவும் எதேச்சாதிகாரம் தொடர்பாகவும் மதக்குழுக்களது குறிப்பாக மத குருமாரது மேலாதிக்கம் தொடர்பாகவும் எதிர்வினைகளைத் தொடுக்கவும் மாற்றுச் சிந்தனைகளை முன் வைக்கவும் வழிகோலின. ஒரு மனிதன் தன்னுடைய சுதந்திரத்தை துறந்துவிட்டானெனில் அவன் மனிதத்தன்மையையும் துறந்தவனாகிறான். சுதந்திரமற்றவரிடம் எத்தகைய குணங்களைப் புகுத்தியும் மனிதத் தன்மையை நிரப்பமுடியாது என்று சமுதாய ஒப்பந்தம் என்ற நூலில் ரூஸோ கூறுவதிலிருந்து சுதந்திரம் தொடர்பான அவரது கருத்து நில புலப்படுகிறது.

இந்த அறிமுகத்துடன் ரூஸோவின் கல்விக் கருத்துக்களை நோக்குவோம். அவரது அரசியல் கருத்துக்கான சமுதாய ஒப்பந்தம் நூலிலும் கல்விக் கருத்துக்களை எமிலி என்ற நூலிலும் நாம் காணலாம்.

'எமிலி' 1762 இல் அவரால் எழுதப்பட்டது. இந்நூலின் ஒரு பகுதி புனைகதையாகவும் மறுபகுதி கருத்து விளக்கமாகவும் அமைந்துள்ளது. ஐந்து பாகங்கள் கொண்ட இந்நூலில் முதல் நான்கு பாகங்களும் எமிலி என்ற சிறுவனது குழவிப் பருவம், குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், காளைப் பருவம் ஆகியவற்றுக்கான கல்வியளித்தல் பற்றியும் ஐந்தாம் பாகத்தில் எமிலிக்கு மனைவியாகப் போகும் பெண் எவ்வாறு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

'ஞானத்தமிழ்'
(ஏழாலை நிருபர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பூமராங்

**கி.குகநாதன்**

வல்லிபுரத்தார் அன்று வழமைக்கு மாறாக அதிகாலையிலேயே கண் விழித்தெழுந்திருந்தார். காலைக்கடன்களையெல்லாம் மளமளவென்று செய்து முடித்தார். மார்கழி மாதக் குளிரையும் பொருட்படுத்தாது ஜில்லென்ற கிணற்று நீரில் குளித்து நல்ல புத்தாடை அணிந்து பூஜை அறையில் பூக்களைப் பறித்தெடுத்துச் சென்று வைத்து குத்தவிளக்கேற்றி நறுமணப் பத்திகளையும் பற்ற வைத்துவிட்டு கண்களை மூடிக் கொண்டு 'என் அப்பனே பிள்ளையாரப்பா என் பிள்ளை இதுபோலவே ஒவ்வொரு பரீட்சையிலும் உலகமே வியக்கும் வண்ணம் நல்ல மாதிரிச் சித்தியடைந்து அவன் ஒரு டாக்டராக வரணும். இதுதானப்பா நான் உன்னட்டை இருந்து கேக்கிற பிச்சை' என்று கண்கலங்க வணங்கி மனமுருகி நின்றார்.

பகலெல்லாம் அடுக்களையோடும் தோட்டவேலைகளோடும் மல்லுக்கட்டி உடல் அலுப்பில் நித்திராதேவியின் அரவணைப்பில் அவள் தாலாட்டி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த வள்ளியம்மையோ வாசனைச் சாம்பிராணிக் குச்சியின் நறுமணத்தில் தூக்கம் கலைந்து எழுந்தாள். கலைந்து கிடந்த தன் ஆடையைச் சரிசெய்தவாறே பூஜை அறையை எட்டிப்பார்த்தாள்.

அங்கு அவள் கண்ட காட்சி அவளை ஆச்சரியப்பட வைத்தது. ஆம் அவள் அன்புக்குரிய கணவர் வல்லிபுரநாதர் கண்ணகளிலிருந்து தாரைதாரையாக கண்ணீர் வந்து கொண்டிருக்க கண்களை மூடியவாறு அவர் உதடுகள் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. வள்ளியம்மை பொறுமையாக எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் பூஜையை முடித்துக் கொண்டு வல்லிபுரத்தார் பூஜை அறையின் வாசலை நோக்கித் திரும்பி நடந்தார்.

வள்ளியம்மையைப் பார்ப்பதற்கிடையில் அவள் பொறுமை காக்க முடியாமல் வல்லிபுரத்தாரை நோக்கி "என்னப்பா நேற்று முழுக்கத் தோட்டத்திலை கொத்திப்போட்டு நல்ல அலுப்போடை வந்து படுத்தனீங்கள். இப்ப என்னடாவெண்டா இந்த வெள்ளென எழும்பி மார்க்கழிக் குளிருக்கை குளிச்சுப் பூஜை புனஸ்காரம் என்று நிக்கிறியள் எனக்கெண்டா ஒரே ஆச்சரியமாயிருக்குது. உங்களுக்கு என்ன நடந்ததப்பா?" என்று கேட்டாள்.

வல்லிபுரத்தாரோ "என்னப்பா மறந்திட்டியே இண்டைக்கு மகனின்ரை லீவிங் சேட்டிபிக்கேட் எடுக்கவெல்லோ விநாயகர் வித்தியாலயத்திற்குப் போக வேணும். அதுதான் அதே யோசனையோட படுத்தனான் வேளைக்கு எழும்பிட்டன்" என்றார்.

"உதென்னப்பா... உதென்ன பெரிய விசயம் எண்டு உதுக்குப் பெரிய அடுக்குப் பண்ணிறியள்" என்று வள்ளியம்மை கேட்டாள்.

வல்லிபுரத்தார் "என்னப்பா அப்படிச் சொல்லிப்போட்டாய். என்ரை வாழ்க்கையின் இலட்சியமே மகன் வேந்தனை ஒரு டாக்டராக்கிப் பார்க்கவேணும். அம்முயற்சியிலை இது முதற்படி. நான்தான் படிக்க முடியாமல் போயிட்டுது. திறமையிலிருந்தும் வறுமை காரணமாக அப்புவாலை என்னைப் படிக்க வைக்க முடியவில்லை. என் பிள்ளைக்கு அப்புடி ஒரு நிலைமை வரக்கூடாது. அதிலை நான் கண்ணும் கருத்துமாத்தான் இருப்பேன்" என்றார். வல்லிபுரத்தார் வள்ளியம்மை தம்பதிகள் வறுமையில் உழன்றாலும் தம் ஒரே மகன் வேந்தனை ஒரு குறையுமில்லாமல் இராசா மாதிரித்தான் வளர்க்கிறார்கள். இது ஊரே பேசிக் கொள்ளும் மகனின் சமாச்சாரம்தான். அதிலையும் வல்லிபுரத்தார் ஒரு படி மேலே சென்று மகனின் ஒவ்வொரு அசைவிலேயும் கண்ணும் கருத்துமாக இருந்தார்.



அன்று வழமைபோலவே அந்த ஆலையூர்க் கிராமத்தின் கல்வி விருட்சமாகத் திகழும் விநாயகர் வித்தியாலயத்தின் பீயோன் கிருஷ்ணர் பாடசாலைக்குத் நேரத்துடன் வந்து பாடசாலையைத் திறந்தார். சில ஆசிரியர்களும் மாணவர்களும் வந்து கொண்டிருந்தனர்.

கிருஷ்ணர் வல்லிபுரத்தைக் கண்டதும் "என்ன வல்லிபுரண்ணை பள்ளிக்கூடப் பக்கம்..." என்று வினாவினான்.

வல்லிபுரத்தாரும் தன் மகனை புலமைப் பரிசில் பரீட்சையில் நல்ல புள்ளியைப் பெற்றுச் சித்தியெய்தியமையால் நகரத்துப் பள்ளிக்கூடத்திலை சேர்க்க லீவிங் சேட்டிவிக்கேட் எடுக்க வந்ததையும் கூறினார்.

கிருஷ்ணரோ "நேற்றும் இரண்டு மூன்றுபேர் உந்த விடயமாத்தான் வந்தவை. அதற்கு சேர் கொடுக்க மாட்டன் என்றிட்டார். கெட்டிக்காரப்பிள்ளையள் எல்லாம் நகரத்துப் பள்ளியளுக்குப் போனால் நாங்கள் பள்ளிக்கூடத்தை இழுத்துப் பூட்ட வேண்டியதுதான். கல்வியதிகாரிகள் வந்து எத்தனை வீதமானோர் சித்திபெற்றனர் என்றும் ஏன் முன்னேற்றத்தைக் காணோம் என்றும் கேட்க நாங்கள் வாயைப் பொத்தி தலையைத் தொங்கப் போட வேண்டியதுதான் என்று எரிந்து விழுந்தார். நீங்கள் ஒரு வகையிலே அவருக்கு உறவுக்காரர்தானே என்னத்துக்கும் கேட்டுப்பாருங்கோவன்" என்றார்.

"எட தம்பி உனக்கெண்ட படியால் சொல்லுறன் அதிபர் தன்ரை பொடியளையெல்லாம் நகரத்துப் பள்ளியிலை சேர்த்துப் படிக்க வைக்கேல்லையோ? அதென்ன அவருக்கு ஒரு நீதி எங்களுக்கு வேறு ஒரு நீதியா?" என்றார் வல்லிபுரத்தார்.

அதற்கு கிருஷ்ணரோ "குரு செய்தால் குற்றமில்லை. என்ற முதுமொழி தெரியாதோ. அது மாதிரித்தான் இதுவும்" என்றான்.

"நீங்கள் அவரோடை ஏதும் கதைச்சுப்போடாதைங்கோ. கதைச்சால் தருகிற சேட்டிபிக்கேட்டையும் தராமல் விட்டிடுவார். ஏதோ நயமாகப் பேசி அலுவலை முடியுங்கோ" என்று கிருஷ்ணர் கூறி முடிக்கவும் அதிபர் தருமரத்தினத்தாற்ர ஹீரோ கொண்டா உறுமிக் கொண்டு வந்து வாசலை அடைந்தது. வல்லிபுரத்தாரைக் கண்ட தர்மரத்தினத்தார் "என்ன வேளாப்போலை இந்தப் பக்கம்" என்று கேட்டார்.

வல்லிபுரத்தார் "சேர் உங்களைத் தான் ஒருக்காப் பார்த்துப் பேசலாமெண்டு வந்தனான்" என்றார்.

இதைனைக் கேட்டவாறே அதிபர் அலுவலகத்தினுள் நுழைந்து தன் கதிரையில் அமர்ந்தவாறே கிருஷ்ணரை அழைத்து அவனிடம் கூறினார் "வல்லிபுரத்தாரைக் கொஞ்சம் இருக்கச் சொல்லு வாறன் என்று".

இவர்கள் யாவருமே ஒரே ஊரவர்கள் மட்டுமல்ல உறவினர்களும் கூடத்தான். சிறிது நேரத்தில் வல்லிபுரத்தாரை அதிபர் தருமரத்தினத்தார் தன் முன்னுள்ள கதிரையில் உட்காரவைத்தார். தருமரத்தினத்தார் "அப்ப சொல்லுங்கோ என்னவிடயமாக வந்தனீங்கள்".

வல்லிபுரத்தார் மனதுள் பயந்த படியே மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார். "எனது மகன் வேந்தன் இங்க ஐந்தாம் தரத்தில் பயில்கிறான்..." என்றதும் உடனே தருமரத்தினத்தார் "ஓ! அதுதான் தெரிவுமே. அவன் படிப்பில் படுசுட்டி பிறகென்ன. கவலை உமக்கு. அவனால் எமது பாடசாலைக்கும் பெருமை. இப்படிப்பட்ட பிள்ளைகள் கொஞ்சப் பேர் ஒவ்வொரு வகுப்பிலையும் இருந்தால் உந்தக் கல்வி அதிகாரியளுக்கு முன்னாலை நிமிர்ந்து நின்று பேசலாம். இதனால் எமது பாடசாலைக்கும் ஏன் எனக்கும் பெருமைதான். இங்கைதானே இப்போது க.பொ.த. உயர்தரத்திலை எல்லாப் பிரிவுகளும் ஆரம்பிச்சிட்டம். பள்ளிக்கூடம் இப்ப மெதுவாக வளர்ந்து கொண்டு போகுது" என்று அடுக்கிக் கொண்டே போனார்.

வல்லிபுரத்தாரோ எப்படிப்பேச்சை ஆரம்பிப்பது என்று புரியாமல் எச்சிலை மென்ற விழுங்கினார். எப்படி விடயத்தைத் தொடங்குவது என்று தெரியாது திண்டாடினார். இறுதியாக ஒரு மாதிரி விடயத்தைப் போட்டுடைத்தார். "என்ர மகன் நகரப் பள்ளியிலை தான் படிக்கப் போறனெண்டு அடம்பிடிக்கிறான்" என்று ஒருவாறு சொல்லி முடித்துவிட்டு தருமரத்தினத்தாற்ர முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தார். அவரது முகத்தில் எள்ளும் கொள்ளும் ஒன்றாகவே வெடித்துக் கொண்டிருந்தது. அவர் சத்தம் போட்டுப் பேச ஆரம்பித்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்





**பண்டைக் காலத்துக் காதலும் இக்கால காதலும்**

'காதல்' என்ற பதம் அன்பென்ற பொதுமைப் பொருள் குறித்து நின்றாலும் ஒரு தலைவனுக்கும் தலைவிக்கும் இருக்கக்கூடிய உறவுப் பிணைப்புக்கு காதல் எனும் பெயரால் சூட்டப்படுவது வழமை. பண்டைத் தமிழ் காதல் தெய்வத்தன்மை பொருந்தியது என்றும் புனிதமானது என்றும் இலக்கியப் பாடல்கள் வாயிலாக அறியப்படுகின்றது.

அக் காலத்தில் 'களவு மணம்', 'கற்பு மணம்' என்ற இரு விதமான திருமணங்கள் நடைபெறுகின்றன. இதனை பழந்தமிழ் நூல்கள் களவியல், கற்பியல் என்று கூறுகின்றன. களவியல் என்பது ஒரு தலைவனும் தலைவியும் பெற்றோரின் சம்மதமின்றி தம்மிடையே இருக்கும் அன்பின் மிகுதியால் திருமண பந்தத்தில் இணையும் உறவைக் களவியல் என்பர். கற்பியல் என்பது பெற்றோரின் சம்மதத்துடன் திருமண நிச்சயதார்த்தம் செய்து தலைவனுக்கும் தலைவிக்கும் இடம்பெறும் உறவை கற்பியல் என்று கூறுவர். இத்தகைய திருமணங்கள் தற்போதும் நிலவுகின்ற போதும் அக்கால காதல் வாழ்க்கைக்கும் தற்போதைய காதல் வாழ்வுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் தென்படுவதை அவதானிக்கலாம்.

களவியலில் வரும் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே காணப்பட்ட கள்ளக்காதல் தொடர்பு பற்றி சற்று நோக்கினால் காதலனும் காதலியும் தமது காதலை வலுப்படுத்த ஒரு தனிமையான மறைவான இடத்தில் சந்தித்து தமது அன்பை வெளிப்படுத்துவார்கள். முன்வினைப் பயனால் இவர் எனது கணவன் என காதலியும், எனது மனைவி என காதலனும் கருதி உள்ளமும், உடலும், உணர்வும் ஒன்றாக சங்கமிக்க ஈருடல் ஒருயிராய்க் கூடி இன்புறுவர். இதற்கு தெய்வீகக் காதல் என்று கூறுவர். திருமணத்தின் பின் தமது ஒழுக்கத்தினின்றும் கற்பினின்றும் ஒரு போதும் பிறழ மாட்டார்கள். இமய மலை சரிந்தாலும் அவர்களது உண்மைக்காதல் ஒரு போதும் சரிவடைய மாட்டாது. அவனையன்றி அவள் வேறு ஒரு ஆடவனை கனவிலுங்கூட நினையாள். அதேபோல அவளையன்றி அவனும் வேறு ஒரு பெண்ணை மனதிலும் தீண்டான். ஆனால் தற்காலத்தில் எம்மவரிடையே நிலவிவரும் காதல் பற்றி விளக்கிக் கூற வேண்டிய அவசியமில்லை. யாவற்றையும் நிதர்சனமாகக் காணுகிறோம்.

இத்தகைய களவியல் முறையில் ஒரு காதலனும் காதலியும் மனதால் ஒன்று பட்டனர். நீண்ட நாள் உறவு அது. அந்த உறவை அறிந்த பெண்ணின் பெற்றோர் அக்காதலுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி அப் பெண்மணியை வேறு ஒரு ஆணுக்கு மணம் பேசலானார்கள். இதனை அறிந்த அந்தப் பெண் தன் காதலனைத்தவிர வேறு ஒருத்தனையும் நான் கைப்பிடியேன் என்று மனவுறுதி கொள்கிறாள். இனியும் இங்கு இருப்பது உசிதமல்ல எனக்கருதி தன் காதலனுடன் வீட்டை விட்டு ஓடிவிடுகிறாள். தன் புதல்வியைத் தேடி தாயார் செல்கிறார். தற்காலத்தில் என்றால் போகட்டுமே என்று கைகழுவி விட்டுவிடுவார்கள் என்பது வேறு விடயம். ஆனால் அக் காலத்தில் அப்படி அல்ல. தனது புதல்வி எங்கு சென்றிருப்பாளோ என அங்கலாய்த்தபடி காடுமேடு பாலைவனம் தாண்டி வருந்தியபடி செல்கிறாள் அந்த பாசத் தாய். தண்ணீரே இல்லாத கொடிய பாலைவனம் நெருப்புப்போல் கொதிக்கிறது. அனல் காற்று வீசுகிறது. விலங்குகள், பறவைகள் கூட அங்கு இல்லை அத்தகைய கொடிய வனம் அது.

இக் கொடிய பாலைவனத்தைத் தாண்டியா எனது இளம் புதல்வி சென்றாள் என மனம் வெதும்பினாள். எப்படி இக்கொடிய பாலைவனத்தைத் தாண்டி சென்றாளோ? என ஆதங்கப்படுகின்றாள். வெய்யிலின் வெப்பம், சுடுமணலின் வெம்மை, காற்றின் சூடு ஆகிய மூன்று வெப்பத்துடன் கூடிய அவ் வனத்தின் கொடுமையை நினைத்து அத்தாய் உருகுவதாக ஔவையார் பின்வருமாறு கூறுகிறார்.

*'அற்றாரைத்தாங்கும் ஐவேல்*
*அசதி அருவரையில்*
*முற்றா முகிழ் முலை எங்ஙனம்*
*சென்றனள் முத்தமிழ் நூல்*
*கற்றார் பிரிவும் கல்லார்*
*இணக்கமும் கைப்பொருளொன்று*
*அற்றார் இளமையும் போலவே*
*கொதிக்கும் அருஞ்சுகரமே'*

என்கிறார். இதன் கருத்து யாதெனில், திக்கற்றவர்களை அரவணைக்கும் ஐவேல் என்ற அரசனுடைய ஆட்சிக்குரிய மலைச் சரிவில் அப்பாவியான எனது இளம் புதல்வி எவ்வாறு சென்றாள்? முத்தமிழையும் கற்றவர்களின் பிரிவு போலவும் கல்லாதவர்களின் உறவு போலவும் வறுமையால் வாடும் இளையோர் போலவும் அந்த வனம் கொதிப்பதாக ஔவையார் குறிப்பிடுகிறார். அவ்வெயிலின் வெம்மை கற்றறிந்தாரை விட்டுப்பிரிவது போலவும், சுடுமணலின் வெப்பம் கற்றறியாத மூடரின் உறவைப் போலவும், அனல்க் காற்றின் வெப்பம் இளையோர் வறுமை போலவும் கொதிக்கிறது என உவமையூடாக ஔவையார் விளக்கியுள்ளார் .

அறிஞரது கூட்டுறவு , மிகுந்த இன்பம் தரும். அதே வேளை அவர்களது பிரிவு பெரும் துயரம் தரும். இதனையே திருவள்ளுவர்

*'உவப்பத் தலை கூடி*
*உள்ளப்பிரிதல்*

அதனைத்தே புலவர் தொழில்' என்கிறார். ஆனால் கல்லாதவர் அறிவில்லாதவர் நட்பு பெரும் கெடுதிதரும். அவர்களுடன் சேர்ந்திருப்பது அவர் கருத்தைக் கேட்பது எல்லாம் பெரும் தீமைக்கே வழிவகுக்கும். இன்றைய காலத்தைப் பொறுத்தவரை கற்றவர்கள் கயவர்களாக மாறுகின்றனர். பணம், பதவி ஆசைகள் அவர்களின் அறிவை மறைக்கின்றன. இதனால் கற்றதன் பயனை அவர்கள் துய்க்கத் தவறுகின்றனர். அற்பசொற்ப சலுகைகளுக்காக தாம் கற்ற கல்வியை அடகுவைத்து விட்டு விலைபோவது வேதனையிலும் வேதனை.

மூன்றாவது இளமையிலும் வறுமை ஔவையார் தொடர்ந்து பேசுகிறார்.

*'கொடிது கொடிது வறுமை*
*கொடிது*
*அதனிலும் கொடிது*
*இளமையில் வறுமை'*

இதிலிருந்து வறுமையானது இளம் சந்ததியினரிடத்துக் காணப்படின் அதை விடக் கொடுமை இந்த உலகிலே வேறொன்றும் இல்லை என்கிறார்.

ஆகவே புதல்வியைப் பிரிந்த தாய் தீயார் நட்பைப் போலவும் கற்றவர்களைப் பிரிந்தோர் போலவும் இளமையில் வறுமை போலவும் அவள் மனம் கொதிக்கின்றது என்று ஔவையார் பாடுகிறார். காதல் ப்பாடல்களானாலும் சரி வீரம் செறிந்த பாடல்களானாலும் சரி அதன் உட் கருத்து ஒழுக்க விழுமியங்களை மக்கள் மனதில் விதைப்பதென்பதே நோக்கமாகக் கொண்டவை என்றால் மிகையில்லை.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்



பிள்ளையைக் கட்டி வளர்க்க வேணும் வடலியை வெட்டி வளர்க்க வேணும்' பழுத்த அறிவும் அநுபவமும் மிக்க மூத்தவர் ஒருவர் வீட்டு வளவில் உள்ள மரங்களின் பராமரிப்பு பணியில் ஈடுபட்ட இளையோருக்குச் சொன்ன வசனம் தான் அது.

அப் பெரியவருடன் பேச்சுக் கொடுத்தேன். தம்பி பிள்ளை என்றால் தென்னம்பிள்ளை. அதனை நாங்கள் வளர்க்கும் போது அதன் ஓலைகளை ஒரு நாளும் வெட்டக் கூடாது. இடைஞ்சலாக இருக்கும் ஓலைகளை பக்கத்து ஓலைகளுடன் கட்ட வேண்டும். பழுத்த காய்ந்த ஓலைகளைத் தான் வெட்டியெடுக்க வேண்டும். பச்சை ஓலைகளை வெட்டினால் தென்னம்பிள்ளையின் மூச்சுக் குறைந்து விடும்.

மரத்தின் அடியும் பருமனும் சிறுத்து விடும். பாளை தள்ளினால் காய்ப்பதும் குறையும். காய்க்கும் தேங்காய்களும் பருமன் குறைந்ததாகவே இருக்கும். பச்சை ஓலை ஒவ்வொன்றும் வெட்ட வெட்ட ஒவ்வொரு குலையின் மூச்சுக் குறையும். அதனால் தான் பிள்ளையைக் கட்டி வளர்க்க வேண்டும்.

ஒரு வளவில் தென்னை மரம் ஒன்று முதன் முதலாக பாளை தள்ளும் போது பூப்படைந்த பெண்ணுக்கு செய்வது போல அதற்கும் தங்கச் சங்கிலி போட்டு படைக்கும் பழக்கமும் எம்மிடமுள்ளது. சில இடங்களில் புதுப்பாளையில் சுமங்கலிப் பெண்ணின் தாலிக் கொடியும் அணிவிப்பார்கள்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தான் இப் பழக்கம் இன்றும் தொடர்கின்றது என்றார் அப் பெரியவர். தென்னைப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் ஒருவர் கூறினார் தேங்காயின் மட்டைகளை எரிப்பதற்கு பதிலாக அவற்றை மரத்தின் அடியிலிருந்து 6 அடி தூரத்தில் தாட்டு வைத்தால் மரம் நிறைய பருமனான காய்களைத் தரும்.

அவற்றின் அதிகரித்த வருமானத்திலிருந்து காஸ் அடுப்பு, காஸ் சிலிண்டர் வாங்கி சமையலை சுகமாகச் செய்யலாம் என்றார். விறகு அடுப்பின் வெக்கையுடனும் புகையுடனும் போராடித் துன்பப்படுவதை விட இது சுகமும் லாபமும் என்றார்.

முதல் சொன்ன மூத்த பெரியவரின் பக்கம் போவோம். வடலியை வெட்டி வளர்க்க வேண்டும். பனை விதை முளைத்து அடிமரம் வைக்கத் தொடங்கும் பருவம் வடலிப்பருவமாகும்.

வடலியின் ஓலைகளை வெட்டித் தான் வளர்க்க வேண்டும். ஓலைகள் வெட்டுவதால் அதன் வளர்ச்சி பாதிக்கப்படாது என்றார்.

மூத்தோர் தமது வாழ்க்கை அநுபவங்கள் ஊடாக கற்றுக் கொண்ட பாடங்களை நாம் நல்ல எண்ணங்களாகப் பெற்றுக் கொண்டால் வாழ்வு வளம் பெறும் அல்லவா?

மூத்தோர் தமது வாழ்க்கை அநுபவங்கள் ஊடாக கற்றுக் கொண்ட பாடங்களை நாம் நல்ல எண்ணங்களாகப் பெற்றுக் கொண்டால் வாழ்வு வளம் பெறும் அல்லவா?

**- சிவகாமி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வியல் கூரான நாட்டார் ஆடலும் பாடலும்

எஸ்.ரி.குமரன்




மனித வாழ்க்கை முறையானது பிறப்பு முதல் இறப்பு வரையான செயற்பாட்டுக்குக் காலத்தை உள்ளடக்கியுள்ளது. மனித வாழ்வின் வளர்ச்சிப் படிநிலையானது வாழ்வியல் பருவத்திலே ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களையும் பருவங்களையும் கொண்டமைந்துள்ளது. இத்தகைய வாழ்வியற் கூறிலே இசையும் நடனமும் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாழ்வியல் பிணைப்பினை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கவின்கலை மன்றத்தினரால் 'வாழ்வும் இசையும்' என்னும் நாட்டார் ஆடல் பாடலை மையமாகக் கொண்ட நிகழ்வானது நடன ஆசிரியர் ராமதாஸின் நெறியாழ்கையில் ஆற்றுகைப்படுத்தப்பட்டது.

'வாழ்வும் இசையும்' என்னும் நிகழ்வினை கண்ணுற்ற போது நாட்டார் ஆடலும் பாடலும் இசையும் எவ்வாறு மனித வாழ்வியலில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்ற தரிசனத்தை எமக்கு தந்த நிகழ்வாக இதனை நோக்கலாம்.

இந் நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு நாட்டார் ஆடலும் இசையும் மனித வாழ்வியலில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறைமையினை நாம் ஆராய்ந்து நோக்கலாம்.

உலகின் அனைத்துப் பண்பாடுகளிலும் ஆதிகாலத்திலிருந்து களிப்பூட்டும் அம்சங்களில் நடனமும் இசையும் முக்கிய பங்கு வகித்துள்ளது. ஆதிகாலத்தில் உடல்மொழி ஊடாக மனிதர்கள் கருத்தினை வெளிப்படுத்தினர். வார்த்தைகள் காணப்படவில்லை. எனவே, நடனம் இவற்றினடியாகவே தோற்றம் பெற்றிருக்கிறது. உடலின் லய நிலைப்பட்ட அசைவு நடனம் ஆகும். இவ் நடன நிலைப்பட்ட ஆடலுடன் இணைந்த ஒன்றாகவே இசையானது காணப்படுகின்றது. ஆடலும் இசையும் இயற்கை நிலைப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. இயற்கை நிலைப்பட்ட கலைகளாக நாட்டார் ஆடலும் பாடலும் விளங்குகின்றது. செவிவழியாக பேணப்பட்ட பேணப்படுகின்ற கலை வடிவமாக விளங்குவதால் வாய்மொழி ஆற்றுகைக் கலை என அழைக்கப்படுகின்ற சிறப்பிதற்குரியது.

நாட்டார் இசையாகிய கிராமிய இசை கிராமங்களில் வசிக்கும் சாதாரண மக்கள் தங்களுக்கு என்று வகுத்துக்கொண்ட ஒருவகை இசையாகும். இவற்றுக்கு நாடோடி இசை நாட்டுப்பாடல்கள் என பெயர் உண்டு. தொட்டில் முதல் சுடுகாடு வரை கிராமப் பாடல்கள் காணப்படுகின்றன.

தமிழ்ச் சூழலில் வளர்ச்சி பெற்ற இசை தமிழிசை ஆகும். தமிழர்களின் செவ்விய இசை முறைமையைக் குறிக்கிறது. தாலாட்டில் இருந்து ஒப்பாரி வரை தமிழர் வாழ்வினுடைய ஒவ்வோர் பருவத்திலும் இசை முக்கியமான கூறாக விளங்குகிறது. இயல், இசை, நாடகம் என தமிழை முத்தமிழாக பாகுபடுத்தும் மரபு உண்டு. இசைக்கு முன்னுரிமை சிறப்பு தொன்றுதொட்டு தரப்பட்டுள் ளது.



நாட்டார் பாடல் என்பது அதன் உருவகத்தில் இல்லை. அதன் மரபு வகையில் உள்ளது. நாட்டார் பாடல்களின் கவர்ச்சியான இசையும் பயிற்சி பெறாதவர்களாலும் பாடக்கூடிய எளிமையான ஸ்தாயி (சுர) எல்லையும், மெட்டும் சாதாரண நடையிலும் கதைசெப்பும் நடையிலும் அமைந்தமையே இவற்றின் சிறப்புக்குக் காரணமாகும். உரத்த குரலில் பாடப்படுவது இதன் மற்றொரு இயல்பு. இப்பாடலை பாடுவோர் தமது அன்றாடப் பாணியுடன் கலந்த பாடல் இசையாக அமைத்து விடுகின்றனர். பெரும்பாலும் எழுதப்படாமல் இருப்பதும் இயல்பாக வழக்கில் பரவி மேம்படுவதாலும் மூத்தோர் பாடிய பாடல்களாலும் இருப்பதால் சிறப்புப் பெறுகின்றது.

நாட்டார் பாடல் அல்லது நாட்டுப்புறப் பாடல் நாட்டுப்புறங்களிலே வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்விலும் தொழிற் களங்களில் பணிநேரங்களில் களைப்பைக் குறைக்கும். நடுகை, ஏற்றம் போன்ற கூட்டுப் பணிகளின் போது பணியாளர்களிடையே ஒத்திசைவை உண்டு பண்ணுவதிலும் இவற்றின் பங்கு முக்கியத்துவமானது. மனித வாழ்வியற் கூறில் உள்ள நாட்டார் ஆடலையும் பாடலையும் 'வாழ்வும் இசையும்' என்னும் நிகழ்வானது புலப்படுத்தி நிற்கின்றது. மனித வாழ்வியலில் குழந்தை பிறக்கின்றது. பிறந்த குழந்தை வளர்ந்து கல்வி கற்கும் பருவத்தை அடைகின்றது. அதன் பின்பு மணப்பருவத்தை அடைகின்றது. இறுதியில் இறக்கின்றது. இவ் வாழ்வியலுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்வியலில் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தொழிலில் ஈடுபடுகின்றான். வாழ்வியற் தொழிற்பாடுகளாக விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களின் போது தமது களைப்பை போக்கவும் தமது சமூக ஒருங்கிசைவை கூட்டவும் செய்கின்றனர்.

மனிதன் சிந்திக்கும் ஆற்றலுடைய பிராணியாவான். இவ்வாறான வாழ்வியல் பருவத்தில் அச்செயற்பாடுகளை பாடல், ஆடல் மூலம் வெளிப்படுத்துகின்றான். அவ் வெளிப்பாட்டுக் கூறில் இசையானது வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையது. இவ்வாழ்வியல் முதன்மை பெறுகின்றது. வாழ்வியல் அடித்தளமான கிராமிய பின் தளத்தை மண்வாசனையை கொண்டுள்ளது.

நாட்டார் இசையும் மனிதனது பண்பாட்டு அடிநாத வாழ்வியல் கூற்றையும் மறுதரிசனத்திற்கு உட்படுத்திய தனிச் சிறப்பு வாய்ந்த ஓர் கலாரசனை நிகழ்வாக வாழ்வும் இசையும் எனும் நிகழ்வானது களம்கண்டுள்ளது. இந் நிகழ்வினை பார்த்தபோது பலவேறு வாழ்வியல் தரிசனங்களை மீள்தரிசனத்திற்கு எமக்கு இட்டுச் சென்றுள்ளது. மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை இசை எவ்வாறு வாழ்வியலோடு ஒட்டி உள்ளது என்பதை இந் நிகழ்வு ஊடாக தரிசனத்திற்கு உட்படுத்தியிருந்தது.

(தொடரும்)

## ஆன்மிக ஓசை

அன்பே ஆண்டவன். அவன் ஆனந்த ஜோதியாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான்.

- வள்ளலார்

கர்த்தர் பெரியவர், மிகவும் புகழப்படத் தக்கவர் அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது

- சங்கீதம்

திண்ணமாக இறைவன் (அல்லாஹ்) பாவ மன்னிப்பு கோருதலை ஏற்றுக்கொள்பவன் கருணை மிக்கவன்

- திருக்குர்ஆன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண் 8 இல் பிறந்தவர்களுக்குரிய பலன்கள் - சனி

8 ஆம் எண்ணின் ஆதிக்கத்துக்குரிய சனி பகவான் ஒருவர் தன் மற்ற கிர கங்களின் தன்மையைக் கவர்ந்து ஒருவன் மற்ற ஜென்மம் வரை தொடர்ந்து செய்த வினைகளை ஆராய்ந்து அவனது செயல் களுக்கு ஏற்ப முதலில் தீய பலன்களை யும் பின்பு நல்ல பலன்களையும் தவறா மல் கொடுத்துவிடுகிறார்! மற்ற நவக் கிரகங்களைப் போல் சனீஸ்வரரை ப்ரீதி செய்து, எளிதில் இவரது தண்டனை யிலிருந்து தப்ப முடியாது!

8 ஆம் எண்ணில் பிறக்கும்போதே, மனி தன் விதியில் வசப்படுகிறான் 8 ஆம் எண பிறவி எண்ணாக வரும் போது வாழ்க்கை யில் கடும்போராட்டத்தையும் உடலில் அல்லது மனத்தில் ஏதாவது சிறிய நோயையும் கொடுத்து விடுகிறது.

அவனது சொந்தங்கள், உறவுகள், நண்பர்கள் அனைவரிடமும் கெட்ட பெயர் அல்லது அவமானம் அடைய நேரிடுகிறது! பின்பு அவனை தன்வழியே போராடும் குணத்தை எண் 8 வாரி வழங் குகிறது! புதிய சூழ்நிலை, புதிய மனி தர்கள், புதிய ஊர் என்று ஒரு புதிய அற்புத வழியைத் திறந்து விடுகிறது! எனவே மக்களும், தங்களது கடுமையான உழைப் பால் வாழ்க்கையின் உச்சியை 45 வயதுக்கு மேல் எப்படியும் அடைந்து விடு கிறார்கள். இதுவே அனுபவ உண்மை ஆகும்.

பள்ளியில் தனது போதனையாலும் தேவைப்பட்டால் தண்டனையாலும் ஒரு மாணவனைச் சீர்திருத்தும் ஆசிரியப் போன்றவரே சனீஸ்வரராவார். எனவே 8 ஆம் எண் விரும்பத் தக்கதேயன்றி வெறுக்கத்தக்கதன்று!

சில அன்பர்கள் கோடீஸ்வரர்கள் குடும் பத்தில் பிறந்திருப்பார்கள். இவர்கள் என்னதான் வசதி மிகுந்த நிலையில் வாழ்ந்திடினும், வண்டுகள் துளைத்த மாங்கனியைப் போல் உள்ளக் குடைச்சல் கள் நிறைந்தவர்கள்! மனத்தில் ஏதாவது ஒரு சோகத்தையும், வியாதியையும் வைத் துக் கொண்டு, மனதில் நிம்மதியில் லையே என்று அலைவார்கள். 'பாசமாவது ஒன்றாவது. அது வீதியில்தான் கிடைக் கிறது' என்று புலம்புவார்கள்.

ஏதாவது ஒரு பெரிய குறை அல்லது

**பாமுஜி**

குறைபாடு மனதை அரித்துக்கொண்டே இருக்கும். குழந்தையில்லை, மனைவி யால் இன்பமில்லை. நண்பனால் சுக மில்லை என்று எதையாவது நினைத்துத் தங்களை வருத்திக் கொள்வார்கள்.

8 ஆம் எண்ணில் பிறந்த அதிர்ஷ்டசாலி கள் (சனி வலிமை நல்ல நிலையிலிருந் தாலும்) பெருத்த தனவான்களாகவும், பல் வேறு தொழில்களை உடையவர்களா கவும், நல்லவர்களாகவும் இருப்பார்கள்! தியாகிகளாகவும் அருளாளர்களாகவும் சிறந்த நீதிபதியாகவும் பேராசிரியர்களா கவும், அமைச்சர்களாகவும், உயர் அதி காரிகளாகவும், கோடீஸ்வரர்களாகவும் இருப்பார்கள்.

ஆனால், மேற்கொள்ள துர்ப்பலன் களைக் கண்டு வாசகர்களே பயப்பட வேண்டாம்! 8 ஆம் எண்காரர்களும் அதிர் ஷ்டம் மிகுந்த வாழ்க்கை வாழ வேண்டு மெனில் தங்களது பெயரினை மிகவும் ஆராய்ந்து நல்ல பெயர் ஒலியிலும் பெயர் எண்ணிலும் வைத்துக் கொண்டால் தங்களது கெட்டவிதியினைக்கூட மாற்றி விட முடியும்! பல அன்பர்கள் பெயரை சீர்படுத்தி பலனடைந்துள்ளார்கள்.

தெய்வ நம்பிக்கை இவர்களிடம் தீவிர மாகவே உண்டு! ஒன்றில் கடவுளே இல்லை! என்று வாதிடுவார்கள். அல்லது கடவுளே கதி! என்று இறைவனை நம்புவார்கள். தங்கள் நல்லதென்று நினைத்து, எடுத்துச் செய்கின்ற காரியங் களை எவ்வளவு எதிர்ப்புகளும் தடை களும் வந்தாலும், அவைகளைப பற்றிக் கவலைப்படாமல் செய்து முடிக்கும் வலிமை இவர்களுக்கு உண்டு. ஓரளவு பிடிவாதகுணம் நிறைந்தவர்கள். இவர்கள் மேற்பார்வைக்குக் கடின மனமும் பிடி வாதமும் உடையவராகத் தோன்றினா லும், சமூகத்தில் பாதிக்கப்பட்டோரைக் கண்டால், அவர்களை ஆதரித்து வாழ்க் கையளிக்கத் தயங்கமாட்டார்கள். பலாப் பழம் போன்ற குணமடையவர்கள்.

பொது சேவைக்கான முயற்சிகள் எடுத் துக் கொண்டிருப்பார்கள். தங்களது வாழ்க்கையிலும், எப்போதும் உழைத்துக் கொண்டேதான் இருப்பார்கள். தங்களின் வசதிகளையும், பதவிகளையும், உறவினர் களையும் திடீரென ஒருநாள் ஒதுக்கி விட்டு, மக்கள் சேவைக்கென ஓடிச் செல்பவர்கள் இவர்கள்தான்.

8 ஆம் எண்காரர்கள் பெரும் தத்துவ ஞானிகளாகவும், மனிதர்களுக்கு வாழ்க் கையில் வழிகாட்டியாகவும் விளங்குகிறார் கள்

இவர்கள் 1, 4 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களை மணந்து கொள்ளலாம். 8ரும் எண்வரும் பெண்ணை மட்டும் திரு மணம் செய்யக்கூடாது! 2, 7 வரும் பெண் களைத் தவிர்த்துவிட வேண்டும். 9 ஆம் எண் பெண்கள் இவர்களை அடக்கி ஆள நினைப்பார்கள். திருமணம் செய்யும் நாளின் கூட்டு எண் 1, 6 வந்தால் மிகவும் நல்லது.

### 8 ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் மிகுந்த தெய்வ நம்பிக்கை உடையவர்கள். அமைதியான வாழ்க்கை உண்டு. மதப்பற்று அதிகம் உண்டு. இவர்கள் பொருளாதாரத்தில் சிறந்த அறிஞர்களாக இருப்பார்கள். கற்பனை வளம் மிக்கவர்கள். நல்ல சிந்தனையாளர் கள். அடுத்தவர்களைத் தங்களது கருத்து களுக்கு உட்படுத்தும் திறமை கொண் டவர்கள்.

சமூசேவையில் மிகவும் நாட்டம் இருக் கும். கடுமையான உழைப்பாளிகள். பெரும் சாதனை புரிவார்கள். நலிவுற்ற வர்களைக் கைதூக்கிவிடும் நல்ல இயல்பி னர். தனித்துச் செயல்புரியும் ஆற்றல் உடையவர்கள்.




"பாதி ஆபரோஷன் நடந்துகொண்டி ருந்தபோது கரண்ட் கட்டாயிடுச்சு"
"பேஷண்ட் பிழைச்சார் என்று சொல்லு!"




"அவர் பயங்கர சோதிடப் பைத்தியம்!"
"அப்படியா?"
"ஆமாம், சோதிடரைப் பார்க்கப் போகக் கூட வேறொரு சோதிடரைக் கேட்டு விட்டுத் தான் போவார்!"




"நான் நடிச்ச படத்தைப் பார்த்து விட்டு எல்லாரும் வாயைப் பிளக்கி றாங்க!"
"ஆமாம், வாயைப் பிளக்காம கொட் டாவி விட முடியாதே!"




"குப்புசாமி இன்றைக்கு லீவாம் அவரு டைய வேலையையும் உங்களைச் செய் யச் சொன்னார் மனேஜர்!
"சரி குப்புசாமியின் மேசையையும் இழுத் துப் போட்டுத் தூங்குகிறேன்!"

### 17 ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் மிகுந்த சோதனைகளைச் சந்திப்பவர்கள். சலிக்காமல் உழைக்கும் இயல்பினர். எப்படியும் இறுதியில் பெருமைமிகு வாழ்க்கையை அடைவார் கள். நுண்ணிய அறிவு படைத்த சாமர்த் தியசாலிகள். குற்றங்களை மன்னிக்கும் கருணை மனமும் உண்டு. ஆன்மிக வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும், அரசியலிலும் நிலையான இடத்தைப் பிடித்து விடுவார்கள். இவர்கள் வறுமை யான குடும்பத்தில் பிறந்தாலும், தங்கள் உழைப்பினால் பெரும் செல்வத்தைச் சம் பாதிக்கும் யோகமும் உண்டு. பணம் சேர்ப்பதில் சமர்த்தர். துணிந்து எடுக்கும் சில முடிவுகள் தோல்வியும் அடையும். இருந்தாலும் அதை வெளியே தெரியாமல் வெற்றிக்கு மாற்றும் சாதுர்யம் உண்டு. இவர்களே பெருந் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்துவார்கள். தங் களுக்கு வரும் தடைகளையும், சோதனை களையும் துவம்சம் செய்யும் துணிவு படைத்தவர்கள்.

### 26 ஆம் திகதி பிறந்தவர்கள்

பொருளாதார விஷயத்தில் குறைபாடு உடையவர்கள். முன்னோர் சேர்த்து வைத்த சொத்துகள் விரயமாகும். பண விரயங்களும் அதிகம் உண்டு. இவர்கள் அடுத்தவர்களால் அடிக்கடி ஏமாற்றம் அடைவார்கள். இருப்பினும் மனோ தைரியம் மிக்கவர்கள்.

எப்போதும் உயர்வான சிந்தனைகள் நிறைந்தவர்கள். எப்படியும் உயர்ந்த பதவி/ தொழிலை அடைய வேண்டும் என்று கடுமையாக உழைப்பவர்கள் இவர்கள்தான். பிறரால் அடிக்கடி வீண்பழி சுமத்தப்படுவார்கள். கற்பனைச் சக்தியும், கூர்மையான அறிவும் உண்டு. விதியின் சதியால் அடிக்கடி தோல்விகளைச் சந்திப்பார்கள்.

இருப்பினும் இறுதிக் காலத்தில் பொன்னும்இ பொருளும், கீர்த்தியும் கிடைத்து விடும். இவர்கள் மக்கள் அனைவரையும் எந்த வித்தியாசமின்றிச் சமமாக நேசிப்பார்கள் காதல் விவகாரங் களில் சிக்கல்கள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வு பற்றிய விழிப்புணர்வு உயர்கல்விக்கோர் திறவுகோல்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆங்கிலமொழியில் எதனையும் எளிதாகவும் துல்லியமாகவும் விளங்கிக்கொள்ளும், பயன்படுத்தும் முழுமைத் திறன் பெற்றவராவார்.

**08-Very Good User** ஆங்கில மொழியில் ஆளுமை உள்ளவர். ஆனால் மிகத் துல்லியமான ஆளுமை இல்லை. சிற்சிறு தவறுகள் ஏற்படுகின்றன. தமக்கு பரீட்சயம் இல்லாத விடயங்களில் தவறுதலாக புரிந்துகொள்வதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் ஆங்கில மொழியில் சிக்கலான விவாதங்களை புரிந்து கையாளும் திறன் பெற்றவர்.

**07- Good User** ஆங்கில மொழியில் ஆளுமை உண்டு. ஆனால் அவ்வப் போது துல்லியமல்லாத, பொருத்தமற்ற பயன்பாடுகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் தவறாகப் புரிந்து கொள்ளுதல் போன்றவை ஏற்படுகின்றன. இருப்பினும் பொதுவாக சிக்கலான மொழிப் பயன்பாட்டை கையாளக்கூடியவர். ஆங்கில மொழியிலான விவாதங்களைப் புரிந்து கொள்ளக் கூடியவர்.

**06-Competent User** ஆங்கில மொழியில் பொதுவான ஒரு ஆளுமை உண்டு. இருப்பினும் சில துல்லியமற்ற பயன்பாடுகள், பொருத்தமற்ற பயன்பாடுகள், தவறாக புரிந்துகொள்ளல் போன்றன உள்ளன. தமக்கு பரீட்சையமான சூழல்களில் சிக்கலான மொழிப் பயன்பாட்டை புரிந்துக்கொள்ளும், பயன்படுத்தும் திறன் உண்டு.

**05 - Modest User** ஆங்கிலமொழி ஆளுமை ஓரளவு உண்டு. தவறுகள் பல ஏற்படுகின்றன. ஆனால் பலசந்தர்ப்பங்களில் பொருளை மேலோட்டமாக புரிந்துக்கொள்ளும் திறன் உண்டு. தமது துறையில் அடிப்படையான தொடர்புகளை கையாளக்கூடியவர்.

**04 - Limited User** பழக்கமான சூழல்களுக்கான அடிப்படை மொழி திறன் உண்டு. புரிந்துக்கொள்வதிலும், தமது கருத்தை வெளிப்படுத்துவதிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிக்கலான மொழியமைப்பை பயன்படுத்த முடியாதவர்.

**03 - Extremely Limited User** மிகவும் பரீட்சையமான சூழ்நிலைகளில் மட்டும் பொதுவான பொருளை புரிந்துக்கொள்ளக் கூடியவர். தொடர்பாடல்களின் போது அடிக்கடி இடைணிறிவு ஏற்படுகின்றது.

**02 - Intermittent User** மிகவும் அடிப்படையான ஒரு சில சொற்களை தமக்கு பழக்கப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதைத் தவிர, ஆங்கில மொழியில் தொடர்பாடல்கள் எதனையும் மேற்கொள்ளல் இவருக்கு சாத்தியமில்லை. ஆங்கில மொழியில் பேசுதல், எழுதுதல், புரிந்துக்கொள்ளல் போன்ற வற்றில் மிகவும் கடினப்படுபவர்.

**01 - Non User** அடிப்படையில் ஆங்கில மொழியை பயன்படுத்தும் திறன் அற்றவர். ஒருசில ஒற்றைச் சொற்கள் மட்டும் தெரியும்.

**00 Absent/ No Original English User** மதிப்பீடு செய்யும் அளவில் தகவல்கள் அளிக்கப்படவில்லை.

மேலும், அயெல்ஸ் பரீட்சைக்குத் தோற்றவிரும்புபவர்கள், தாம் வாழும் நாட்டில், தமக்கு அன்மித்த நகரில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு மாதமும் நான்கு அல்லது ஐந்து தேர்வுகள் நடாத்தப்படுகின்றன. தேர்வுக்கான விண்ணப்பப் படிவத்தினை பரிட்சையாளர் தனக்கு அன்மித்த அயெல்ஸ் தேர்வு மையத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது நேரடியாக கீழே பதிவிறக்கிக்கொள்ளலாம்.

யாழ். நகரத்தில் கூட அவ்வாறான வசதிகள் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

இப் பரீட்சைக்கான அதிகாரப்பூர்வ இணையத்தளம் ***http://www.ielts.org/*** என்பதாகும். அயெல்ஸ் தேர்வுக்கு தயார் செய்துக் கொண்டிருப்போருக்கு இவ்வாறான தகவல்கள் நிச்சயம் உதவியாக இருக்கும். **(முற்றும்)**

அபி.தேவகுமார்

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [31.12.10 முதல் 06.01.11 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு அனுகூலமான நற்பலன்கள் அமைகின்ற நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும். தொழில் நிலையில் எதிர்பார்க்கும் வெற்றிகளை பெற முடியும். குடும்பத்தில் நல்ல மகிழ்வும் குதூகல நிகழ்வும் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும் பலனுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு. பெண்களுக்கு மன நிறைவுகள் உண்டு.



### இடபம்

இடபராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு சிறப்பான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சிறிய போராட்ட நிலைகள் இருக்கும். தொழில் நிலையில் வேலைப்பளு சற்று அதிகமாக அமையும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலன் அமையும். மாணவர்களுக்கு கல்வி நிலை சிறப்பாக ஏற்படும். பெண்களுக்கு அனுகூல நிலையுண்டு.



### மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். சகோதரர் வழியில் சற்று பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். தொழில் நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் அமையும். குடும்ப நிலையில் மிகவும் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையிருக்கும். தேவையற்ற அலைச்சல் நிலை சற்று அதிகமாக இருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு மனசஞ்சலம் இருக்கும்.



### கடகம்

கடகராசி அன்பர்களுக்கு நற்பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றங்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் எதிர்பார்ப்புகள் நிறைவேற பலனுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் குதூகலமான நிலைகளும் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு. பெண்களுக்கு மன நிறைவுகள் உண்டு.



### சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலாபலன்கள் அமையும். உறவினர்களின் மூலம், பிள்ளைகளின் மூலம் நன்மைகள் ஏற்படும் நிலையுண்டு. தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றம் அமையும். பணவரவு திருப்திகரமாக அமையும் நிலையுண்டு. தொழில் சார்ந்த பதவி உயர்வு நிலைகள் ஏற்பட வாய்ப்புண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். மாணவர்களுக்கு நன்மையுண்டு. பெண்களுக்கு அனுகூலம் உண்டு.



### கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் அலைச்சல் இழுபறி நிலையிருக்கும். எடுக்கும் முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். குடும்பத்தில் சற்று மனச்சஞ்சலம் இழுபறி நிலைகள் இருக்கும். உடல் நிலை சுகயீனம், மருத்துவ செலவுகள் ஏற்படும் நிலையுண்டு. மாணவர்களுக்கு நல்ல வெற்றியுண்டு. பெண்களுக்கு மனசஞ்சல நிலையிருக்கும்.



### துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு இழுபறி தாமத நிலை இருக்கும். தொழில் நிலையில் வேலைப்பளு அதிகமாயிருக்கும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். குடும்ப நிலையில் சுமாரான மத்திமமான பலன்களே ஏற்படும். கடன் நிலைகளில் மத்திமமான இழுபறி நிலை இருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும். பெண்களுக்கு வெற்றி உண்டு.



### விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் மகிழ்வும் குதூகல நிகழ்வுகளும் ஏற்படும் நிலையுண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். உறவினர்களின் மூலம் அனுகூலமான பலன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலையிருக்கும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு. பெண்களுக்கு மனமகிழ்வு உண்டு.



### தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலையில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். உடல் நிலையில் சுகயீனம், மருத்துவ செலவு ஏற்படும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான நிலை இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப ஓரளவிற்கு அமையும். மாணவர்களுக்கு மத்திம பலன் உண்டு. பெண்களுக்கு நன்மையுண்டு.



### மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் வேலைப்பளு அதிகமாய் இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எதிர்பாராத வகையில் செலவீனங்கள் அதிகம் அமையும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன் ஏற்படும் நிலையுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு மனச் சஞ்சலமுண்டு.



### கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் உண்டு. தொழில் நிலை முன்னேற்றங்கள் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமாக அமையும். குடும்பத்தில் ஓரளவிற்கு வெற்றிகள் ஏற்படும் பலனுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு. பெண்களுக்கு மனமகிழ்வு உண்டு.



### மீனம்

மீனராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். தொழில் சார்ந்த பிரயாணங்கள் அமையும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு நற்பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு நன்மை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இதன் மூலம் சடணாகரான் என்னும் சிற்றரசன் திஸபுரம் என்ற இடத்தை மையமாகக் கொண்டு ஆட்சி செய்த காலத்தில் இந்நாணயத்தை வெளியிட்டான் என்பது தெரிகிறது (படம்-1). இங்கு கிடைத்த இன்னொரு நாணயத்தில் 'சுடணாகஸ' என்ற பெயர் காணப்படுகிறது. இது சுடணாகனுடைய நாணயம் என்ற பொருளில் உள்ளது (படம்-5). இது தமிழ் மயப்படுத்தப்பட்ட பெயர் என்பதற்கு சில ஆதாரங்களைக் காட்டலாம். வீரசோழியத்தில் 'ழ' வுக்குப் பதிலாக 'ட' பயன்படுத்தப்படலாம் என்ற மரபு காணப்படுகிறது. தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் கூட 'ழ' வுக்குப் பதிலாக 'ட' பயன் படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. இதனால் தமிழில் 'சோழ' என்பதே இங்கு 'சுட' என எழுதப்பட்டுள்ளது எனலாம். ஏனெனில் அசோகனது இரண்டாவது பாறைச் சாசனத்தில் கூட சோழர் 'சோட' என்றே எழுதப்பட்டுள்ளது (Hultzsch 1969: XXXIXX). மேலும் இப்பெயர் இலங்கையில் தமிழருக்குரிய பெயராகவும் இருந்துள்ளதென்பதற்கு கிழக்கிலங்கையில் சேருவில் என்ற இடத்தில் கிடைத்த பிராமிச் சாசனத்தில் வரும் 'தமிழ்ச்சுட' என்ற பெயர் ஆதாரமாக உள்ளது (Seneviratne 1985:52). முன்னர் கூறப்பட்ட நாணயத்தைப்போல் இந் நாணயத்திலும் 'நாக' என்ற பெயர் 'ணாக' என்றே எழுதப்பட்டுள்ளது. இம்மரபு தமிழகப் பிராமிச் சாசனங்களில் பின்பற்றப்பட்டுவந்ததற்கு அழகர்மலை போன்ற இடங்களில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களில் ஆதாரம் காணப்படுகின்றது. மேலும் வடமொழிக் 'க'வுக்குப் பதிலாக இந்நாணயத்திலும் தமிழுக்குரிய 'க' பயன்படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. நாணயத்தின் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள உருவத்தைப் பேராசிரியர் போபேஆராச்சி சிங்கம் என அடையாளப்படுத்துகிறார் (Bopearachchi 1999:57). ஆனால் சிங்கத்தில் காணப்படும் குஞ்சத்தை இந்நாணத்தில் காண முடியவில்லை. இதனால் இவ்வுருவத்தை

## மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்

புலியென எடுப்பதே பொருத்தமாகத் தெரிகிறது. சங்ககாலம் தொட்டு சோழ மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் புலி அவர்களது அரச இலட்சனையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும் போது தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்த நாகச் சிற்றரசர்களும் தமிழகத்துடன் கொண்டிருந்த பாரம்பரிய உறவின் காரணமாக சோழர் பயன்படுத்திய புலிச் சின்னத்தை ஒருவேளை தமது நாணயங்களிலும் பொறித்தனரோ எனச் சிந்திக்கத் தூண்டுகிறது. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட நாணயங்கள் இலங்கைத் தமிழரின் அரச உருவாக்கம் பற்றிய ஆய்விலும், அதில் நாகருக்கிருந்து தொடர்பை அறிந்து கொள்வதிலும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை. ஏறத்தாழ ஒரே காலப்பகுதிக்குள் வேறுபட்ட பெயர்களில் தமிழ் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளமை தென்னிலங்கையிலும் செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்தற்குச் சான்றாக அமைகின்றன. இதன் காரணமாகவே இங்கு சிற்றரசுகள் தோன்றியதெனக் கூறலாம். இவ்வாறு கூறுவதை மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகக் கருதமுடியாது. ஏனெனில் இத்தமிழ் நாணயங்கள் புழக்கத்திலிருந்த காலகட்டத்தில்தான் அநுராதபுரத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனுக்கு எதிராக மஹாகமையில் இருந்து படையெடுத்துச் சென்ற துட்டகாமணி தென்னிலங்கையில் 32 தமிழ்ச் சிற்றரசர்களை முதலில் வெற்றி கொள்ள நேரிட்டதாக மஹாவம்ஸம் கூறுகிறது (Mahavamsa xxv:75). இவ்வரலாற்றுக் குறிப்பு இங்கு கிடைத்த தமிழ் நாணயங்கள் தமிழ்ச் சிற்றரசர்களால் வெளியிடப்பட்டதென்பதற்கு மேலும் ஒரு சான்றாக அமைகிறது.

இருப்பினும், தென்னிலங்கையில் பிராகஹருத மொழிப் பேரினக்குழுக்களின் எழுச்சியால் அங்கு நாரூ மரபை முன்னிலைப்படுத்தும் பெயர்கள்' அரசியலிலும், சமூகத்திலும் இருந்து படிப்படியாக மறைந்த போது, அவற்றைப் பாதுகாத்து நீண்ட காலம் நீடித்து நிலைக்கச் செய்த பெருமை நாகதீபத்திற்கு உண்டு. இதற்குப் பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களை ஆதாரமாகக் காட்டலாம். கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் மகோதன், குலோதரன் ஆகிய நாக மன்னர்களிடையே நடந்த சிம்மாசனப் போராட்டத்தை புத்தர் தீர்த்து வைத்ததாக மஹாவம்ஸம் கூறுகிறது (ahavamsa I:48-51). இதேவளை ஸம்மோஹவிநோதனீ என்ற பாளி நூலில் வரும் கதையில் நாகதீபத்து ஆட்சியாளன் 'தீபராஜ' என்ற விருதைப் பெற்றிருந்தான் எனக் கூறப்படுகிறது. இத்தீபராஜ என்ற பெயரே பின்னர் தமிழில் தீபத்தரையன் என மாறியதாகக் கூறப்படுகிறது (இந்திரபாலா 2006:191-192). மிகிந்தலையில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிச் சாசனம் ஒன்று தீபராஜா என்ற மன்னன் பற்றிக் கூறுகிறது. இவன் நாகதீபத்தில் ஆட்சி செய்த மன்னனாக இருக்கவேண்டும் என பேராசிரியர் பரணவிதானா கூறுகிறார் (Paranavithane 1970: lxiii). இலங்கையில் நாக இனக்குழுவின் தோற்றமும், அரச உருவாக்கமும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவானவை என்ற வலுவான கருத்துக் காணப்படுகிறது (Deraniyagala 1992:635, Indrapala 2004:173). வட இலங்கையில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்தற்கான தொல்லியற் சான்றுகள் கந்தரோடை, ஆனைக்கோட்டை, பூநகரி, சாட்டி, மன்னார் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன



படம்-6

(Seneviratne 199 : 99 -131, Ragupathy 1987, Indbapala 20 5, Sitrampalam 2004:231-282, புஷ்பரட்ணம் 993, 2005). இங்கெல்லாம் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் குறுநில அரசுகள் தோன்றியிருக்க வாய்ப்புண்டு.

இதற்கு ஆதாரமாக ஆனைக்கோட்டை அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை மோதிரத்தை குறிப்பிடலாம்.. இம்மோதிரத்தின் மேற்பகுதியில் மூன்று குறியீடுகளும், கீழ்ப்பகுதியில் மூன்று பிராமி எழுத்துக்களும் காணப்படுகின்றன (படம்-6). இதன் பிராமி எழுத்துக்களை அறிஞர்கள் 'கோவேத' அல்லது 'கோவேத்' என வாசித்துள்ளனர் (Ragupathy 1987:2002, Indrapala 2005: 324-325). (தொடரும்)

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கன்னங்கரா இன்றிருந்தால் கதறியல்லோ தானழுவார் (ஒப்பாரி மெட்டு)



இலவசக் கல்வியல்லோ -ராசாவே
எங்களுக்குத் தேவை யென்று
புண்ணியவான் கன்னங்கரா -போட்ட
இப்பிச்சையாலே
ஏழை எளியோர்கூட - ராசாவே
ஏற்றமாய்ப் பதவி பெற்றார்.

முன்பள்ளியிற் சேர்வதற்கோ
- ராசாவே
மூவாயிரத்திற்மேற் தேவையடா

முதலாந் தரத்திற் சேர இப்போ
முப்பதாயிரமாச் சுதடா
ஆறாந் தரத்திற் சேர -ராசாவே
அறுபதாயிர மாகுதடா.

கட்டவுட்டைத் தாண்டினாலும்
- ராசா நீ
கட்டவேண்டும் காசையடா
சுற்று நிருபங்களோ என் ராசாவே
சுற்றிச் சுற்றி வந்தாலும் -ராசா அவர்
[illegible]கரைகயல்லோ.

சூட்சும மாய்த் தான் கரைப்பார்.
கன்னங்கரா இன்றிருந்தால்
- என்ரை ராசா
அவர் கதறியல்லோ தானழுவார்.
அவரிட்ட பிச்சை யின்று
அநியாய மாகுதடா
ஏழை யெளியோரெல்லாம்- ராசாவே
என்னதான் செய்யுமடா.

**- கவிமணி அன்னைதாஸன் -**
**ஊரெழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு



தெல்லிப்பழை மாகாணமட்டப்பாடசாலைகளுக்கிடையிலான 15 வயது சதுரங்கப் பிரிவில் சம்பியனாகிய அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மாணவர்களுடன் சதுரங்க பொறுப்பாசிரியர் சுமந்திரன் மற்றும் ஆசிரியர்களையும் அதிபரையும் படத்தில் காணலாம். (படம்:- தெல்லிப்பழை நிருபர்)




நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.உதய குமார் மங்களவிளக்கேற்றுவதையும் வித்தியாலயத்தின் அதிபர் ந.தேவராஜா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)




நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவில் இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்ச்சியைப் படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)



பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளி விழாவில் இடம் பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வைப் படத்தில் காணலாம். (படம்:- பளை நிருபர்)




வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கென சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் என்ற தலைப்பில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்தரங்கை நடத்துவதையும் அருகில் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த உப அதிபர் ம.அகிலநாயகம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)



தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகம் நுணாவில், மீசாலை ஆகிய கிளை நூலகங்களை இணைத்து சக்தி அம்மன் வித்தியாலய விசேட தேவையுடைய மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நிகழ்வில் நூலகர்கள், அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களை படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகக் கிண்ணத்தின் எதிர்பார்ப்புக்கள்

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா அண்மித்துக் கொண்டிருக்கின்ற இன்றைய சந்தர்ப்பத்தில் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றிவிட வேண்டும் என்ற கனவுடன் உலக கிரிக்கெட் அணிகள் வலம்வந்து கொண்டிருக்கின்றன. உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு தம்மை தயார்படுத்திக் கொள்ளும் முகமாக அனைத்து அணிகளும் தீவிர பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

அந்த வகையில் போட்டி நிலவுகின்ற முன்னணி அணிகளுக்கிடையே இடம்பெற்று வருகின்ற கிரிக்கெட் தொடர்கள் அந்தந்த அணிகளுக்கு பயிற்சிப் போட்டித் தொடர்களாகவே அமைந்திருக்கின்றன.

தென்னாபிரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளுக்கிடையே வழமையாகவே உலகக் கிண்ண தொடர்களின்போது போட்டித்தன்மை காணப்படுகின்ற போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியானது ஒரு சில அணிகளுக்கு அதிகூடிய அழுத்தங்களை கொடுக்கக் கூடியதாகவே அமைந்துள்ளது.

தற்போது வரலாற்றுப் புகழ்மிக்க ஆஷஸ் கிண்ணத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் அவுஸ்திரேலியாவின் செயற்பாடுகள் குறிப்பிட்டுக் கூறும் அளவில் இல்லை. அவுஸ்திரேலியாவின் கண்மூடித்தனமானதும் நிதானமற்றதுமான ஆட்டங்கள் கிரிக்கெட் உலகின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டி உட்பட விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் அவுஸ்திரேலியா இங்கிலாந்திடம் தடுமாற்றம் கண்டு வருகின்றது. மூன்றாவது போட்டியை அவுஸ்திரேலியா வென்றிருந்த போதிலும் ஏனைய போட்டிகளில் அந்த அணிக்கு கடுமையான சவால்கள் இருந்ததை மறுக்க முடியாது.

அந்த வகையில் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்ற உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு தன்னை எவ்வாறு தயார்படுத்திக் கொள்ளப் போகின்றது என்பது ரசிகர்களிடத்திலும் கிரிக்கெட் வல்லுனர்களிடத்திலும் பெருத்த கேள்விக்குறியாக அமைந்துள்ளது.

இதேவேளை, இங்கிலாந்தை பொறுத்தவரை அந்த அணியானது பந்துவீச்சிலும் சரி, களத்தடுப்பு மற்றும் துடுப்பாட்டம் ஆகிய அனைத்திலும் சிறந்து விளங்குகின்றது. இன்றைய கால கட்டத்தில் உலகக் கிண்ணப் போட்டிகளில் ஏனைய அணிகளை எதிர்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாகவே அந்த அணி உணர்த்தி நிற்கின்றது.

இது இவ்வாறு இருக்க கிரிக்கெட்டில் அண்மைக் காலமாக அதிர்ஷ்ட நாயகனாக வலம் வருகின்ற இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேந்திர சிங் டோனி தனது இளம் வீரர்களை கொண்ட அணியை செம்மையாக வழி நடத்தி வருவதுடன் தொடர்ச்சியான வெற்றிகளையும் குவித்து வருகின்றார். ஆனாலும் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அந்த மண்ணில் தடுமாறி வருகின்றது. பந்துவீச்சில் சுமாராக செயற்படக் கூடியதாக இருந்தாலும் தென்னாபிரிக்க மண்ணில் இந்திய அணியினால் பந்துகளை எதிர்கொள்ள முடியாதிருப்பது தொடர்கதையாகவே அமைந்துவிட்டது. இருப்பினும் இந்திய அணியில் அண்மைக் கால செயற்பாடுகள் உலகக் கிண்ணத்தை எதிர்கொள்வதற்கு போதுமானதாக அமைந்துள்ளன என்பதே உண்மையாகும்.

மேலும் தென்னாபிரிக்காவை பொறுத்தவரையில் அந்த அணி நல்ல நிலையில் இருக்கின்றது. உலகக் கிண்ணப் போட்டித் தொடர் அதற்கு சவாலாக அமையும் என்பது பொறுத்தமற்றதாகும். இதேபோல் நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் உலகக் கிண்ணத் தொடரை எதிர்கொள்வதற்கு நிறையவே உழைக்க வேண்டிய நிலையில் உள்ளன. இந்த வரிசையில் அவுஸ்திரேலியாவையும் இணைத்துக் கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் தொடர் அந்த அணிகளுக்கு சிறந்த பயிற்சியை பெற்றுத்தரவிருக்கின்ற அதேவேளை, இலங்கையணியின் உள்ளூர் போட்டிகள் அவ்வணிக்கு சிறந்த வழிகாட்டல்களை அமைத்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் ஆசிய கண்டத்தில் அதுவும் சொந்த மண்ணில் முதலாவது போட்டியை நடத்துகின்ற பங்களாதேஷ் அணியானது இளம் வீரர்களை கொண்ட துடிப்பான அணியாக திகழ்ந்து வருகின்றது. அந்த அணியின் துடிப்பு மிக்க ஆட்டங்கள் ரசிகர்களின் எதிர்பார்ப்புக்களை மேலோங்கச் செய்யும் என்பதிலும் சந்தேகமில்லை. அத்துடன் சொந்த நாட்டு ரசிகர்களுக்கு மத்தியில் விளையாடுவதால் அந்த அணி எதிரணிக்கு சவால்களை கொடுக்க காத்திருக்கின்றது.

அதேபோல் இந்தியா மற்றும் இலங்கையிலும் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றமையால் உள்நாட்டு ரசிகர்களின் அமோக ஆதரவு அந்த அணிகளுக்கு இருக்கின்றது. ஆசிய கண்டத்தில் நடைபெறுகின்ற தொடர்களில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய அணிகள் தமது சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்தியே வந்துள்ளன. இந்தியாவில் அதிகமான போட்டிகள் நடைபெறுகின்றமை இந்திய அணிக்கு சாதகமாக அமைந்துள்ளது.

எது எவ்வாறிருப்பினும் கிரிக்கெட் போட்டியை பொறுத்தவரை அதிர்ஷ்டமும் கை கொடுக்க வேண்டும் என்றும் கூறுவதுண்டு. அந்த வகையில் எந்தவொரு அணியையும் குறைத்து மதிப்பிட்டு தீர்மானங்களை எடுத்துவிடவும் முடியாது. அவுஸ்திரேலியா தொடர் தோல்விகளை சந்தித்து வந்தாலும் அந்த அணி எந்த நேரத்தில் எவ்வாறு விஸ்வரூபம் எடுக்கும் என்பதை எவராலும் கணிப்பிட்டுக் கூறுவதற்கு இயலாது. உலகக் கிண்ண வரலாற்றில் இதுவரையில் கிண்ணத்தை வென்றிராத தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் இம்முறை நடைபெறவிருக்கின்ற உலகக் கிண்ணத் தொடரில் சாதனைகளை நிலைநாட்டவிருக்கின்றனவா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இம்முறை இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய ஐந்து அணிகளுக்கிடையில் கடுமையான போட்டித் தன்மை காணப்படும் என்பதில் மாத்திரம் சிறிதளவிலும் ஐயம் கிடையாது.

தொடரின் முதலாவது போட்டியில்-இந்தியாவும் பங்களாதேஷும் டாக்காவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி கோலாகல ஆரம்பத்துடன் சந்திக்கவிருக்கின்றன.






Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday December 31, 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org